11 . 3 . 94

THAYAGAM

# தாயகம்

உண்மை தேடல் 75¢

# பேச்சுவார்த்தைக்கு புலிகள் விருப்பு

## பிரபாகரன் வானொலி உரை

## இலங்கைத் தமிழரைத் தாக்கிய தோல் தலையருக்கு நான்கு வருடச் சிறை

**எந்த தரப்புமே வெல்ல முடியாது ஆரியரத்தின பேச்சு**

**தேர்தலில் மோசடி தமிழ் கட்சிகள் குற்றச்சாட்டு**

**தொண்டமானின் சமாதான முயற்சிக்கு ஜனாதிபதி தடை**

**பத்து புலிகள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர்**

நகரின் மத்தியில்
துரித பணமாற்றுச் சேவை
CD விற்பனையாளர்

Senduran & Co
(416) 962 7397
584 A, Parliament st

*Niru Brand*®
*Niru Brand*®
*Niru Brand*®
*Niru Brand*®
*Niru Brand*®
*Niru Brand*®
*Niru Brand*®
*Niru Brand*®

**தரத்தின் சின்னம்**

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

*Niru* *Niru*

# தரத்தின் சின்னம்
# நிரு பிராண்ட்®
# *Niru Brand*®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர் *Niru Brand*® தயாரிப்புகளே.

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை உறுதிப்படுத்துங்கள்

## போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்

*Niru Enterprises Inc,*

**Tel:(416) 299-4202**

**நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன. உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள் எப்பொழுதும் கிடைக்கக் கூடிய வர்த்தக நிலையங்களை அறியலாம்**

Second class mail Registration No:8435




# பேச்சுவார்த்தைக்கு புலிகள் விருப்பு பிரபாகரன் அறிவிப்பு

மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான தனது விருப்பை பிரபாகரன் தெரிவித்துள்ளார். இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான தனது விருப்பை பகிரங்கமாக பிரபாகரன் தெரிவித்ததாக வடக்கிலிருந்து கொழும்பு வந்தவர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி நிகழ்த்திய வானொலி உரையில் பிரபாகரன் பேச்சுவார்த்தைக்கு தாம் தயார் என்று கூறினார். 'எங்கள் நட்புக்கரங்களை சமாதானத் தூதுக்குழுக்கள் ஊடாக நாங்கள் நீட்டியுள்ளோம். நாங்கள் பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் விருப்புக் கொண்டுள்ளோம்' என்று அவர் கூறியதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சமீபத்தில் கிறிஸ்தவ ஆயர்களின் குழுக்களும் சர்வோதயத் தலைவர் ஆரியரத்தினவும் யாழ்ப்பாணத்தில் புலிகளுடன் பேசியது தெரிந்ததே.

# தொண்டமானின் சமாதான முயற்சிக்கு ஜனாதிபதி தடை

இலங்கையின் இனப்பிரச்சனை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சனையே. அது சகல கட்சிகளுடனுன ஆலோசனையின் பேரில் தீர்க்கப்பட வேண்டியதே தவிர வெளியார் தலையீட்டினால் அல்ல என்று ஜனாதிபதி விஜேதுங்க தெரிவித்திருக்கிறார். கனடாவில் இருந்து ஒரு சிலர் தொண்டமானை சமரச முயற்சிகளில் ஈடுபடும்படி கோரிக்கை விடுத்திருந்தனர். இதன் அடிப்படையில் தொண்டமான் தனக்கு கிடைத்த அழைப்பு பற்றி ஜனாதிபதிக்கு கடிதம் எழுதி அது குறித்து ஜனாதிபதியின் அபிப்பிராயத்தை கேட்டிருந்தார். இதற்கு பதிலளித்த போதே ஜனாதிபதி மேற்கண்ட கருத்தை தெரிவித்திருக்கிறார்.

அப்பாவித்தனமான கனடியக் குழுக்களும் தனியாரும் எடுக்கும் முயற்சிகளை பத்திரிகைகள் தவறுகப் பாவிக்கின்றன என்றும் இது அரசாங்கத்திற்கும் தொண்டமானுக்குமே சங்கடங்களை உருவாக்குகிறது என்றும் ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார். அத்துடன் இலங்கை அரசு எந்த விதமான சமரச முயற்சிகளிலும் ஆர்வம் காட்டவில்லை என்பதை சம்பந்தப்பட்ட கனடியக் குழுக்களுக்கு தெரிவிக்குமாறும் கனடாவிற்கு செல்வதால் இந்தப் பிரச்சனையைத் தீர்க்க எந்த பயனும் அளிக்காது என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

தொண்டமானை அழைத்தவர்கள் பற்றிய விபரங்களை இலங்கை அரசு சமீபத்தில் சேகரித்திருந்தது குறிப்பிடத்தக்கது. தமிழர்களுக்காக குடிவரவு விசாரணைகளில் கலந்து கொள்ளும் சட்டத்தரணி ஒருவரும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் தொண்டமானுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர்.

# இலங்கைத் தமிழரைத் தாக்கிய தோல்தலையருக்கு நான்கு வருடச் சிறை

இலங்கைத் தமிழர் ஒருவரைத் தாக்கிய தோல் தலையர் ஒருவர் நான்கு வருடம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார். தான் மனம் திருந்தி விட்டதாகவும் தனக்கு இன்னொரு சந்தர்ப்பம் தரும்படியும் இனவெறிக்கு எதிராக தான் குரல் கொடுப்பதாகவும் இந்த தோல் தலையர் தனது மன்னிப்புக் கோரிக்கையில் கேட்டுக் கொண்ட போதும் இதை நம்ப மறுத்த நீதிபதி இந்த தாக்குதல் 'கோழைத்தனமானது' என்று வர்ணித்து நான்கு வருடச் சிறைத்தண்டனை வழங்கினார். இராணுவ உடையில் நிற்கின்ற இவர் இவ்வளவு குறுகிய காலத்தில் திருந்த முடியும் என்று தான் நம்பவில்லை என்று நீதிபதி கூறினார்.

ஒன்பது மாதங்கள் சிறையில் இருந்த பின் தான் திருந்தி விட்டதாக அழுதபடிய கூறிய ஜேசன் கூலன்ஸ் என்ற இந்த தோல் தலையர் சிவராஜா வினசித்தம்பி என்ற உணவக வேலையாள் ஒருவரை கடுமையாகத் தாக்கியிருந்தார். இனவாத புனித யுத்தம் என்ற பெயர் கொண்ட இனவெறிப் பாடற்குழு ஒன்றின் இசை நிகழ்ச்சி ஒன்று முடிந்த பின்னரே இந்த தாக்குதல் நடைபெற்றது. இந்த தாக்குதலால் சிவராஜாவிற் இடது கை செயலிழந்துள்ளது. உதைபந்தை உதைப்பது போன்று சிவராஜாவின் தலையில் ஜேசன் அடித்தார் என்று கூறப்படுகிறது.

*ம.ப.பார்க்க..*

## கடல் வலயத் தடையை நீக்க பாதுகாப்பு அமைச்சு முட்டுக்கட்டை

சமாதான முயற்சிகளுக்காக நல்லெண்ணங்களை ஏற்படுத்தும் முயற்சியில் இலங்கை அரசு கடல் வலய தடையை நீக்குவதாக அறிவித்திருந்தது. ஆனால் தற்போது அதில் தயக்கம் காட்டி வருகிறது. பாதுகாப்பு அமைச்சு பாதுகாப்பு காரணங்களைக் காட்டி அனுமதி வழங்க மறுத்து வருகிறது. இந்த தடை நீக்கப்பட்டது குறித்து மீனவர்கள் மகிழ்ச்சி தெரிவித்த போதும் இவ்வாரம் சில மீனவர்கள் வடமராட்சியில் கடற்படையினரால் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்திகளும் வந்திருக்கின்றன.

கடல் வலயத் தடைச் சட்டத்தினால் சிறு மீனவர்கள் பெரும்பாதிப்புக்குள்ளாகியிருந்தனர். இவர்களுக்கு புனர்வாழ்வு அமைச்சு வழங்கிய நிவாரணப் பொருட்களே இவர்களது வாழ்க்கையை ஓட்ட உதவி வந்தது. மாதம் ஒன்றுக்கு ஐந்து கோடி ரூபா அவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்க செலவிடப்பட்டு வந்தது. இம்மாதம் முதல் இந்த உதவிகளை நிறுத்துமாறு புனர்வாழ்வு அமைச்சு அரசாங்க அதிபர்களுக்கு அறிவித்திருந்தது.

## ஆயுதவிற்பனையில் சீனாவுக்கு ஏகபோக உரிமை

இலங்கையின் ஆயுத சந்தையை மனதில் கொண்டு இலங்கைக்கு பெருமளவு ஆயுதங்கள் வினியோகிக்கும் சீனா இலங்கையில் ஆயுத வினியோக நிலையம் ஒன்றை நிறுவ உத்தேசித்துள்ளது. சாதாரண துப்பாக்கிகள் முதற்கொண்டு போர்விமானங்கள், கப்பல்கள் வரை விற்க சீன ஆயுத விற்பனை நிலையம் ஒன்று முயற்சிக்கின்றது. கட்டளை ஒன்றைப் பெற்று சீனாவிலிருந்து அனுப்புவதில் உள்ள நேர தாமதத்தை போக்கி இலங்கையிலேயே ஒரு களஞ்சியம் ஒன்றை அமைப்பதன் மூலம் உடனுக்குடன் பெருமளவு ஆயுதங்களை விற்பனை செய்ய முடியும் என்று சீனா கருதுகிறது.

ஆயினும் இந்த முயற்சி குறித்து பலத்த சந்தேகங்கள் நிலவி வருகின்றன. இராணுவ உயர்மட்டத்தில் சிலர் தனியே சீனாவில் தங்கியிருப்பதால் ஏற்படக் கூடிய விளைவுகள் பற்றியும் சீன ஆயுதங்களின் தரம் பற்றியும் சந்தேகம் எழுப்பியுள்ளனர். வை 8 ரக விமானங்கள், அதிவேகப் படகுகள் போன்றன முன்பு சீனாவிடமிருந்தே பெறப்பட்டன. தற்போது பாதுகாப்பு அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த சீன நிறுவனம் இலங்கையில் செயற்பட உள்ளது. சிறுவகை ஆயுதங்களுக்கான ஏகபோக உரிமையை இந்த நிறுவனத்திற்கு வழங்க பாதுகாப்பு அமைச்சு பேச்சுவார்த்தைகளை நடத்துகிறது.

சென்ற வருடம் இந்த நிறுவனத்தை அழைக்க முயற்சிகள் நடைபெற்ற போதும் தலைமைப்பீடத்தில் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பு காரணமாக அவை பின்போடப்படடிருந்தன.

## பத்திரிகையாளருடன் பேச வேண்டாம் தளபதி கட்டளை

பத்திரிகைகளுக்கு இராணுவ நடவடிக்கைகள் பற்றி செய்திகளை வெளியிட வேண்டாம் என்று சிரேட்ட இராணுவ அதிகாரிகளுக்கு இராணுவத் தளபதி கட்டளையிட்டுள்ளார். அத்துடன் இந்த கட்டளையை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமரின் உதவி நாடப்படும் என்றும் ஜெரி டி சில்வா தெரிவித்திருந்தார். சமீபத்தில் வவுனியா சென்ற பிரதமர் படை அதிகாரிகளுக்கு 'எல்லோருடைய நன்மைக்கும் பாதுகாப்புக்குமாக' பத்திரிகைகளுடன் பேச வேண்டாம் என்று கேட்டிருக்கிறார்.

## பத்து புலிகள் விடுவிப்பு

சமாதான முயற்சியில் ஈடுபடுவதற்கான நல்லெண்ணச சமிக்ஞைகளை காட்டுவதில் அரசும் புலிகளுடம் போட்டி போட்ட வண்ணம் உள்ளனர். புலிகள் இரண்டு பொலிசாரை முதலில் விடுதலை செய்திருந்தனர். இதற்கு பதிலாக அரசு புலிகள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டிருந்த பத்துப் பேரை விடுவித்துள்ளது. இவர்கள் தொழிற் பயற்சி வழங்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளதாக புனர்வார்வு ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ஆனால் விடுவிக்கப்பட்ட பத்துப் பேரும் உண்மையில் புலிகளா அல்லது ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார்களா என்பது தெரியவில்லை.

### *இலங்கைத் தமிழர்...*

14 வயதில் இனவாதக் குழுக்களால் கவரப்பட்ட ஜேசன் எல்.எஸ்.டி போன்ற கடுமையான போதை மருந்துகளும் பாவித்திருந்தார். வெவிநாட்டார், யூதர்கள், கறுப்பர்கள் போன்றோர் மீது கடுமையான விரோதப் போக்கு கொண்டிருந்ததுடன் அவர்கள் தங்கள் வேலைகளைப் பறிக்கிறார்கள் என்றும் குற்றம் சாட்டியிருந்தார்.

இது இவ்வாறிருக்க, தாக்கப்பட்ட சிவராஜா ரொறன்ரோவில் சமூகநலக் கொடுப்பனவுகளில் மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருக்கிறார். வேலை செய்து கொண்டே சமூக உதவிப் பணம் பெற்றுக் கொண்டதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# எந்த தரப்புமே வெல்ல முடியாது ஆரியரத்தின பேச்சு

நாட்டில் சமாதானம் நிலவுவதற்கு எதிரானவர்கள் தனது யாழ்ப்பாண விஜயத்தில் ஏதோ மர்மம் இருப்பதாக கூறிக் கொள்கின்றனர் என்று சர்வோதயத் தலைவர் ஆரியரத்தின தெரிவித்துள்ளார். சமாதானம் இல்லாமல் உண்மையான அபிவிருத்தி இருக்காது என்று கூறிய அவர் சிங்கள பௌத்தர்களைக் காப்பதாகக் கூறிக் கொள்பவர்கள் எல்லாம் இவ்வாறான கிராமங்களுக்கு விஜயம் செய்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயற்சிக்கவில்லை என்றதுடன் சமூக, அரசியல் பிரச்சனைகளுக்கு யுத்தம் தான் தீர்வு என்று கூறுபவர்கள் குறித்து கவனமாயிருக்க வேண்டும் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

யுத்தத்தினால் ஆயுத வியாபாரிகளும் தீவிரவாதிகளுமே பயனடைகிறார்கள். இவர்களுக்கு சமாதான காலத்தில் எந்த வேலையும் கிடையாது. இரு தரப்புமே மிகுந்தஆயுத பலத்துடன் இருப்பதால் எந்த தரப்புமே வெற்றி பெற முடியாது. நிலம் அதிகாரம் போன்ற விடயங்களில் சிக்கல்களில் ஆரம்பிக்கும் பேச்சுவார்தைகள் வெற்றியளிக்காது என்று ஆரியரத்தின கொத்மலே மகாவித்தியாலயத்தில் பேசிய போது குறிப்பிட்டார்.

# தேர்தலில் மோசடிக் குற்றச்சாட்டு

கடந்த தேர்தலில் கடுமையான மோசடிகள் நடைபெற்றது குறித்து அனைத்து தரப்பினரும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றனர். ஈ.பி.ஆர்.எல்.எஃப் இனர் ஆளும் கட்சிக்கு ஆதரவாக இராணுவமும் பொலிசாரும் செயற்பட்டதாக குற்றம் சாட்டியுள்ளது. தேர்தல் பிரசாரம் சட்டபூர்வமாக முடிந்த பின்னரும் ஐ.தே.க மட்டக்களப்பில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தது என்றும் கோறளைப்பற்றில் உள்ள நாகவந்திவு மக்கள் இராணுவத்தினரால் பலாத்காரமாக வாக்களிக்க வைக்கப்பட்டனர் என்றும் ஈ.பி.ஆர்.எல்.எஃப் குற்றம் சாட்டியுள்ளது.

வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் சாவடியில் காவலில் இருந்தோரே விரட்டியதாக கூட்டணி உறுப்பினர் பரராஜசிங்கம் குற்றம் சாட்டியிருக்கிறார். ஏறாவூர் பகுதியில் மூன்று சாவடிகளில் காவலில் இருந்தவர்கள் வானத்தை நோக்கி சுட்டு வாக்காளர்களை விரட்டியுள்ளனர் என்பதை தேர்தல் ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு வந்ததை அடுத்து இது குறித்து பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் விசாரணை செய்துள்ளார்.

# இந்திய மீனவர்களுக்கு பாதுகாப்பு

இந்திய மீனவர்கள் இலங்கை இராணுவத்தால் தாக்கப்படுவது குறித்து தமிழ் நாட்டு எம்.பிக்கள் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்திருக்கிறார்கள். தமிழக மீனவர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்திய அரசு இலங்கை அரசுடன் இது குறித்துப் பேச வேண்டும் என்று காங்கிரஸ், அ.தி.மு.க, பாரதிய ஜனதா உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டனர்.

தமிழ்நாட்டு மீனவர்களுக்கு வோக்கி டோக்கி வசதிகள் வழங்கப்பட உள்ளன. கடலில் மீன்பிடிக்கச் செல்பவர்கள் தொடர்பு கொள்வதற்கு வசதியாக வயர்லெஸ் கோபுரம் ஒன்றும் அமைக்கப்படுகிறது. நாகபட்டினத்தில் அமைக்கப்படும் இந்த கோபுரத்திற்கு அபாய சமிக்ஞைகளை மீனவர்கள் அனுப்பலாம். சுமார் பன்னிரண்டு மைல் தூரம் வரை மீனவர்களுடன் இந்த கோபுரம் மூலமாக தொடர்பு கொள்ள முடியும்.

இதற்குள் இந்திய அதிகாரிகள் சிலர் இந்தப் பிரச்சனை குறித்து பேச இலங்கை சென்றுள்ளனர்.

# சு.கவிற்குள் மோதல் இல்லை. சிறிமாவோ கருத்து

சுதந்திரக்க கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது என்று வெளிவந்துள்ள கருத்துக்களுக்கு சிறிமாவோ மறுப்பு தெரிவித்திருக்கிறார். இது பொய்யானது என்றும் அவ்வாறாயின் எப்படி தான் அவரை தென்பகுதியில் பிரசாரத்திற்கு அனுப்புவார் என்றும் சிறிமா கேள்வி எழுப்பினார்.

சந்திரிகாவிற்கு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் உள்ளதாலேயே மாதல் ஏற்பட்டதாக குறிப்பிட்ட போது தான் ஆரோக்கியத்துடன் உள்ளதாகவும் சந்திரிகா இவ்வாறான நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடவில்லை என்றும் சிறிமாவோ தெரிவித்தார்.

அலவி மௌலானா சந்திரிகாவில் ஆதரவாளர் என்பதால் அவரை காலம் சென்ற ராஜரத்தினத்தின் இடத்திற்கு நியமிக்கவில்லையா என்று கேட்ட போது தேர்தலில் தோற்றவர்களை தான் தேசிய பட்டியலில் நியமிப்பதில்லை என்ற கொள்கைப்படியே அவரை நியமிக்கவில்லை என்றும் சிறிமா தெரிவித்தார். சுதந்திரக்கட்சியின் உள்ளே உள்ளவர்கள் சிலரே இவ்வாறான வதந்திகளைப் பரப்பக் கூடும் என்றும் சிறிமாவோ மேலும் கூறினார்.

**வ.ந.கிரிதரனின் கட்டுரை, ஈழம் ஒரு தொடர்கதை என்பன அடுத்த வாரம் வெளியாகும்**

# கிழக்கு தேர்தல் ஐ.தே.கவுக்கு ஏமாற்றம்

சமீபத்திய தேர்தல்களில் புளொட், ஈரோஸ், டெலோ போன்ற தமிழ்க் குழுக்கள் மொத்தம் ஒன்றரை லட்சம் வாக்குகளுக்கு மேல் பெற்றுள்ளன. முஸ்லிம் காங்கிரஸ் 87 ஆயிரம் வாக்குகளைப் பெற்றுள்ளது. சுதந்திரக் கட்சி 63 ஆயிரம் வாக்குகளைப் பெற்றிருக்கிறது. இந்த வாக்குகள் மொத்தத்தில் ஐ.தே.கட்சிக்கு எதிரானவையே. தமிழ் இனப்பிரச்சனை இல்லை, பயங்கரவாதப் பிரச்சனையே இருக்கிறது என்று கூறிய ஜனாதிபதிக்கு எதிராக வாக்களிக்கும்படி தமிழ் கட்சிகள் கோரிக் கொண்டன. மறுபுறத்தில் அஷ்ரப் ஐ.தே.கட்சியுடனான தனது வெறுப்பைக் காட்டிக் கொண்டார். அஷ்ரப்பை முறியடிக்க வேண்டும் என்பதற்காக மன்சூர் போன்ற முஸ்லிம் அமைச்சர்கள் களத்தில் இறங்கிக் கொண்டனர். இருந்தும் ஐ.தே.கட்சி எதிர்பார்த்த வெற்றியை ஈட்டவில்லை.

மட்டக்களப்பில் பிரதமர் பிரசாரத்திற்கு வந்த போது 150 பேர் மட்டுமே அவரது கூட்டத்திற்கு வந்தார்கள். இதிலும் பெரும்பாலோர் சிவில் உடையில் வந்த பொலிசாரே. ஆனால் பாலமீன்மடுவில் நடைபெற்ற ஐதேக கூட்டத்திற்கு அறுபது பேர் கூட வரவில்லை.

இதற்குள் ஐ.தே.கட்சி மட்டக்களப்பில் பழைய சிறைச்சாலைக் கட்டடத்தினுள் இயங்கும் இராணுவ உளவுப்படையுடன் செயற்படும் தமிழ் இளைஞர்களை தேர்தலில் நிறுத்தியது. இவர்களில் மோகன் குழுவைச் சேர்ந்த ரங்கன், செல்வா, குரு, கேசவன், ரமேஷ் ஆகியோர் அடங்குவர். இவர்கள் முன்பு புளொட் இயக்கத்திலிருந்து இந்தியாவிலும் உத்தரப் பிரதேசத்திலும் பயிற்சி பெற்றவர்கள். இரு வருடங்களுக்கு முன் புளொட் இவர்களை நீக்கியிருந்தது.

இதில் செல்வா என்பவர் களவாஞ்சிக்குடி பிரதேச சபையில் ஐ.தே.கட்சி வேட்பாளர்களில் அதிகளவு விருப்பு வாக்குகளைப் பெற்றிருக்கிறார். இதை விட முன்பு புலிகளால் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட பத்மநாதனே அங்குள்ள ஐ.தே.க வேட்பாளர்களில் சிரேஷ்டர்.

அம்பாறையிலும் ஐ.தேக ஆலயடிவேம்பு, திருக்கோவில் சபைகளுக்கு வேட்பாளர்களாக நியமிக்க ஒருவரையும் நிறுத்த முடியவில்லை. இப்பகுதியில் ஈ.பிடி.பியும் டெலோவும் வெற்றி பெற்றிருக்கின்றன. இவை அரசின் ஆசீர்வாதம் பெற்றன. திருக்கோவிலில் தலைவராக தெரிவு செய்யப்பட்டவர் முன்பு ஈ.பி.ஆர்.எல்.எ:ப் இற்கு உதவியாளாக இருந்ததுடன் சமீபத்தில் தான் இந்தியாவில் புழல் முகாமிலிருந்து திரும்பியிருந்தார்.

இதற்குள் எந்த தனிக் கட்சியும் பெரும்பான்மையைப் பெறாததால் குழுக்களுக்கு இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. புளொட், டெலோ ஆதரவிலான சுதந்திரக் குழு ஒன்பது ஆசனங்களையும் ஈரோஸ் மூன்று ஆசனங்களையும் ஐ.தே.க ஐந்து ஆசனங்களையும் கொண்டுள்ளன. முஸ்லிம் காங்கிரஸ் ஒன்றும் படையினரின் ஆதரவிலான குழுவுக்கு ஒரு ஆசனமும் கிடைத்துள்ளன. தற்போது குழுக்களுக்கு இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

டெலோ புளொட் குழு ஆறு சபைகளைக் கைப்பற்றியுள்ளன. இராணுவ ஆதரவுக் குழு பட்டிப்பளை கிராமசபையைக் கைப்பற்றியுள்ளன. திருமலையில் ஈரோஸ் டெலோ குழு கைப்பற்றியுள்ளது. களுவாஞ்சிக் குடியில் ஐ.தே.கட்சி ஒன்பது வாக்குகளால் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

இந்தச் செய்திகள் ஐலண்டில் தராக்கி எழுதிய கட்டுரையைத் தழுவியவை.

# அஷ்ரப் பதவி விலகுவார்

கடந்த தேர்தலில் ஆறு சபைகளில் முஸ்லிம் காங்கிரஸ் வெற்றி பெறாவிட்டால் தனது பாராளுமன்ற ஆசனத்தை ராஜினாமா செய்யப் போவதாக அஷ்ரப் கூறியிருந்தார். ஆனால் தேர்தலில் நான்கு சபைகளை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. இப்போது தனது வாக்குறுதியை மதித்து தனது பதவியை ராஜினாமா செய்யப் போவதாக அஷ்ரப் கூறியிருக்கிறார். தனது பதவியை ராஜினாமா செய்வதற்கு முன் பாராளுமன்றத்தில் இரு மணி நேரம் உரையாற்ற தனக்கு சந்தர்ப்பம் அளிக்கும்படி அவர் சபாநாயகரைக் கேட்டதாகவும் அன்று அவசரகாலச் சட்டம் பற்றிய விவாதம் நடப்பதால் அதற்கு சந்தர்ப்பம் தர முடியாது என்று சபாநாயகர் கூறியதாகவும் செய்திகள் கூறுகின்றன.

அஷ்ரப் ஐந்து வருடங்கள் பாராளுமன்றத்தில் இருந்ததால் அவர் ஓய்வூதியம் பெற முடியும். இவர் பதவியை ராஜினாமா செய்தால் அவருக்கு பதிலாக ஷேகு இசாதீன் நியமிக்கப்பட வேண்டும். ஆனால் அவர் அஷ்ரப்புடன் மோதிக் கொண்டு தனிக்கட்சி அமைத்திருக்கிறார். எனவே அடுத்து யாரை நியமிப்பது என்பதில் சிக்கல்கள் உள்ளதாகத் தெரிய வருகிறது.

# மீனவர் இராணுவத்தால் கொலை

கடற்படையினர் தாக்கியதில் மூன்று மீனவர்கள் உயிரிழந்ததாக புலிகள் தெரிவித்துள்ளனர். இத்தாக்குதலில் இருவர் காயமடைந்தும் உள்ளனர். கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இந்த தாக்குதலில் வடமராட்சியைச் சேர்ந்த மீனவர்களே பாதிக்கப்பட்டனர்.

ஆனால் இன்னொரு போட்டி இயக்கம் ஒன்று விடுத்த அறிக்கையின்படி, தாங்கள் புலிகளின் தொடர்பு சமிக்ஞைகளை ஒட்டுக்கேட்டதன்படி இத்தாக்குதல் தடை செய்யப்பட்ட பகுதிக்குள் நடைபெற்றதாகவும் கடந்த செப்டம்பர் மாதம் கடற்படைப்படகு ஒன்று தாக்கப்பட்ட பின்னர் நாற்பது மீனவர்கள் வரை தாக்குதலுக்குள்ளதான தெரிவித்துள்ளது.

# ஈ.பி.டி.பியின் அலுவலகம் தகர்க்கப்பட்டது.

மட்டக்களப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை ஈ.பி.டி.பியின் அலுவலகம் ஒன்று குண்டுத் தாக்குதலுக்குள்ளாகி தகர்க்கப்பட்டது. மண்டூர் பகுதியில் நடைபெற்ற இந்த தாக்குதலின் பின்னர் ஈ.பி.டி.பி தனது அலுவலகத்தை அங்கு மூடியுள்ளது. இந்த தாக்கதலில் யாரும் காயமுறவில்லை.

# சிவாஸ் ரேடிங் நிறுவனத்தினரின்
# மாபெரும் மலிவுவிற்பனை

**மீன் வகைகள் அனைத்தும் மலிவு விலையில்**

| | |
|---|---|
| பாரை | 1.49 |
| அறுக்குளா | 4,99 |
| விளைமீன் | 4.49 |
| சீலா | 2.49 |
| முரல் | 1.99 |
| நீல மீன் | 1.99 |
| கருந்திரளி | 2.49 |
| சுறு | 1.99 |
| கணவாய் | 1.99 |
| திரளி | 2.49 |

| | |
|---|---|
| மைசூர் பருப்பு 4 றாத் | 2.99 |
| நல்லெண்ணெய் | 5.99 |
| சோயா இறைச்சி 200 கி | .99 |
| கோழி | 1.99 |
| ஐந்து கிலோ அரிசி மா | 6.99 |
| ஒரு கிலோ அரிசிமா | 1.49 |

| | |
|---|---|
| goat leg | 1.99 lbs |
| boneless | 1.99 lbs |
| chicken legs | .69 lbs |
| fresh chicken | 1.99 |
| Frozen | |
| Red Shnapper, King fish | 2.99 lbs |
| String Hopper mix, Pittu Mix | 1.99 |
| Small dictionary | 3.99 |

| | |
|---|---|
| உள்ளி 1 றாத் | .99 |
| நிரு பிராண்ட் மிளகாய்த்தூள் 2 றாத் | 6.49 |
| நிரு பிராண்ட் அரிசிமா 1 கிலோ | 1.69 |
| நிரு பிராண்ட் அரிசிமா ஐந்து கிலோ | 7.99 |
| இருபது கிலோ பஸ்மதி | 27.99 |
| 5 கிலோ பஸ்மதி | 7.99 |

| | |
|---|---|
| நிரு கோப்பி பவுடர் | 3.49 |
| சன்யோ றைஸ் குக்கர் | 55.99 |
| 400கி தேங்காய்ப் பால் பவுடர் | 1.99 |
| ஐந்து கிலோ உழுத்தம்பருப்பு | 6.99 |
| ஐந்து கிலோ மைசூர் பருப்பு | 7.99 |

| | |
|---|---|
| ஹோமோ பால் 2 ∞ | 2.95 |
| குடாஸ் 10 கிலோ கோதுமை மா | 4.99 |
| முட்டை முப்பது | 1.99 |
| வெங்காயம் 10 று | 2.99 |

# Sivas Trading Co

**3852 Finch Ave E(Kennedy/Finch)**

**321 2739**

# கறை படிந்த கைகள்

**ஜீன் போல் சாத்ரே**

**தமிழில்;நேசன்**

## இயக்க கொள்கை என்ற பெயரில் மண்டையில் போடுதல் போன்ற இன்றைய எமது வாழ்வு முறையை நினைவுபடுத்தும் நாடகம்

ஹிகோ: அன்று இரவு சைக்கிள்களில் வந்த அவர்கள் மேசையை சுற்றி அமர்ந்திருந்தார்கள். லுயீஸ் தனது சுங்கானுக்குள் புகையிலையை திணித்துக் கொண்டிருந்தான். அப்போது ஒருவன் சொல்வான் "உனக்குத் தெரியுமா அந்த இரவும் இன்று போலதான், அந்த இளம் பையன் ஒரு விசேட உத்தரவைக் கேட்டான்"

ஒல்கா: அக்கதைகள் அவ்வாறு இருக்கும்.

ஹிகோ: அப்போது நீ சொல்வாய். அந்த பையன் எந்தவித விட்டுக் கொடுக்கலுக்கும் ஆளாகாமல் தனது வேலையை கச்சிதமாக முடித்து, வெற்றிகரமாக வந்தான்'

ஒல்கா: ஆமாம் ஆமாம்

ஹிகோ: சிலவேளைகளின் மழை என்னை எழுப்பும். அப்போது நான் எனக்குள் சொல்லிக் கொள்வேன். நான் இன்று மழையில் நனைந்து கொள்வேன் சில வேளைகளில் எனது கட்சியாட்கள் என்னைப் பற்றிக் கதைப்பார்கள். இவ்வாறான யோசனைகள்தான் என்னை சாவிலிருந்து தடுத்தன. நீ என்னை நினைத்துக் கொண்டு இருக்கின்றாய் எனவும் நான் கற்பனை செய்து கொள்வேன் (ஒல்கா அவனது கைகளைப் சடுதியான ஓர் ஆர்வத்துடன் பற்றினாள். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள் ஒல்கா மீண்டும் தனது கைகளை விடுவித்துக் கொண்டாள்) பின்பு நீ உனக்குள் சொல்லிக் கொள்வாய் அவன் இன்னும் 3 வருடங்கள் சிறையில் செலவழிக்க வேண்டும். அவன் அங்கிருந்து வெளியேறும் போது (அவனது முகத்தை பார்த்தபடி. ஆனால் குரலில் மாற்றத்துடன்) அவன் கொடுத்த பிரச்சனைகளுக்காக அவர்கள் (அவனது கட்சிக்காரர்) அவனை நாயைச் சுடுகின்ற மாதிரி சுடுவார்கள்.

ஒல்கா: (அவனில் நின்றும் பின்நகர்ந்து) உனக்கென்ன பைத்தியமா?

ஹிகோ: ஒல்கா! ஒல்கா! (மௌனம்) நான் சிறையில் இருக்கும் போது நீ தானே எனக்கு சொக்கலேட் அனுப்பினாய்?

ஒல்கா: என்ன சொக்கலேட்

ஹிகோ: அச்செந்நிறப்பெட்டியில் வரும் சொக்கலேட் தான். அவை ஆறு மாதகாலமாக D என்பவருடைய பெயரில் ஒழுங்காக பார்சலில் வந்தன. அந்தப் பெயரில் எனக்கு யாரையும் தெரியாது ஆதலால், அவை உன்னிடம் இருந்து தான் வந்தன என எண்ணினேன். அது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தன. பின்பு அப்பார்சல்கள் நிறுத்தப்பட்டன. அவர்கள் எல்லோரும் என்னை மறந்துவிட்டார்கள் என்று நான் பின்பு நினைத்தேன் ஆயினும் மூன்று மாதங்களுக்கு முன்பு மீண்டும் பார்சல் அதே முகவரியில் இருந்து வந்தன அதில் சொக்கலேட்டும் சிகரட்டும் இருந்தன. நான் சிகரட்டைப் புகைத்தேன். சொக்கலேட்டை எனது சிறை அறையில் என்னோடு இருந்தவனுக்குக் கொடுத்தேன். பரிதாபத்திற்கு உரியவன் அவை அவனுக்கு பெரிய நோயினை ஏற்படுத்தி விட்டது. பின்பு அவர்கள் என்னை என்னை மறக்கவில்லை என்று எனக்கு விளங்கியது.

ஒல்கா: பின்பு?

ஹிகோ: அவ்வளவு தான். ஹடேரருக்கு நண்பர்கள் இருந்தார்கள். அவர்கள் உன்னை மறக்கவில்லை.

ஹிகோ: அவர்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கின்றார்கள் என சொல்வதற்கு இரு வருடகாலம் காத்திருக்கத் தேவையில்லை. இல்லை ஒல்கா, எனக்கு இதுபற்றி யோசிப்பதற்கு வேண்டிய நேரம் இருந்தது. எனது விளக்கம் இதுதான். ஏதாவது ஒரு வகையில் முதலாவதாக கட்சி என்னை ஏதாவது ஒரு வகையில் பாவிக்கலாம் என யோசித்து இருக்க வேண்டும். பின்பு, கட்சி தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டது.

ஹிகோ: நீ அதிகம் கதைக்கின்றாய்,

ஒல்கா: எப்போதும் நீ அப்படித்தான். நீ அதிகம் கதைக்க முன்பு உயிர் பற்றி யோசிக்க வேண்டும்.

ஹிகோ: அதுபற்றி நான் வாதம் புரியவில்லை, அதேவேளை நான் அதிகம் கதைப்பவன் தான் ஆனால் நீ என்னை ஒருபோதும் நம்பவில்லை என நன்கு தெரியும் ஆனாலும் இது பற்றி மேலும் பேசவேண்டியதில்லை (மௌனம்) நான் உனக்கெதிராக எதுவும் மனதில் வைத்திருக்கவில்லை என்பது உனக்குத் தெரியுமா? இந்த முழுவிடயமுமே பிழையான ஆரம்பத்திலிருந்து தான் தோன்றின.

ஒல்கா: என்னைப் பார் நீ சொன்ன அவ்வளவும் அர்த்தத்துடன் தான் கூறினாய் (வீறிட்ட கோபத்துடன்) பின்பு ஏன் இங்கு வந்தாய்? ஏன்? ஏன்?

ஹிகோ: ஏனெனில், உன்னால் என்னைச் சுட முடியாது என எனக்குத் தெரியும் (அவன் சிரித்தபடி, அவன் கையில் பிடித்திருந்த ரிவோல்வரைப் பார்த்தான்) நீ அப்படிச் செய்யக் கூடியவள் என நான் நினைக்கவில்லை (ஒல்கா, குற்ற உணர்வுடன் தூரவாய.....மறைத்திருந்த ரிவால்வரை மேசையில் எறிகின்றாள்)

ஒல்கா: இங்கே பார் ஹிகோ. நீ எனக்கு சொன்ன ஒரு வார்த்தையையும் நான் நம்பவில்லை கூடவே உனது விடயம் நான் நம்பவில்லை கூடவே உனது விடயம் பற்றி எனக்கு எவ்வித உத்தரவும் தரப்படவில்லை. ஆனால் உன்னை நான் மண்டையில் போடுவேனாயின் அது கட்சி உத்தரவு என உனக்கு தெரிந்திருக்க வேண்டும். மேலும் கட்சியில் இருந்து யாராவது நீ எங்கே எனக் கேட்டால் அது என் கண் முன்னால் உன்னைச் சுடுவதற்காயினும் சரி. நீ இங்கே இருப்பதைச் சொல்வேன். உன்னிடம் காசு ஏதாவது இருக்கின்றதா?

ஹிகோ: இல்லை

ஒல்கா: நான் உனக்குக் கொஞ்சம் தருகின்றேன். அதன் பின்பு நீ இங்கிருந்து போகலாம்.

ஹிகோ: எங்கே? துறை முகத்திலுள்ள இடங்களிலும், ஒழுங்கைகளிலுமா? தண்ணீர் மிகவும் குளிராக இருக்கும் ஒல்கா? இது மிகவும் வெதுவெதுப்பான இடம், எது நடந்தாலும் நான் இங்கு இருக்கலாம் மிகவும் வசதியானது.

ஒல்கா: ஹிகோ கட்சி உத்தரவுப்படி நான் நடப்பேன். நான் சத்தியமாகச் சொல்கின்றேன், அவர்கள் உத்தரவின்படி நான் எது வேண்டியதாயினும் செய்வேன்.

ஹிகோ: நான் உனக்கு உத்தரவிட்டால்

7ம் பக்கம் பார்க்க...

# கிணற்றுளோர் உலகம் செய்வோம்

சூரியன்
கோடு கிழிக்கும்
வரை காத்திருக்க
நாங்கள் என்ன
தாமரைகளா?

பச்சைவெளியில்
பாய்ந்து வரும்
நீரூற்றில் மேனி நனைத்து---
சேலையையும் ரவிக்கையையும்
அவசரமாய் மாட்டி
சோளிகள் இல்லையென
சோகமா கொண்டோம்
சோளிகள் மாட்ட நாம்
தொரசாணிகளா?....
பாதணிகள் மாட்ட நாம்
பட்டணத்தார்களா?
காதிலே வைர கம்மல்கள்
மாட்ட நாம் என்ன கௌதமிகளா?
கருவேப்பிள்ளை குச்சி காது
ஓட்டைகளை தூந்து போகாமல்
காக்குமுங்க

பாதி தூக்கத்தில்
பச்சைக்குழந்தைகளை
விட்டு விட்டு
கோண கோண மலைஏறி
கொழுந்தெடுத்து- வருவோமுங்க
கற்களும் முற்களும்
எம் பாதங்களுக்கு
பஞ்சுங்க..
எரித்திடும் வெயிலும்
கொட்டிடும் பனியும்
எமக்கு முந்தானைகள் தானுங்க
சண்டாளனுக தெமலா தெமலா என
எட்டி உதைக்கும் போது
ஓடிஒழிவதற்கும்
எரித்துவிட்டு சிரிக்கும் போது
அகதிமுகாமுக்குள் பதுங்குவதற்கும்
எப்போதோ
மனசு பழகிடிச்சிங்க

தேசத்தின்
எல்லைக்கோடுகள் எங்குண்டு
என எமக்கு தெரியாது....
மலையின் விளிம்புகள் எங்கே
முடியும்—
எப்போது மழை வரும்
புயல் வரும்
தென்றல் வரும்
எந்த கற்பாறைக்கு கீழ்
தவளைகள் பாடும்
எந்த திசையில்
எங்கள் முதாட்டிகளின்
கல்லறைகள் உண்டு
எந்த காட்டுக்குள்
காதலர்கள் சந்தித்துக்
கொள்வார்கள்—
காதலில் தோல்வியுற்றவர்கள்
எங்கே தூக்குப்போட்டுக்
கொள்வார்கள்—
என் அப்பன் எங்கே
வேட்டைக்கு போவார்
பொடியனுக எங்கே
சீட்டானுவானுக
எந்த ஆத்துல
வண்ண மீன்கள்
நீந்தி திரியும்
எங்கே குயில்கள்
கூவும்
கல்லு கோயில்ல
முருகனுக்கு எப்போது
திருக்கல்யாணம்



எங்கள் ஆடுகள் எங்கே
மேயும்...
கோடியில் எங்கே
பெட்டை கோழிகளை
துரத்த சேவல்கள் ஒழிந்திருக்கும்
கருப்பு கங்காணி காதலியை
எங்கே கூட்டிச் செல்வான்
சின்ன தொர புஞ்சி நோனவுடன்
எங்கே போவார்
பெரிய தொர
குடித்து விட்டு எப்படி கத்துவார்
இருட்டு எப்போது வரும்
என்றெல்லாம் எமக்கு தெரியும்
வெளியுலகம் பெருசாய்
இருக்குமோ என்னவோ!

படிப்பு வேணும் படிப்பு வேணும்
நாலும் தெரிஞ்சிருக்கனும் என
ஒரு போதகர் வந்து
புதுசாய் பைபிளும் தந்து
ஒரு பள்ளிக்கூடமும்
திறக்க அனுமதி வாங்கி
அரசாங்க வாத்தியாரும்
வருவாரென காத்திருந்த
போது
புதுசாய் ஒரு டீச்சரு
வடக்கிலிருந்து வந்தாக...
மனசு குளிருச்சி
எங்க வாண்டுக படிச்சி கிடிச்சி
பட்டத்த வாங்குமுனு--நெனப்பு
நெஞ்ச கசக்கிச்சு...
அந்த டீச்சருக்கு
அரிசி வாங்கி
விறகு பொறுக்கி
சமைச்சி
துணி கழுவி
தண்ணீர் தூக்கி
டீச்சருக்கு துணைபோய்
சாமான் தூக்கி
தோட்டம் துப்பரவாக்கி
எங்க புள்ளைக பட்டம்
வாங்கிடுச்சிங்க....
இனி என்ன டவுனுல
வூடுகளுக்கு வேலைக்கு
அனுப்பினு மாதம்
ஐம்பதோ, அறுபதோ
கிடைக்காமலா போகும்.....

**ஜி. மௌனிக்கா**

## கறை படிந்த கைகள்...

*ஓல்கா: வெளியே போ!*

*ஹிகோ: இல்லை. நான் கட்சியின் உத்தரவுப்படி நடப்பேன் (அவனைப் பார்த்துச் சிமிட்டியபடி) உனக்கு ஆச்சரியத்தைத் தரும். உனக்கு உலகத்தைப்பற்றி ஓர் நல்ல பார்வை இருக்குமெனின், உன்னால் எதை ஒருபோதும் செய்யமுடியாது என்றால் கட்சிக் கட்டளையை நிறைவேற்றுவதுதான். "நீ ஹடேரிம் சென்று அவனது வயிற்றில் 3 குண்டுகளை சுடு" இது எனக்கு முன்பு தரப்பட்ட ஒரு தெளிவான கட்டளை. எனவே நான் சென்று ஹடேரர் வயிற்றில் 3 குண்டுகளை சுட்டேன். ஆனால் அது வேறு விதமாக நடந்தது. அது கட்டளை ? அங்கு ஒரு கட்டளையும் இல்லை. இனிக் கட்டளைகள் இருக்கப்போவதும் இல்லை. குறிப்பிட்ட எல்லைகளுக்குப் பின்பு கட்டளைகள் உன்னை எப்போதுமே தனிமைப்படுத்தும் கட்டளை எனக்கு பின்னால் நின்றது நான்தான் செய்தேன் என இன்னும் எனக்குத் தெரியாது. எனது விருப்பிலும் இப்போது கட்சி என்னை சுடும்படி உனக்கு கட்டளையிட வேண்டும் என்பதே அப்போது என்ன நடக்கும் என்பதை பார்க்கவேண்டும் என்பதற்காகச் செய்கின்றேன்.*

*ஓல்கா: அப்போது நீ அனுபவிப்பாய் (மௌனம்) இப்போது என்ன செய்வதாக உத்தேசம்?*

*ஹிகோ: எனக்குத் தெரியாது. நான் திட்டம் ஒன்றும் தீட்டுவதில்லை. அவர்கள் சிறைச் சாலை கதவைத் திறக்கும் போது. இங்கு வரவேண்டும் எனயோசித்தேன். எனவே இங்கு வந்தேன்.*

தொடரும்

# முனியான் காலடி மண்ணெடுத்து
# நெத்தியிலே 'பொட்டு' வைப்போம்



***ஆசிரியர் கடிதங்களைப்பற்றி கியூறியஸ் எழுதினாலும் எழுதினார்... தாயகத்திற்கு வரும் கடிதங்களை பிரசுரிக்கவே ஆசிரியர் மறுத்து வருகிறார். கீழேயுள்ள கடிதம் ஒன்டாரியோ மில்டன் சிறைச்சாலையில் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் ஒரு சிறைப்பறவை தனது மனக் குமுறலின் ஒரு பகுதியை தீர்க்க எழுதியது.. இதனை பிரசுரிப்பதன் மூலம் 'சிறைப்பறவை' சண்முகாவின் மனக்குமுறலின் ஒருபகுதியை தாயக வாசகர்களும் அறியட்டுமே.....!***

அன்புள்ள தாயகக்காரருக்கு நான் உங்கள் புத்தகங்கள் வாசிப்பது உண்டு. அதிலும் நான் விரும்பி வாசிப்பது முனியின் பதில்கள். உங்கள் 4.2.94 இதழில் அச்சிட்டு இருக்கிறீர்கள் வாழ்க்கையின் சோகங்களுக்கு இறைவனா மனிதனா காரணம் முனிவா?

கணேஷ் மொன்றியாலில் எழுதியிருந்தார். "சின்னச் சின்னச் தோல்விகளால் பின்னப்பட்ட பெரிய தோல்விதான் வாழ்க்கை. மனிதனுக்கும் பங்கில்லை இறைவனுக்கும் பங்கில்லை என்றது. இது என்னுடையது. "மனிதனுடய வாழ்வில் இளம் ஆண்களின் தோல்விகளுக்கு காரணம் இளம் பெண்கள்தான். ஏன் என்றால் ஒரு இளம் ஆண் ஒரு பெண்ணை தன் உயிரையும், தன் குடும்பத்தார் உயிரையும் விட எவ்வளவோ நேசிக்கிறான். இவளும் நேசிக்கிறாள் (குறுகிய காலத்துக்கு) ஆனால் அந்த ஆணின் உண்மையான, தூய்மையான காதலை அந்த பெண் சாதாரணமாக தூக்கி எறிகிறாள். அதன்பின் அந்த ஆண் செய்யக் கூடாத செய்கை எல்லாம் செய்கிறான் (தேவதாஸ் மாதிரி) இதன் அர்த்தம் அவனின் அரை உயிருமே அவனை விட்டு போய்விட்டது. இப்படியான இளம் ஆண்கள் இந்தக் கனடாவில் எத்தனையோ பேர் உண்டு. அப்படியான பெண்களை தடுப்பதற்கு என்ன வழி? ஏதாவது உண்டா? என்ற கேள்வியை இந்தக் கனடா மக்களிடம் (ஆண்களிடம்) கேட்பதற்காக கீழ் நான் ஒரு முனியின் பதில் மூலமாக எழுதுகிறேன். இதை உங்கள் முனியின் பதிலில் தந்து இந்த கனடா மக்களிடம் ஒரு பதிலை நான் எதிர்பார்க்கின்றேன். நான் தற்போது சிறையின் இருக்கிறேன். நான் சிறையில் இருப்பதற்கு காரணமும் ஒரு இளம் பெண்தான். இந்த பதிலும் உங்களுடைய பதிலையும் எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு தாயக நண்பன்
சண்முகா

*★ரொறன்ரோவில் அகால மரணமடைந்து மறைந்த வி. பொன்னம்பலத்தைப் பற்றி*
*ஜோ.மொன்றியால்*

*பாராளுமன்ற அரசியல் தமிழ் மக்களிடையே பலங் கொண்டு விளங்கிய காலத்தில், பலமான ஒரு கொள்கையை நம்பிக் கொண்டும் பலங் கொள்ள முடியாமல் போன இடதுசாரிகளுக்குள்ளிருந்து பலராலும் மதிக்கப்பட்ட ஒருவர் வி. பொன்னம்பலம்! அன்று வி.பொ வின் அரசியல்பாதை தமிழ் மக்களிடையே பலம் கொள்ளாது போனதுதான் இன்று வி.பு பலமடைந்ததற்கு காரணமாகும். ஒரு செந்தமிழர் மறைந்துவிட்டார்.*

*★மாத்தயாவின் பல சகாக்களும் இப்போது விடுவிக்கப்பட்டு வருகின்றார்களே! மாத்தயாவும் விடுவிக்கப்படுவாரா?*
*சி.பாஸ்கரன், ரொறன்ரோ*

*உண்மையில் இப்போது கைதாகி நிற்பது பிரபாகரன்தான்.*

*★ ஒருவேளை மாத்தயா மீண்டும் தமிழீழ ஆட்சியைப் பிடித்து பிரபாகரனைக் கைது செய்தால் என்ன நடக்கும்*
*சி.பாஸ்கரன், ரொறன்ரோ*

*கனடாவிலுள்ள பல பத்திரிகைகள் யூ டேர்ன் அடிப்பார்கள் (தாயகமும் அடிக்கக்கூடும். பிரபாகரனை ஆதரித்து எழுதக்கூடும். யார் கண்டார்கள்.. பாதிக்கப் பட்டவர்களுக்காக குரல்கொடுப்பது தாயகமன்றோ)*

*★ கிட்டுவை இந்திய அரசு கொல்லாமல் விட்டிருந்தால் கிட்டு கொண்டு சென்ற சமாதானத் திட்டத்தால் இலங்கையில் இப்போது சமாதானம் வந்திருக்கும்தானே.*
*செல்வா மோகன், ரொரன்ரோ*

*முதலாவதாக கிட்டுவை இந்திய அரசு கொல்லவில்லை. கிட்டுவும் அவரது சகாக்களும் தான் தாங்களாகவே 'வீரமரணத்தைத்' தழுவிக் கொண்டனர். இரண்டாவதாக கிட்டு சமாதானத் திட்டத்தைக் கொண்டு சென்றார் என்பது எந்த அளவில் உண்மை? (சமாதான திட்டத்தை கொண்டு சென்ற கிட்டு மறைந்தால் திலகராவது கொண்டு சென்று சமாதானத்தை நிலைநாட்டலாம்தானே!)*

*★ கிழக்கு மாகாணத்தில் ரெலோ வென்றிருக்கிறது. வவுனியாவை புளொட் வென்று ஆளுகிறது. தமிழீழத்தின் பாதிக்கு மேல் புலிகள் வசம் இல்லையென்பதுதானே இதன்*

அர்த்தம்?
செல்வா மோகன், ரொறன்ரோ
இந்த தேர்தல் வெற்றிகள் நூற்றுக்கு நூறு வீதம் வலுக்கொண்டவை அல்ல என்பது குழந்தைக்கும் தெரியும். புலிகளின் வடக்குத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் புலிகளின் முற்றுமுழுதான கட்டுப்பாட்டுள் இல்லை. அப்பாவி வடக்கு மக்களுக்கு ஜனநாயக வழியிலான தேர்தல்களை சந்திக்கும் சந்தர்ப்பங்கள் அறவே மறுக்கப்பட்டு வருகின்றன என்பதும்தான் இத்தேர்தல் காட்டும் முடிவு.

★ புலிகளுக்கு ஆதரவான பிரச்சாரத்தை யார் அதிகம் செய்கிறார்கள் என்று ஏற்படும் போட்டியில் இங்கு பத்திரிகைகள் மோதிக்கொள்கின்றனவே
எஸ்.வி, மொன்றியால்
என் நண்பர் ஒருவர் கடைக்கு சென்றிருந்தபோது ஒரு புலிப் பத்திரிகை வாசகர் அலுத்துக் கொண்டாராம் "முன்பெல்லாம் தாயகம் ஒண்டு சொல்லும், மற்றப்பத்திரிகை ஒண்டு சொல்லும். தாயகம் பொய் சொல்லுதெண்டு மற்றப் பத்திரிகை சொல்லுறதை பிரச்சனை இல்லாம நம்பிக் கொள்ளுவம், ஆனா இப்ப நிறைய மற்றப் பத்திரிகைகள் வந்து அதுகளுக்குள்ளேயே ஆர் உண்மை சொல்லுகினம் எண்ட சண்டையாக்கிடக்கு... (இப்போதுதான் "உண்மையைத்தேடி..." Concept சரியாக work பண்ண ஆரம்பித்திருக்கிறது)

★ நான் ஒரு புலிப்பக்தன். கனடாவில் புலிகளை ஆதரித்து நிறைய பத்திரிகைகள் விடுவதால் அவற்றை உடனுக்குடன் படிக்க எனக்கு விசா எடுத்துத் தருமாறு உலகத் தமிழர் இயக்கத்திற்கு எழுதினேன். பதில் யாரும் அனுப்பவில்லை. ஒருக்கா விசாரித்து பார்ப்பீரோ முனிவரே!
இந்திரன், பிரான்ஸ்
இங்கு வரும் புலி ஆதரவுப் பத்திரிகைகளில் எந்தப் பத்திரிகை உண்மையிலேயே புலியை ஆதரிக்கிறது என்பதைக் கண்டுபிடிக்கவே உலகத்தமிழர் இயக்கத்துக்கு நேரம் போதாது. இதில் உமக்கு விசா எடுக்க அவர்களுக்கு ஏது நேரம்?

★ புலியைப்போல் ஒவ்வொரு தமிழனும் வீரனாக மாறவேண்டும் என்கிறேன் நான். இதற்கு நீர் என்ன சொல்கிறீர் முனிவரே!
இந்திரன், பிரான்ஸ்
ஆம்.. புலியின் வீரம், எருதின் உழைப்பு, நாயின் நன்றியுணர்வு, சிங்கத்தின் கம்பீரம், எறும்பின் சுறுசுறுப்பு, கழுதையின் பொறுமை, நரியின் தந்திரம், யானையின் புத்திக்கூர்மை, மானின் வாழ்வு இவற்றையும் ஒவ்வொரு தமிழனும் கொண்டிருக்க வேண்டும்.

★ ஈழத்தின் அரசியல் வரலாற்றை தனக்கேயுரிய விதமாக பல புள்ளி விபரங்களுடன் எழுதும் சின்னத்தம்பி வேலாயுதம் அவர்களின் கட்டுரைகளின் தொகுப்பு எப்போ வெளிவரும்?
நரேன், சுவிஸ்
பலர் இதுபற்றி கேட்டிருக்கிறார்கள் சிலர் தமக்கு பழைய தாயக இதழ்களை இக்கட்டுரைகளுக்காக அனுப்புமாறு ஆசிரியரிடம் வேண்டியிருக்கிறார்கள். கட்டுரைகளை சி.வேலாயுதம் தொகுத்து முடித்ததும். உடனடியாக புத்தகமாக வெளிவரும் இது ஒரு தொடர்கதையல்ல.. (ஒரு சிறுகதை: உலகத்தமிழர் 1.3.94 இதழில் சேரன்மாதேவி என்பவர் சிங்களவர் தமிழீழத்திற்கு ஜனாதிபதியாக இருக்கமுடியாது என எழுதிய கட்டுரையில் 65 லிருந்து 70 வரை தஹநாயக்கா கல்வியமைச்சராக இருந்ததாக எழுதியிருந்தார்கள். எனக்கு நினைவு தெரிந்தவரை அக்காலப்பகுதியில் ஐ.எம்.ஆர்.ஏ ஈரியகொல்லை தான் இருந்ததாக ஞாபகம் ஈரிய கொல்லையின் சியவச சுவீப் டிக்கட்டுகளை வகுப்புகளில் தந்து விற்று வருமாறு சொன்னதும் நாங்கள் சிணுங்கியதும் இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது. இந்த உலகத்தமிழர் கட்டுரையின் நம்பகத்தன்மை பற்றி வேலாயுதத்திடம் தான் கேட்க வேண்டும். புலிகள் புதிய வரலாறு படைக்கிறார்களோ?)

★ தமிழ் மக்களின் பெரும் பொழுதுபோக்குகளில் ஒன்றான தமிழ் சினிமாவில் இப்போது... வன்முறைகளும், ஒழுக்கவிரோத சம்பவங்களும் அதிகரித்துக் காட்டப்படுகின்றதுவே! இவற்றைப் பற்றிய உமது அபிப்பிராயம் என்ன?
திருமதி சித்திரா, ஸ்காபரோ
தமிழ் சினிமா ஒரு பணம் பெருக்கும் இயந்திரம் என்ற வகையில்தான் தமிழகத்திலிருந்து கனடாவின் வீடியோ கடைக்கள் வரை கணிக்கப்படுகிறது. இந்த பணம் பெருக்கும் சூத்திரத்திறகாகவே வன்முறைகளும் ஒழுக்கவிரோத சம்பவங்களும் பிரயோகிக்கப்படுகின்றன. இவற்றைப் பார்த்து மட்டும் ஒருவன் கெடுவானா? என்பது கேள்விக்குறி. (இராவணனும் துச்சாதனும், தமிழ் சினிமா பார்த்ததில்லை) ஆனால் தமது பொறுப்புணர்வை 'செலோயிற் கனவுலகம்' தொலைத்து வருகிறது என்பது மறுக்கமுடியாத உண்மை. முன்பு திருடன் 'மலைக்கள்ளன்' ஆக இப்போ திருடன் "ஜென்டில்மன்" ஆகி உலா வருகிறான்.

★ உலகத்தில் மிகவும் மிகவும் அழகான ஒரு பேரழகியை கண்டு அவளிடம் என்னை திருமணம் செய்வாயா என்று நான் கேட்பதாக அடிக்கடி ஒரு கனவு வருகிறது முனிவரே!
கிருஸ்ணா, ரொரன்ரோ
அதற்கு என் காதலி மறுத்திருப்பாளே!
(கனவு பற்றி ஒரு முல்லா கதை: தான் கடன் வாங்கியவர் வீட்டுக்குச் சென்றார் முல்லா 'நேற்று நான் செத்துப் போவதாக கனவு கண்டேன்' என்று சொல்லி அழுதார் முல்லா. 'கவலைப்படாதீர் முல்லா.. கனவில் நடப்பதற்கு நேர் எதிர்மாறாகத்தான் வாழ்க்கையில் நடக்கும்...' என தேற்றினார் கடன் கொடுத்தவர். உடனே முல்லா நான் சாகுமுன் உங்கள் கடன் எல்லாவற்றையும் திருப்பிக் கொடுத்ததாகவும் கனவில் வந்ததே–" என்றாராம்)

★ எங்கள் வீட்டில் உமது பதில்களைப் பார்த்துவிட்டு நீர் ஒரு வடிகட்டிய முட்டாள் என்று பேசிக் கொள்வோம்.
கிருஸ்ணா ரொரன்ரோ
உங்கள் குடும்பத்தில் ஒருவராக என்னையும் நடாத்துகிறீர்கள்.... மிக்க நன்றி.

★ மகாநதி படத்தைப்பற்றி நீர் ஏதாவது எழுதுவீர் என எதிர்பார்த்தோம். ஏன் எழுதவில்லை?
13ம் பக்கம் பார்க்க..

# ஏமாற்றுதே! ஏமாறுதே!

### நிவேதிகா

எத்தனையோ துன்பங்கள் துயரங்கள் மத்தியில் உறவுகளையும், உடமைகளையும் சொந்த நாட்டில் விட்டு உயிர் காத்துக் கொள்ள புகலிடத்தில் அடைக்கலம் தேடி ஓடி வந்து ஒரு அமைதியான வாழ்வை அமைத்துக்கொள்ளலாம் என பிறநாடுகளில் தஞ்சமடைந்துள்ள எம் தமிழ் இனத்தை தமிழ் இனத்தவர்களே ஏமாற்றி வஞ்சனை புரிகிறார்கள், பிற இனத்தவர்களால் நாம் படும் துன்பங்களைவிட எம் தமிழினத்தினாலேயே ஏமாற்றப்படுவதே இன்று அதிகம். இங்கு நடப்பவை வெளியே வராமல் நான்கு சுவர்களுக்குள்ளும் அடக்கப்பட்டு மௌன ஊர்வலமாய் வலம் வருகின்றன. வரம்பு மீறியவை எல்லையை தாண்டி விடுகின்றது.

அண்மையில் பெற்றோர்களால் பேசப்பட்ட திருமணத்தில் தனக்கு விருப்பமில்லையென 17 வயது பெண் உயர்ந்த மாடியிலிருந்து குதித்து தற்கொலை புரிந்து கொண்டார். இன்னுமொரு 17 வயது இளம் பெண்ணை ஒரு தமிழ் வாலிபர் விருப்பத்துக்கு மாறாக அவளுடன் பாலியல் சேட்டைகள் புரிந்ததையடுத்து அப் பெண் தற்கொலை புரிந்து கொண்டாள். அவ் இளைஞர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

28 வயதுடைய அருந்ததி இரண்டு குழந்தைகளையும் கொலை செய்து இன்று தான் சிறையில் வாடுகின்றார். ஸ்காபரோவில் மாடியிலிருந்து குதித்து தற்கொலை புரிந்து கொண்ட ஒரு பெண். ஏமாற்றத்தையும், துன்புறுத்தல்களையும் தாங்க முடியாத இவர்கள் இறுதியில் நாடுவது தற்கொலையை.

அண்மையில் பார்வதி கந்தசாமி இளைய நிலாவிற்கு அளித்த ஒரு பேட்டியில் அமெரிக்க சிறைச்சாலைகளில் எமது தமிழ் பெண்கள் எவ்வாறான கொடுமைகளுக்குள்ளாகியுள்ளார்கள் என ஒரு பேட்டி அளித்திருந்தார். அவர் பேட்டி காணும் ஒரு பெண் கதறியழும் காட்சி உள்ளத்தை உருக்குகின்றது. அடைக்கலம் தேடி ஓடி வரும் நாடுகளை கடக்கும் முன் சிறைவைக்கப்பட்டு இருட்டறையில் அடைக்கப்பட்டு இவர்கள் சித்திரவதை செய்யப்படுகின்றார்கள். திருமதி பார்வதி கந்தசாமி சில தமிழ் ஏஜண்டுகளின் கீழ்த்தரமான செயல்களை கூறி இந்த ஏஜண்டுகள் இளம் பெண்களை, தனிமையாக அழைத்து வரும் சந்தர்ப்பங்களே அதிகம், இவ்வாறான சூழ்நிலையில் இப் பெண்கள் சிறிய அறையில் அடைத்து வைக்கப்படுகின்றார்கள் சில சந்தர்ப்பங்களில் இவர்களுடன் பாலியல் உறவு, கொள்ளும்படி பெண்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றார்கள். தான் கேள்விப்பட்ட கதைகளில் சில பெண்கள் குழந்தைகளைக் கூட சுமந்து கொண்டு டென்மார்க், கனடா ஆகிய நாடுகளுக்கு சென்றிருக்கின்றார்கள் என்கிறார்.

இன்னும் இந்நிகழ்வுகள் நடந்துக் கொண்டுதானிருக்கின்றன. பணத்தைக் கொடுத்துவிட்டு எத்தனையோ இதயங்கள் சபித்துக் கொண்டிருக்கின்றன. சட்டரீதியாக எதுவும் செய்யமுடியாது என்பதால். அவர்கள் கைப்பட கடிதமோ, அல்லது சாட்சியோ இல்லாமல் தானே ஆயிரக்கணக்காய், லட்சக்கணக்காய், வட்டிக்கு கடன் எடுத்து கொடுத்தோம் என தங்கள் சோகங்களை கூறி கண்ணீர் வடிக்கும் இதயங்கள் இங்கு எத்தனை? இவர்களின் வேதனையின் சாபத்தில் ஏமாற்றியவர்கள் ஒரு இன்பமான வாழ்வை வாழ்ந்து விடுவார்களா? தாங்கள் எவ்வாறாக ஏமாற்றப்பட்டோம் என ஒரு தகவலை சேகரிக்க முற்பட்டபோது ஒரு பெரும் பட்டியலே எமக்கு கிடைத்தது.

தாங்கள் எவ்வாறு சீட்டுக்கட்டி ஏமாந்தோம், வட்டிக்கு பொறுப்பு நின்று எப்படி ஏமாந்தோம், ஆளிழுப்புக்கு பணம் கட்டி எப்படி ஏமாந்தோம், காதல் என்ற பெயரின் கீழ் எப்படி ஏமாந்தோம், வட்டிக்கு பணம் கொடுத்து எப்படி ஏமாந்தோம், வட்டி கொடுத்து எப்படி ஏமாந்தோம், எல்லாம் சாட்சிகளற்று வெறும் நம்பிக்கையின் பெயரின் கீழ் நடந்தவைதானே... அந்த நம்பிக்கையே சுக்கு நூறாகிவிடுகின்ற போது என்ன செய்ய முடியும் என்கிறார்கள்? தொடரும் தொடரில் அவர்கள் எப்படி ஏமாந்தார்கள் என பார்ப்போம். அது வரை நாம் ஏமாறாமலிருப்போம்.

# பணக்கார நகரம் வவுனியா

தேர்தலுக்கு முன்னர் வவுனியா சென்ற ஐலண்ட் நிருபர் அங்குள்ள நிலைமைகள் பற்றி எழுதியிருக்கிறார். தலை போன்ற யாழ்ப்பாணத்தை உயிரோடு வைத்திருக்கின்ற கழுத்து போன்றது வவுனியா என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் வர்ணித்திருக்கிறார். வவுனியாவில் 12 ஆயிரம் பேர் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களாக இருந்த போதும் அங்குள்ள சனத்தொகை இதை விட பல மடங்கு அதிகம். அங்கு வயதானவர்களும் இளைஞர்களும் சைக்கிளையே போக்குவரத்திற்கு பயன்படுத்துகிறார்கள். இளம் பெண்கள் தங்கள் குழந்தைச் சகோதரிகளை சைக்கிளில் வைத்துக் கொண்டு திரிகிறார்கள். பொலிசார் கூட தங்கள் றைபிள்களை தோளில் சுமந்து கொண்டு சைக்கிளில் தான் உலவுகிறார்கள்.

வவுனியாவிற்குள் நுழைவது சிக்கலான விடயம். இறம்பாவையிலிருந்து போகும் போது ஈரற் பெரியகுளத்தில் உள்ள பெரிய தடை முகாமை அடைவதற்கு முன் பல தடை முகாம்கள்... ஈரற்பெரியகுளத்தில் வாகனங்களும் ஆட்களும் கடுமையாக சோதனையிடப்படுகின்றன. வவுனியாவிற்குள் நுழைவதற்கு பாஸ் கட்டாயம் தேவை. 24 மணி நேரம், ஒரு வாரம், நிரந்தரம் என்று பல வகைகளில் பாஸ்கள். வவுனியா ஒரு பணக்கார நகரமாகி விட்டது. வவுனியாவில் வாடகைக்கு இடம் பெறுவது சிக்கலானது. காணி விலையும் வாடகையும் அதிகமாகி விட்டது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலர் அங்கு வந்து வசிக்கிறார்கள். வவுனியாவிலிருந்து இரவு 9.45க்கு புகையிரதம் புறப்படுகிறது. பெண்கள் கூட பயமின்றி அதில் பயணம் செய்கிறார்கள். வவுனியாவில் படையினரை விட மற்ற தமிழ் அமைப்பினரிடம் ஐயாயிரம் றைபிள்களும் பெருமளவு வெடிமருந்துகளும் உள்ளன. புலிகள் பூனகரியில் பறித்துக் கொண்ட ரி 55 ரக டாங்கியை ஓமந்தையில் கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வருவது தற்போது இலகுவாகி விட்டது. முன்பு கிளாலிப்பயணம் இரண்டு மணி நேரம் நீடித்தது. அத்துடன் புலிகள் ஆளுக்கு 150 ரூபா வசூலித்தார்கள். தற்போது பயணம் அரை மணி நேரத்தால் குறைந்த போதிலும் புலிகளின் பணம் ஐம்பது ரூபாவால் அதிகரித்திருக்கிறது. வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் போக 1600 ரூபா செலவாகிறது. வியாபாரிகள் கொண்டு செல்லும் பொருட்களுக்கு புலிகள் இருபது வீதம் வரி விதிக்கிறார்கள். ஆனால் வவுனியாவில் இருக்கும் வியாபாரிகள் புளொட் இயக்கத்திற்கு பத்தாயிரம் ரூபா மாதமும் டெலோவிற்கு நான்காயிரமும் கொடுக்க வேண்டும்.

அஜேஜ் தர்மவர்த்தன என்ற நிருபர் வவுனியா சென்ற போது இந்தச் செய்திகளை தொகுத்திருந்தார்.

# அமரர் வி. பொன்னம்பலம் அமரரானர்

## இலங்கையன்

இம்மாதம் ஐந்தாம் திகதி சனிக்கிழமை பின்னேரம் ஸ்காபுரோவில் தனது ஆசானும் அதிபரும், கொள்கை வாதியுமாகிய அமரர் ஒறேற்றர்(நாவலர்) சுப்பிரமணியம் அவர்களின் இரங்கற் கூட்டத்தில், தனது இருதய பலவீனத்தையும் மறந்து வழமையான தனது மேடைப் பேச்சுப்பாணியில் கம்பீரமாக தானும் தனது ஆசானும் கடைப்பிடித்து வந்த சமத்துவ சமூகக் கொள்கையை நாம் எம் வாழ்நாளில் கடைப்பிடிப்பதென திட சங்கல்பம் எடுத்தல் தான் நாம் இப்பெரியவருக்கு செய்யக் கூடிய மிகப் பொருத்தமான அஞ்சலியாயிருக்குமென்று கூறி தனது நன்றி வணக்கத்துடன் அஞ்சலியுரையை முடித்து கதிரையில் அமர்ந்த பொழுதே அவரது இருதயம் அவரடைந்த உணர்ச்சி வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் திரு வி.பொன்னம்பலம் அமரத்துவம் எய்தினர். இதை இரங்கற்கூட்டத்திற்குள் எவருமே மறக்க முடியாது. இதனல் ஏற்பட்ட அதிர்ச்சி அவரைத் தெரிந்த அவரோடு பழகிய, அன்று கூட்டத்தில் சமூகமாயிருந்த என்னைப் போன்றவர்களின் மனதிலிருந்து இலகுவாக நீங்காது அவர் உயிர் நீத்த சந்தர்ப்பமும் சூழலும் காட்சியும் மறக்க முடியாதவை.

அமரர் வீ.பி அவர்களை சென்ற நாற்பது வருட காலமாக நான் அறிவேன். அவரை ஒரு உண்மையான சமதர்மவாதியாகவும் முற்போக்குள்ள சமூகவாதியாகவுமே கண்டேன். அவர் இந்தியாவில் படித்த காலந்தொட்டு சமூகத்தில் நலிந்தோர்களினதும் தாழ்த்தப்பட்டு ஒதுக்கப் பட்டோர்களினதும் முன்னேற்றத திற்காகவே உழைத்து வந்தார். சமதர்ம அரசியலே சமுதாயத்தின் பல்வேறு பிரச்சனைகளைத் தீர்க்க வல்லது என கொள்கையோடு வாழ்ந்து, சாகும் பொழுதும் அக் கொள்கை பேசியே உயிர் துறந்தார்.

தாயகத்தில் இலங்கைக் கொம்யூனிஸக் கட்சியின் வட பிரதேசக் கிளையில் ஓர் முக்கியஸ்தராகவும், கட்சியின் பிரசாரகராகவும் பல வருடங்கள் தொழிற்பட்டு வந்தார். அவரது முற்போக்குக் கருத்துக்களும் அவற்றைத் தன் பேச்சுவன்மையால் சபையோருக்கு எடுத்துக்கூறும் பாணியும் எவரையும் கவரக்கூடியன. இந்த வகையில் அன்று நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில், அமரர் ஒறேற்றர் சுப்பிரமணியம், வரோதயாக கல்லூரியின் அதிபராயிருந்த காலத்தில் சமூகத்தின் எல்லாப்ப குதியினர்க்கும் சமாசனம் சம போசனம் என்ற கொள்கையை பாடசாலையில் மிக மனத்துணிவுடன் கிராமப்பாடசாலையாக இருந்தும் நடைமுறைப்படுத்தியதை கூறியபொழுது, நாங்கள் எங்களுக்கும் எங்கள் குழந்தைகளுக்கும், எங்கள் வயோதிபப் பெற்றோர்க்கும் செய்யும் தொழிலை எங்கள் ஒவ்வொருவரினுடைய வீடுகளில் செய்து கொண்டு மற்றவர்களுக்குச் சம்பளத்திற்கு சக்கிலியத் தொழில் செய்யும் மக்களை சக்கிலியர் என்று கூறி சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கிறேமே இது எப்படித் தர்மமாகும் என்று கேட்டு தனது சமுதாய சமத்துவக் கொள்கை பற்றிய ஆழ்ந்த உள்ளக்கிடக்கையை வெளிக்காட்டினர். இது . அவர் தாயகத்தில் தனக்கான பாணியில் எமது சமூகத்தவரிடையே இப்பொழுதும் நிலவும் சாதி அடைப்படையிலான ஏற்றத்தாழ்வுகளை அரசியல் கலை கலாச்சார மேடைகளில் சாடும் அவரது பேச்சுக்களை ஞாபகப்படுத்தியது. எம்மில் அனேகர் சமத்துவக் கொள்கையை பேச்சளவிலும் எழுத்தளவிலும் ஆதரிக்கின்றார்களேயொழிய, செயலளவில் இல்லையென்று அவர் அடிக்கடி கூறுவது எனக்கு ஞாபகத்துக்கு வருகின்றது.

சமூகத்து ஏற்றத்தாழ்வுகளைச் சாடும் பொழுது அவர் வழமையாகக் கூறும் இன்னெரு கருத்துமுண்டு. "வைத்தியசாலைகளில் இரத்தம் ஏற்றும் பொழுது ஒருவருடைய சாதி சமயங்களுக்கேற்றவாறு இரத்தங்கள் ஏற்றப்படுவதில்லை. இரத்தங்களின் வகையடிப்படையிற்தான் ஏற்றப்படுகின்றன. சாதிமான்களின் இரத்தம் சாதிக்குறைந்தவர்களின் இரத்தம் என்ற வகைகள் இல்லை" என்று கூறுவார். இவையெல்லாம் அவர் கொண்ட நிறை சமத்துவக் கொள்கையை எடுத்துக் காட்டுவனவே.

தாயகத்தில் அரசியலில் ஈடுபட்டிருந்த காலத்தில் மக்கள் நிறுவனங்களுக்கூடாகவும், இயக்கங்களுக்கூடாகவும் சமூக முன்னேற்றத்திற்காகவும், சமூக சமத்துவத்திற்காகவும் பாடுபட்டார். மல்லாகம கிராமசபை தலைவராகவும் மல்லாகம பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவராகவுமிருந்து, அவராற்றிய சமூகப்பணிகளை அப்பகுதி மக்கள் நன்கறிவர். அவர் கொண்ட அரசியல் கருத்தே அவரை இப்பணிகளில் ஈடுபடச்செய்தது.

அமரர் வீ.பி அவர்கள் தாயகத்தில் அவரது அரசியல் வாழ்க்கையின் இறுதிக்காலங்களில் தனது அரசியல் கொள்கையிலிருந்து மாறிவிட்டார் என்று கூறினவர்களுமுண்டு. ஆனல் இலங்கைக் கொம்யூனிஸ்ர்கட்சி இனம் மொழி சம்பந்தமான தனது கொள்கையைத் தொடந்து நிலைநாட்டத் தவறியமையால், அக்கட்சியிலிருந்து விலகி தமிழ் பேசும் மக்களின் இன மொழி அரசியல் சமூக சுதந்திரத்திற்காகவும் விடுதலைக்காகவும் செந்தமிழர் இயக்கத்தை உருவாக்கி, அதை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் ஒரு கூறுக்கி, அதற்கூடாக உழைத்தார். அந்தவகையில் அவர் தனது சமதர்ம சமத்துவ கொள்கையிலிருந்து மாறியவரென்று நாம் கூறமுடியாது

அவர் கனடாவில் வாழ்ந்த காலத்தில் இருதய நோயின் காரணமாக தான் புலம் பெயர்ந்த தமிழர்களின் சமூக, கலை கலாச்சார அரசியற் செயற்பாடுகளில், பங்கு கொள்ள முடியாமலிருந்ததையிட்டு அவர் மனம் வருந்தியதை நான் அறிவேன். இருந்தும் சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போது தனது இனமொழி சமூக அரசியல் கருத்துக்களை அவர் கூறுமல் விட்டதில்லை.

அமரர் ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்களின் இரங்கற் கூட்டத்தினன்று, அமரர் வீ.பி. அவர்கள் சமதர்ம சமூக அரசியற் கொள்கை மேற் தான் கொண்டுள்ள அசையா நம்பிக்கை, பற்றின் காரணமாக இன்னும் கூடிய உணர்ச்சி வசப்பட்டு உரையாற்றினதைக்க ண்டு, என்ன நடக்குமோ எது நடக்குமோ என்ற பீதியுடன் தான் கேட்டுக்கொண்டிருந்தேன். அவர் தனது அஞ்சலியுரையை முடிக்கும் வரையும் ஒன்றுமே சம்பவிக்கவில்லையென்ற சந்தோசத்துடன் இருந்த அதே நேரத்தில்,

27ம் பக்கம் பார்க்க...

## நீங்களும் French படிக்கலாம்

# ஜெயந்தீஸனின் பிரெஞ்சு-தமிழ் அகராதி

(எனது பாஷை ஞானத்தில் மையல் கொண்ட சிலர் புகலிட மக்களுக்குப் பயன்படத்தக்க விதத்தில் ஓர் அகராதியைத் தயாரிக்குமாறு என்னைக் கேட்டதுண்டு. இவர்களது ஆர்வத்துக்கு மதிப்பளித்து நான் ஓர் அகராதியைத் தயாரித்து வைத்துள்ளேன். பிரான்ஸில் வாழும் தமிழர்கள் எவ்வாறு தமது பாணியில் பல சொற்களைக் கண்டுபிடித்துள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்ட பிரஸ்தாப அகராதியிலிருந்து சில சொற்பிரயோகங்களை அங்கே பதவுரையுடன் இவ்வாரம் உங்கள் வாசிப்பிற்கு வழங்குகின்றேன்.)

---

**சப்பட்டை** (1) சீன, மற்றும் வியட்நாமியர்களைப் பட்டம் தெளிக்கக் கண்டுபிடிக்கப்பட்ட சொல். தமக்கு இப்படியொரு சொல்லைக் கண்டுபிடித்துள்ளனர் என்பது சீன, வியட்நாமியர்க்குத் தெரியுமாயின் நிச்சயமாக அவர்கள் தமிழர்களின் முகங்களையும் சப்பட்டையாக்கிவிடுவர் என்பது ஒரு அபிப்பிராயம்.

"டேய், நாகலிங்கமெல்லே உப்ப ஒரு சப்பட்டையோடை திரியுறன்."

2. கைக்கடக்கமான சிறிய போத்தல்களில் விற்கப்படும் விஸ்கி வகைகளைக் குறிப்பிடுவது. ஜாக்கெட்டுக்குள் சுலபமாக, எவருக்கும் தெரியமால் காவிச்செல்லாம். மெத்ரோ மூலைகளுக்குள் பதுங்கி நின்று டப்பென வாய்க்குள் ஊற்றிவிடலாம். குடியானவர்களின் நாசத்துக்கு சப்பட்டை சோழப் பொரி போன்றது.

"குணம், நேற்றைக்கு நீ சம்பளம் எடுத்தனி. ஓடிப்போய் ஒரு சப்பட்டை வாங்கிக் கொண்டு வா!"

**ஒழிச்சுக் கராட்டி'** பச்சை பச்சையாக உடல்களைக் காட்டி உடலுறவு செய்யும் படங்களைக் குறிப்பிடுவது. ஒழித்து ஒழித்துப் பார்ப்பதால் தான் இச்சொல் ஒழிச்சு என்று தொடங்குகின்றதன்பது மொழியாராய்ச்சியாளர்களது கண்டுபிடிப்பு. நான் பிரான்ஸ்க்கு வந்த புதிதிலே எனது Room மேட்டுகளில் ஒருவர் "வாரும் ஐஸே. ஒழிச்சுக் கராட்டி படம் பார்ப்பம்" என அழைத்தார். புறூஸ்லி நடித்த படமொன்றுக்கு என்னை அழைக்கின்றார் என நினைத்துப் போய்ப் பார்த்தபோது தான்.... சீ.....அதை எப்படிச் சொல்ல.

"தமிழ் ஒழிச்சுக்கராட்டி ஒண்டு ஓலாவித் திரியுதாக் கேள்வி. வெள்ளைக்காரியளைப் பார்த்துச் சலிச்சுப் போட்டுது... எப்படியாவது அதைத் தேடி எடுக்க வேணும்"

இடைக்குறிப்பு: எனது பழைய Room இற்கும் இந்த ஒழிச்சுக் கராட்டி வந்ததும் பார்த்தேன்.. ஒண்டுமே கிளியராத் தெரியவில்லை.

**பப்பி;** 1. இது அனைத்து விதமான விசா வகைகளையும் குறிப்பிடும் ஓர் பொதுச் சொல்.

"உவன் கமலநாதன் முண்டு பப்பி வைச்சிருக்கிறனும். உது மெய்யே?"

2. பிரெஞ்சுக் குழந்தைகள் தமது பெரிய தந்தையரைப் "பப்பி" என்றே செல்லமாக அழைப்பதுண்டு.

**சுத்துமாத்து;** சிரிக்கும் போதும் சிரித்தும், அழும் போது அழுதும், பாடும் போது பாடியும் ஆடும்போது ஆடியும் தமது காரியங்களைக் கவனித்து லாபம் சம்பாதித்து, நம்பியவர்களை நட்டாற்றில் விடும் பேர்வழிகளைக் குறிப்பிடுவது.

"டேய், சார்ஸலிலை இருக்கிறவனிட்டையோடா உன்ரை கேஸை எழுதக் குடுக்கப் போறுய். அவன் ஒரு சுத்துமாத்து.

**பீரோக் கிளீனிங்;** அலுவலகங்களைக் கூட்டித் துடைக்கும் வேலை.

"தம்பி நீர் பத்து வரிசமா பீரோக்கிளீனிங் செய்யிறீர். உம்மடை பத்திரோனை (முதலாளி) வளைச்சு என்ரை பேத்திக்கும் ஒரு பீரோக் கிளினிங் எடுத்துக் குடுமன்"

"ஆச்சி கவலைப்படாதையுங்கோ. கட்டாயம் நான் அவவுக்கு வேலை எடுத்துக் குடுப்பன்"

**கொப்பி;** வீடியோக்கசட்டுகள்

"இஞ்சரும், கொப்பி எடுக்கிற கடையிலை நீலக்கால் நண்டு விக்கினமாம்.. அதிலை ரெண்டு கிலோ மறக்காமல் வாங்கிக் கொண்டு வாரும்".

**சனம்;** அவர்களைக் குறிப்பிடுவது.

"சனங்கள் எத்தினை மணிக்காம் இங்கை வாறதெண்டது?"

**பாக்குவெட்டி;** அனைத்துவிதமான ரயில்களிலும் டிக்கெட்டுகளைப் பரிசோதிப்போர்.

"டேய்! உன்னிட்டை டிக்கெட்இருக்குது. பாக்கு வெட்டி போறேனெண்ணை நான் பாய்ஞ்சு வாறன்"

**காய்;** நல்லவர்களையும் தீயவர்களையும் குறிப்பிடப் பயன்படுவது.

காய்க்கு வேலையில்லை. ஆனு தலைக்கை கனக்க கிடக்கு உந்தக் காயை நம்பி நீ கடன் குடுக்காதை..

**தாட்டல்;** விசா இனிமேல் நேர்மையான முறையில் கிடைக்காது என அறிந்த பின்னர் நடக்கும் சடங்கு. அதாவது சொந்தப் பெயரை மாற்றி வேறு பெயரில் விசாப்போடுதல்

"விசா இல்லையெண்டு ஏனடா கவலைப்படுகிறுய். இன்னுெண்டைத் தாட்டா லைன் கிளியர்"

**கருவேப்பிலை;** CARREFOUR PLEYEL (கறெபூர் பிளெயெல்) எனும் சுரங்க ரயில் நிலையத்தினையே எம்மவர் கருவேப்பிலை என அழைப்பதுண்டு.

"கருவேப்பிலையிலை எனக்கு ஒரு வேலை. அங்கை நான் வேலை முடிஞ்சு வரேக்கை ஒரு தமிழ்ப் பெட்டை என்னைப்

ஸயன்டிஸ்ட்டாகிக் கொண்டான். நிறைய்ய்ய்ய்ய்ச் சம்பாதிக்கிறான். பென்டியம் ரெவலூஷனை முறியடித்த பெருமை கொண்ட பதினைந்து ஸயன்டிஸ்டுகளில் ஒருவனாக நம்ப பயலுமிருக்கிறான் என டெக்னோலொஜி 2020இல் படித்தபோது என்னைவிட என் கீதாதானே ஈன்ற பொழுதிற் பெரிதுவத்தாள். அதே தாய் தனது சேய் எதிர்கால மனைவியை அறிமுகம் செய்ததிலிருந்து சகலருடனும் போர்க்கொடி தூக்கிக்கொண்டாள்.

ராமுக்கு வீடியோபோன் பண்ணிப்பார்ப்போமா? அதற்குமுன் என் பிரிய சகி என்ன செய்கிறாள் என ஒரு பாதுகாப்பு நிமித்தம் க்ரொஸ் செக் பண்ணிவிடுவோம். கண்ணம்மாவைக் கேட்டேன். கீதா அடுக்களையில் இருப்பதாகச் சொல்லி அவளிடம் பெர்மிஷன் கேட்டுவிட்டு அடுக்களையை ரிவியின் இன்னோர் மூலையில் பெட்டி போட்டுக்காட்டியது. அதனுள்ளிருந்து "என்ன?" என்கிறாள். பாவி தனக்குப் பிடித்த தக்காளிக் குழம்பு வைத்துக் கொண்டிருக்கிறாள்.... "அங்கை என்ன செய்யிறாய்?" என்றேன். "பாத்தா தெரியேல்லையோ...?" என்றாள். ஓஹோ. . இன்னும் கொதி ஆறவில்லைப் போலும். வாபஸ் வாங்குவதே சாலச் சிறந்தது. "ஒன்றுமில்லையம்மா... சும்மா கேட்டனான்.." என்றுவிட்டு கண்ணம்மாவிடம் அடுக்களையை ஸ்கீரினிலிருந்து விடுதலை செய்யச் சொன்னேன். செய்தது. ராமுக்கு வீடியோபோன் செய்யச் சொல்லிக் கேட்டேன். செய்தது. மைக்ரோசிப் தயாரிக்கும் உலகின் பெரும் நிறுவனமான எக்ஸ்ரியாம் கோர்பரேஷனை கைபர் ஒப்டிக்ஸ் கேபிள் வழியாகத் தொட்டு. சிவப்பு. நீல செக்கியூரிட்டி கோட்களைத் தாண்டி என் மகனின் கம்பியூட்டர் செக்ரட்டரியுடன் பேசிவிட்டு "ராம் ஒரு மீட்டிங்கிலிருக்கிறார். அவசரமாக உடனே தொடர்பு கொள்ளவேண்டுமா?" என்று கேட்டது. "தேவையில்லை"

சரி. பொழுதுபோக ஏதாவது தமிழ்ப்படம் பார்க்கலாம் என மனம் சொல்லிற்று. ரிவியிலுள்ள லேசர் வீடியோ காட்ரிஜிலுள்ள ஐம்பது புதிய தமிழ்ப் படங்களில் எதைப் பார்க்கலாம்? ஐயோ... எதுவுமே வேண்டாம். தமிழ் நடிகைகளின் நிர்வாணக் காட்சிகளும். படுக்கையறைக் காட்சிகளுமில்லாத எந்த தமிழ் படமும் இப்போ வருவதில்லை. இந்த வயதில் உதுகளை எப்படிப் பாக்கிறது? அந்தக்காலத்து அமலா. குஷ்பு பெய்யெனப் பெய்யும் மழை! பழைய படங்கள் போட்ட வீடியோ காட்ரிஜ்க்கள் வந்திருக்காம். ஆயிரம் பழைய தமிழ் படங்கள் ஒரு சிகரட்பெட்டி சைஸ் உள்ள காட்ரிஜ்ஜுஜின் அடக்கம் என்று ஒரு விளம்பரம் பார்த்த ஞாபகம். அதை மறக்காமல் வாங்கி ரீவியுள் கொழுவிட வேண்டும். சரி... இந்தக் கிழமை பேப்பர் ஒன்று படிப்போம்! ஒரு பேப்பர் வேண்டும். கண்ணம்மாவிடம் சொன்னேன். "என்ன பேப்பர்?" "தாயகம்!" "ஹார்ட் கொப்பியா? அல்லது ஸ்கீரினிலா??" "ஹார்ட் கொப்பி!" மூன்றே மூன்று நிமிடத்தில் மேசையிலிருந்த லேஸர் பிரின்டர் தாயகத்தை கலர்கலராக பிரின்ட் பண்ணி புத்தகமாக வெளியே தள்ளியது. புரட்டிப்பார்த்தேன். முனியும். கியூரியஸும் இன்னும் புலிகளைக் கடிக்கிறார்கள். அட்..சீ....

கண்ணம்மா சமிக்ஞை செய்தது. தன் எலக்ட்ரோனிக் குரலில் "ராமின் கார் வீட்டிற்கு வருகிறது" என்றது. ரிவியின் மேல் மூலையில் சிறிய சதுரத்தை கோலமாகப் போட்டு அதனுள் ராமின் எலெக்ட்ரிக் கார் வீட்டிற்குள் அன்னம்போல நுழைவதைக் காட்டுகிறது. ராம் காரிலிருந்து இறங்குவது இப்போது வேறு கோணத்தில் தெரிகிறது. பட்ரீஷியா வந்திருக்கிறாளா? பார்க்கிறேன். காருக்கான எலெக்ட்ரிக் செல்லை சார்ஜ் செய்வதற்கான பிளக்கை ராம் மாட்டுகிறான். கதவை லொக் பண்ணுகிறான். பட்ரீஷியாவைக் காணோம். அப்பாடி...

எதுவுமே தெரியாததுபோல பேசாமல் தாயகத்தை படித்துக் கொண்டிருந்தேன். ராம் உள்ளே வந்தான். "ஹாய்.. அப்பா.." "ஹாய்..."

"அம்மா எங்கே?" என்றான் மெல்லியகுரலில். "பட்ரீஷியா வரவில்லையோ?" என்றேன் நான். 'ஓ உம் பெண்டாட்டிதான் முஞ்சியை நீட்டிக் கொண்டு இருக்கிறளே... எப்படி நான் பட்ரீஷியாவைக் கூட்டிக் கொண்டு வர?' என்பதுபோல பார்க்கிறான். "அம்மா சமைச்சுக்கொண்டிருக்கிறா..."

ராம் கண்ணம்மா அருகே போய் எலக்ட்ரானிக் மெயிலை செக் பண்ணிக்கொண்டான்.

"தமிழ்க் கடையிலிருந்தும் ஈமெயில் வந்திருக்கு. . போனமாதம் அனுப்பின அதே சாமான்களையே இந்த மாதமும் அனுப்பவோ எண்டு கேட்டிருக்கிறாங்கள். என்ன ரிப்ளை கொடுக்க?" என்றான். "கொம்மாவைத்தான் கேக்கோணும்"

முன்பெல்லாம் இங்குள்ள தமிழ்க்கடையளுக்குப் போவதே ஒரு அனுபவம். இரத்தம் சொட்டச் சொட்ட ஆட்டிறைச்சி. ஒட்டி. ஒரா வகையறுக்கள் ஒருபுறம்... கோவிலுக்குத் தேவையான சாமிப்படங்கள். கற்பூரம். சாம்பிராணி வஸ்துக்கள் மறுபுறம்! ஒரே கடையிலேயே வீடியோப்படம் வாடகைக்கு எடுக்கலாம். பாங்க் மாதிரி காசு அனுப்பலாம். சாராயம் விஸ்கி ரகசியமாக எடுக்கலாம். திருக்குறள். அர்த்தமுள்ள இந்துமதம். பாரதியார் பாடல்கள். பத்திரிகைகள். சஞ்சிகைகள் வாங்கலாம்....! 'தாயகம்' விக்கிற கடையில 'உலகத்தமிழர்' வைக்கமாட்டாங்கள். ஹூம். இப்ப என்னடாவெண்டா தமிழ்க்கடையில இருக்கிற அத்தனை சமாங்களும் வீட்டுக் கம்பியூட்டரின்ரை மொனிட்டரில திரீடி க்ராஃபிக்ஸாக மொழுக் மொழுக் எண்டு தெரியுது. தேவையானதை 'கிளிக்'பண்ணி விட்டால் வீட்டிலேயே கொண்டுவந்து டெலிவரி பண்ணிவிடுறாங்கள்!

ராம் தன்னுடைய அறைக்குப் போய்விட்டான். கொஞ்ச நேரத்தில் கீதா உள்ளே வந்தாள். "தம்பி வந்திட்டானோ?" "ம்.." என்றேன். "சாப்பிடச் சொல்லுங்கோ"

இவளும் பெட்ரூமுக்குப் போகிறாள். ஆக இரண்டும் முருங்கமரத்தில் இன்றும் ஏறிவிட்டன. நான் மட்டும் மனந்தளராமல் ரி.வியை நானூற்றிப் பதினாலாவது சனலுக்கு மாற்றும்படி கண்ணம்மாவைக் கேட்கிறேன். மாற்றியது. வெளிநாட்டுத் தமிழருக்காக தமிழக அரசு தரும் தமிழ் சட்டலைற் ஒளிபரப்பில் கர்னாடக சங்கீதம் பாடிக்

கொண்டிருந்தார்கள். கொஞ்ச நேரம் கேட்டுக் கொண்டிருந்தேன். பாடும் ராகம் கர்னாடக தேவகாந்தாரியோ அல்லது தனாசியோ என்று மயக்கமாக இருந்தது. தூக்கம் வேறு கண்ணை அரட்டியது. போய்ப்படுப்பம். அறைக்குள் போனேன். கிழவி படுத்திருந்தாள். நித்திரையோ தெரியாது. எழுப்பினால் திட்டுவாள். மெதுவாகப் படுத்துக்கொண்டேன்.

இவளும் நானும் கூட காதல் பண்ணித்தானே கல்யாணம் செய்து கொண்டோம். எனது வீட்டிலும் சரி இவளது வீட்டிலும்சரி எங்கள் காதலை மிருகத்தனமாக எதிர்த்தும்கூட நாங்கள் மசியவில்லையே. வருடக்கணக்கில் காத்திருந்தோம். கடைசியில் 'குமர் முத்திக் குரங்காக முன்னம் சனியன் ஆரையாவது கட்டட்டும்' என்ற ஆசீர்வாதத்துடன் கல்யாணமும் நடந்து முடிந்தது. இதுவரை ஒரு குறையுமில்லாமல் வாழ்ந்தும் விட்டோம். ஆக, காதலின் மகிமை தெரிந்தவள்தானே என் கிழவி. முன்பெல்லாம் புனிதக்காதல் புனிதக்காதல் என பக்கம் பக்கமாக புலம்பிய இவள்தானா இப்போ தன் மகனின் காதலுக்கு எதிர்ப்புக் காட்டுகிறாள்? ஏனடி?

அந்தப்பிள்ளை பட்ரீஷியா நல்ல பெண்ணாகத்தான் எனக்குப்படுகிறாள். ராமை லவ் பண்ணுகிறாள். அவளும் இவனையே கல்யாணம் செய்ய ஆசைப்படுகிறாள் என்பதால் நிட்சயமாக நல்ல குணச்சித்திரங் கொண்ட பெண்ணாகத்தான் பட்ரீஷியா இருக்கவேண்டும். இப்ப இங்கை எத்தினை தமிழ் முஞ்சூறுகளைப் பாக்கிறோம். அவளவையைவிட இந்த வெள்ளைக்காரி அழகாயிருக்கிறாள்.. பண்பாகப் பழகிறாள்...

விசும்பல் சத்தம் கேட்டது. என்னது...? கிழவிதான் அழுகிறாளோ...?? ஓம்...ஓம்.. கீதாவேதான் அழுகிறாள்.. டேய்... பேசாமல் படு.. ஒன்றும் கேளாதது போல கண்ணை மூடு...

கிழவி கட்டிலில் எழுந்து உட்கார்ந்தாள். விம்மினாள். "நீங்களும் ஏன் என்னோடை பேசுறியளில்லை.. நீங்களும் அவனோடை சேந்திட்டியள்.." விசும்பல்.

கிழவி கொழுவுகிறாள்... டேய் பேசாமலிரு...

"எனக்குத் தெரியும்... நீங்களும் என்னை பிழையா நினைச்சுத்தான் என்னோடை கதைக்கிறியளில்லை...." விம்மலும் விசும்பலும் கேவலாகி அதிர்வெண்ணை அதிகரித்தது. எனக்கு பகீரென்றது. கிழவி இப்படி அழுவதில்லையே.. யுன் கண்ணில் நீர் வழிந்தால்....

"ஏய்....ஏய்.....ஏனிப்ப அழுகிறாய்?"

"சும்மாயிருங்கோ...! உங்களுக்கும் அவனுக்கும் இப்ப என்னைக் கண்டா பிடிக்கிதில்லை...."

"ஐயோ... இல்லையடி... நீதானே அவன் தன்ரை கலியாணத்தைப்பற்றி பேசியதிலையிருந்து முஞ்சையை நீட்டிக் கொண்டு திரியிறாய்.. உனக்கு அந்த பட்ரீஷியாவைப் பிடிக்கேல்லை எண்டு எனக்கும் விளங்குது. அதாலை நானும் எதுவும் உனக்கு சொல்லேல்லை.."

சுமார் இரண்டு நிமிடம் வரை மௌனம்.

"சீ...எனக்கு அந்த பட்ரீஷியாவை பிடிக்கேல்லை எண்டு சொல்லாதையுங்கோ.... உண்மையிலை என்ரை மகன் ஒரு வெள்ளைக்காரியைக் கட்டுறதுதான் எனக்குப் பிடிக்கேல்லை....."

"என்ன?.." என்றேன். ஒன்றாண்டாலும். கிழவிக்கு தட்டிவிட்டதோ? முப்பது வருடத்துக்கு மேல் கனடாவில் வாழ்ந்துவிட்டு இப்படி கதைக்கிறாளே....

"உனக்கென்ன விசரே...!?"

"ஓ... எனக்கு விசர்தான். ஆனா நீங்களெல்லாம் படு புத்திசாலியளில்லே.. உங்கடை தலையை யூஸ் பண்ணி கொஞ்சம் யோசிச்சுப்பாருங்கோ. முந்தி நாங்க இஞ்சை வந்த காலத்தை யோசிச்சுப்பாருங்கோ.. கறுப்புத்தோல் கூலிக்காரரா திட்டுவாங்கித் திட்டுவாங்கி ரெஸ்ரோரான்டிலை கோப்பை கழுவவும், பாக்டரியளிலை முதுகு உளைய நிண்டு முறியவும் எண்ட நிலமையிலை இஞ்சை வந்த ஆக்களில்லே நாங்கள்! ஆனா ஏதோ புத்திசாலித்தனமா பிள்ளையை படிக்கவச்சம். அவனும் மூளைகாறன். நல்லா வந்திட்டான். அதுக்காக பழசை மறக்க முடியுதோ.. யோசிச்சுப்பாருங்கோ. முந்தி நாங்க வேலை செய்த இடத்திலையும்சரி, வெளியிலையும்சரி எங்களுக்கு என்ன மரியாதை கிடைச்சது? இந்த ஊத்தைக் கலர்த்தோலை ஆர் மதிச்சவங்கள்? இப்ப அதே தோல் வைச்சிருக்கிற எங்கட மகனுக்கு ராச மரியாதை"

"ஹேய்...ஹேய்..... அலம்பாதையும்.... உதுக்கும், ராமின்ரை காதல் கலியாணத்துக்கும் என்ன சம்பந்தம்?"

"இருக்கே...! இதே ராம் ஒரு ரெஸ்ரரான்டிலை உங்களை மாதிரி கோப்பை கழுவிக் கொண்டிருந்தா பட்ரீஷியா அவனைக் கலியாணம் பண்ணுவாளா? இல்லை காதல்தான் பண்ணுவாளோ? இவளவையளுக்கெல்லாம் அவன்ரை பொஸிஷனைப் பாத்த பிறகுதான் லவ்வே வந்திருக்கு எண்டுதான் நான் சொல்லுவன். இப்பிடிப்பட்ட உவளவை எங்களுக்குத் தேவையோ? எங்களை அழுக்குமாதிரி பாத்த, பாக்கிற சனமுங்கோ இது... கஷ்டப்படுகிறபோது நாங்க தேவையில்லையாம்... ஆனா நல்லா வந்தா மட்டும் அதே ஆக்கள் தேவையாம். அதுக்கு லவ் எண்டு ஒரு பொய்ப் பூச்சு. எங்கடை கூட்டத்திலையிருந்து கஷ்டப்பட்டு பெரிய ஆளா வந்தவன் என்ரை மகன். எங்களைப்பற்றின விளக்கமேயில்லாத கூட்டத்திக்கை போனா கரைஞ்சில்லோ போயிடுவான். இஞ்ச பாருங்கோ... எங்கட ஊரில இன்னும் எத்தினை பெட்டையள் தவிக்குதுகள். அதிலை ஆரையெண்டாலும் இவன் ஏன் கட்டக்கூடாது? ஆரையெண்டாலும்.... பணக்காரியோ.. பிச்சைக்காரியோ... எந்தச் சாதியோ... எந்தச் சமயமோ... ஆரையெண்டாலும் கட்டட்டும். எங்கடை பெட்டை ஒண்டுக்கு நல்ல வாழ்க்கையை இவன் கொடுக்கட்டும். இவளவைக்கு வேண்டாம்... ஐயோ.. வேண்டாம். பிளீஸ்..... நீங்களாவது இவனுக்கு புத்தி சொல்லுங்கோ..." அழுகிறாள்.

போச்சுடா சாமி.. 2019இல் வந்து இப்படி ஒரு பிரச்சனையோடை இவள் நிக்கிறாள். இதுவே 1994 எண்டா 'இது ஒரு விசர்க்கதை' எண்டு சொல்லியிருப்பன்.

# உலக அழிவு பற்றி தீர்க்க தரிசனங்கள் – மதங்கள் – சோதிடங்கள்

சிவப்பிரகாசம்

"இனி 2000 சித்திரையில் சனி செவ்வாய் வியாழன் மட்டுமன்றி சூரியனும் மேடராசியில் இணைகிறது. வாக்கிய பஞ்சாங்கப்படி புதன் கூட சில நிமிடங்களுக்கு இணைகிறது. அவ் வேளையில் காலசர்ப்பமும் (இரண்டு பாம்புக்கும் இடையில் கிரகம் யாவும் அடைபடுதல்) வருகிறது. அப்போதாவது ஏதேனும் நிகழும் என நாம் அச்சம் கொள்ள வேண்டுமா?"

(தாயகம் யூலை 93 இதழில்)

பல இந்து சோதிட நூல்கள் இவ்வாறன இணைவு பெரும் அழிவுக்கு வழிவகுக்கும் என கூறுகின்றன. இந்த நூல்கள் யாவும் ஆயிரம் வருஷத்துக்கும் முந்தியவை. 1998 ல் நிகழ இருக்கும் வியாழனின் "அதிசாரம்" அதைத் தொடர்ந்து நிகழக் கூடிய அதிபயங்கர அழிவுகளை ஊர்ஜிதம் செய்வது போல் அமைந்திருப்பதும் அதிசயமாக உள்ளது. இது போன்ற அதிசாரங்கள் அனர்த்தங்கள் நிகழ முன்னர் ஏற்படுவது பல முறை அவதானிக்கப்பட்டுள்ளது.

"வருஷம் ஆயிரத்து தொளாயிரத்து
தொண்ணூற்று ஒன்பது
ஏழு மாதங்கள்
ஆகாயத்தில் இருந்து அவன் வருவான்
பயங்கரங்களின் அரசன் அவன்
'மொங்கோல்' பேரரசனுக்கு உயிரூட்டி
அவன் வருவான்
அதன் முன் செவ்வாய்
சந்தோசமாய் முடியேறும்"

இது பிரான்சு நாட்டுத் தீர்க்கதரிசியான Nostradamus என்பவரால் 500 வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட பிரெஞ்சு சுலோகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. பயங்கரங்களின் அரசன் எனக் குறிப்பிடப்பட்டது போர் என்பது பலருடைய கருத்து. இந்த தீர்க்கதரிசி எழுதிய பல விஷயங்கள் நடந்திருப்பினும் வருஷம் குறிப்பிட்டு எழுதப்பட்ட ஒரே ஒரு விஷயம் இதுவாகும். இதுவே பலருக்கு அச்சத்தை கொடுத்துள்ளது. ஆம் இன்னும் ஆறு வருஷங்கள்தான் இருக்கிறது. மூன்றும் உலகப்போருக்கும் அதைத் தொடர்ந்த அழிவையும் இது குறிக்கலாம் என பலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

கிறிஸ்தவ யூத சமயங்களின்படி பரிசுத்த ஆவியின் ஆட்சியான 'ஆயிரம்' வருட காலம் நிறைவுக்கு வந்து விட்டது எனவும் கடைசித் தீர்ப்பு இறுதி நாட்கள் என பைபிளில் உள்ள காலம் நெருங்கிவிட்டது எனவும் சிலர் குறிப்பிடுகிறார்கள். கி.பி 999ம் ஆண்டு கடைசி நாளும் இதே போல கிறிஸ்தவர்கள் பலர் நம்பி பயந்து கொண்டு இருந்ததாக வரலாறுகளில் கண்டிருக்கிறோம். இந்த கடைசித் தீர்ப்பு பற்றி இஸ்லாம் மதத்திலும் இருப்பதாக அறியப்படுகிறது. இந்து சமயத்தில் இது பற்றிய நிலை என்ன?

இந்து மதத்தின் ஒரு பகுதியான சோதிடத்தின்படி நான் மேலே எழுதுவது போல அழிவுக்கான சாத்தியக்கூறுகள் இருப்பினும் 'கடைசித் தீர்ப்பு இறுதி நாட்கள்'க்கான காலம் வந்துவிடவில்லை. 'துஷ்டநிஷ்கிரக சிஷ்ட பரிபாலன'த்துக்கான அவதாரமாகக் கருதப்படும் கல்கி தோன்றிவிட்டதற்கான அல்லது தோன்றப் போவதற்கான காலம் அண்மையில் இருப்பதாக கிரகங்களின் சேர்க்கைகள் ஊர்ஜிதம் செய்யவில்லை. கடவுள் அம்சமுள்ள எந்த அவதாரத்துக்கும் இந்த நூற்றாண்டு இறுதியில் இந்து சோதிடப்படி இடமில்லை. அதே போல கல்கி அவதரிக்கப் போவதாக மத நூல்களில் எழுதப்பட்டுள்ள காலமும் இதுவல்ல.

"தனது சிம்மாசனத்தில் இருந்து
கிழக்கு நாட்டில் தோன்றியவன்
ஒரு நாள் வருவான்
ஆகாயத்தைக் கடந்து
நீரைக் கடந்து
பனிமலையைக் கடந்து
'அபினைன்' க்கும் மேலாய்
பிரான்சை காணவருவான்
தனது பிரம்பினால்
அழுத்துவான்"

இதுவும் நொஸ்ரடாமஸ் கூறியது. எதையும் நாம் தற் ஷபோதய சூழ்நிலைக்கேற்ப அர்த்தம் கொள்கிறோம். ஆனால் இவரின் தீர்க்கதரிசனங்கள் கி.பி 7000 வருஷங்கள் மட்டும் பரந்துள்ளது மட்டுமன்றி ஒரு வரிசைக்கிரமத்தில் எழுதப்படவும் இல்லை. காலங்கள் தெளிவாக விளங்க முடியாதவை. மேலே கூறப்பட்டது கல்கியின் அவதாரம் பற்றி இந்து சமய நூல்களில் கூறப்பட்டுள்ள பல விஷயங்களை ஒத்திருப்பது அவதானிக்கப்பட வேண்டியது.

"உலகத்தின் அந்த இறுதி நாட்கள்
அப்போ
சனி வேகம் குறைவாய்
மீளத் திரும்பும்
..............."

(மீதி பாடலின் அர்த்தம் புரிந்து கொள்வது கடினமானது. அது மறு அவதாரம் பற்றியதாய் இருக்கும் என மேல் நாட்டு ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.) சனியின் நீண்ட வக்கிர காலத்தை அப்பாடல் குறிப்பதாக இருக்கலாம். நிச்சயமாக கி.பி 2000 ஆண்டில் அப்படி வக்கிரம் அமையவில்லை.

"உயிரற்ற உடல் இனியும் பலியல்ல
இறந்த நாளே பிறந்த நாளாகும்
புனித உயிர்கள் பேரின்பம் பெறும்
அழியாப் பரம்பொருளைக் கண்டவுடன்"

நொஸ்ரடாமஸ் எழுதிய தீர்க்கதரிசனம் மறுபிறப்பை முழுமையாக ஆதரிக்கிறது. அவதாரத்தையும் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் மறுபிறப்பையும் அவதாரத்தையும் ஆரம்பத்தில் இருந்தே கருப்பொருளாய் கொண்டது இந்து சமயம் மட்டுமே. இதை இங்கே நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் அவதாரம் எதுவும் இந்த நூற்றாண்டின் இறுதியில் இல்லாத படியால் பாரிய மாற்றத்துக்கு கி.பி2000ல் சாத்தியமில்லை.

"அந்த இரவில்.....
அது சூரியனோ அங்கே காண்பது!
வானத்திலே இரைச்சல் சத்தம்
அங்கே போர் தொடர்கிறது
விலங்குப் பேச்சும் காதில் விழுகிறது"

இது கல்கி பற்றியும் கல்கி நடத்தப்போகும் போர்கள் பற்றியும் புராண நூல்களில் கூறப்பட்ட விஷயங்களை ஒத்திருக்கிறது. ஆனால் மேலைத்தேச ஆய்வாளர்கள் இது வேறு கிரகத்தில் இருந்து வரும் உயிரினங்களும் பூமிவாசிகளுக்கும் இடையில் நடைபெறப்போகும் போர் பற்றியதே அந்தப் பாடல் என கூறியுள்ளனர். பல வானசாஸ்திர விஞ்ஞானிகள் கருத்துப்படி கண்டுபிடிக்கப்படாத இன்னுமொரு கிரகம் இந்த சூரிய குடும்பத்திலேயே உள்ளது. ஆயிரக்கணக்கான வருஷத்துக்கு ஒருமுறை அந்தக்கிரகம் சுழல்பாதையில்

21ம் பக்கம் பார்க்க..

# சென்னையில் பத்திரிகையாளர் தாக்கப்பட்டார்

யல்வாதி ஒருவர் லஞ்சம் வாங்குவது குறித்து ரணை செய்த நிருபர் ஒருவர் துகில் உரியப்பட்டு ப்பட்ட சம்பவம் சென்னையில் நடைபெற்றிருக்கிறது. மலர் பத்திரிகையின் பகுதிநேர நிருபரான ஆறுமுகசாமி நிருபர் அரசியல்வாதி ஒருவர் பற்றி எழுதிய ரையின் விளையே இந்தத் தாக்குதல் என்று கூறப்படுகிறது. 400 பேர் வரையில் இந்த அரசியல்வாதிக்கு லஞ்சம் த்ததாக கூறிய விபரங்கள் கட்டுரையில் வந்திருந்தன. துலேயே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக படுகிறது.

தமிழ்நாட்டில் பத்திரிகையாளர்களுக்கும் அரசுக்கும் டயில் மோதல்கள் ஏற்பட்ட வண்ணமே இருக்கின்றன. நூறு பத்திரிகையாளர்களுக்கு எதிராக ஜெயலலிதா நட்ட வழக்கு போட்டிருந்தார். அமெரிக்க வெளிவிவகார மச்சும் தமிழ்நாட்டில் பத்திரிகைச் சுதந்திரம் சிக்கலில் ளதாக தெரிவித்திருக்கிறது. தமிழ்நாட்டில் திரிகையாளர்களும் பத்திரிகை அலுவலகங்களும் கப்பட்டது பற்றிக் குறிப்பிட்டே அமெரிக்க அமைச்சு தத் தெரிவித்திருந்தது. ஜெயலலிதா பதவிக்கு வந்த னர் சுமார் பத்து பத்திரிகையாளர்கள் கப்பட்டிருக்கின்றனர்.

கமுதியில் பஸ் நிலையத்தில் நின்ற நிருபரை நால்வர் ரது மோட்டார் சைக்கிளில் இருந்து இழுத்து ராலும் போத்தல்களாலும் அவரைத் தாக்கினர். விழக்கும்வரை இவர் தாக்கப்பட்டதாக தினமலர் ரியர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். இதுகுறித்து வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# விஜேவீரவின் மகள் நற்கொலை முயற்சி?

கூடுதலாக மாத்திரைகளை உட்கொண்டதால் கொழும்பு து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள றோகன ழவீரவின் 14 வயது மகளின் உயிரைப் பாதுகாப்பதற்காக வித முயற்சிகளிலும் ஈடுபட்டு வருவதாக வைத்தியசாலையைச் சார்ந்த சிரேட்ட மருத்துவ தியோகத்தர் கூறினர். கடந்த வெள்ளியிரவு வரை பிள்ளையிடம் எவ்வித வாக்குமூலத்தையும் பெறவில்லை று கூறிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் இது தொடர்பாக பிள்ளை சிகிச்சை பெற்று வரும் வார்ட்டிலிருந்து தியோகபூர்வமான அறிவித்தல் எதுவும் கிடைக்கவில்லை ந் கூறினர். இச்சிறுமி சிகிச்சை பெற்று வரும் ட்டுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் லிசார் கூறினர். இச்சிறுமி தொடர்பாக எந்த தகவலகளையும் ளியிட முடியாது என பொதுவைத்தியசாலையைச் ந்த வைத்தியர்களும் தாதிமார்களும் கூறினர். அத்துடன் பிள்ளையின் உடல் நிலை தற்போது தேறி வருவதாக ழும்பு பொதுவைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஒலிவ் ணண்டோ கூறினர்.

# பிரப்பங்குளத்தில் மோதல்

வவுனியாவில் பிரப்பங்குளப் பகுதியில் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் நடைபெற்ற மோதலில் ஆறு புலிகளைக் கொன்றதாக இராணுவம் தெரிவித்துள்ளது. இதில் இராணுவத்தினர் ஒருவரும் கொல்லப்பட்டார். மாமடுவவில் பாதுகாப்பு முன்னணிப் பகுதியில் மூன்று கிலோ மீற்றர் உள்ளே புலிகளின் முகாம் ஒன்றின் மீதே இராணுவம் தாக்குதல் நடத்தியதாகவும் உதவிக்கு ஹெலிகொப்டர்களும் தாக்குதலில் ஈடுபட்டதாகவும் ட்ராக்டர் ஒன்றும் இன்னொரு வாகனமும் ஹெலிகொப்டரால் தாக்கி அழிக்கப்பட்டதாகவும் இராணுவச் செய்திக் குறிப்பு ஒன்று கூறுகிறது.

அந்த முகாமில் இருந்து உள்ளூர் மோட்டார் குண்டுகள், குறுங்குண்டுகள் என்பனவற்றுடன் உணவுப் பொருட்கள் மீட்கப்பட்டதாகவும் புலிகள் இந்த தாக்குதலை எதிர்பார்க்காதபடியால் அவர்கள் எந்த வித எதிர்ப்பையும் கொடுக்கவில்லை என்றும் காயமடைந்தவர்களுடன் காட்டுக்குள் தப்பியோடியதாகவும் சிரேட்ட இராணுவ அதிகாரி ஒருவர் கூறினர்.

# இலங்கையரைக் கவனிக்காத ஹோட்டல்கள்

இலங்கையரை விட வெளிநாட்டாரை உபசரிப்பதில் கவனம் செலுத்தும் உல்லாசப் பயண ஹோட்டல்களின் அனுமதிப்பத்திரங்கள் ரத்துச் செய்யப்படும் என்று தொண்டமான் கூறியுள்ளார். சொந்த நாட்டிலேயே ஹோட்டல்களில் இரண்டாந்தர கவனிப்பு நடைபெறுவதை அனுமதிக்க முடியாது என்று அவர் கூறியுள்ளார்.

பல ஹோட்டல்கள் வெளிநாட்டாரை மட்டும் உபசரிப்பதாகவும் உள்ளூர்க்காரர்களைக் கவனிப்பதில்லை என்ற குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் போதே உல்லாசப்பயணத்துறை அமைச்சர் தொண்டமான் இவ்வாறு கூறியுள்ளார்.


கிறிஸ்தவ திருமணங்களில்

மணப்பெண்ணிற்கான தலைச்சோடனை, அலங்காரப் பொருட்கள்

குறைந்த விலையில் வாடகைக்கு பெற்றுக் கொள்ள

மாஜி 796 2672

பூங்கொத்துக்கள் நீங்கள் விரும்பிய வடிவங்களில் பெற்றுக் கொள்ளலாம்

Net, Colorful Flower Bouquet, Flower Basket



# ஏ.ஆர்.கே மார்க்கட்

**31-35 ST.DENNIS DR**

**(DON MILLS/EGLINTON)**

**(416) 421 3429**

இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்,
பால் பழங்கள், உடன் மரக்கறி
வகைகள், இறைச்சி, மீன்,
கடலுணவு வகைகள்,
கனடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் ...

தமிழ், ஹிந்தி வீடியோப்
படங்களின் ஒரிஜினல் பிரதிகளை
வாடகைக்கும் விற்பனைக்கும்
பெறலாம்

CD, Audio

**மலிவு விலையில்**

# A.R.K MARKET

இந்த
வருடத்திற்கான
வருமானவரிப்
பத்திரங்களை
பூர்த்தி செய்ய
தொடர்பு
கொள்ளுங்கள்.
குறைந்த
செலவில்
விரைவான
சேவை

# தமிழ் தமிழ் என்பார் தரணியிலே தம் தமிழோ பரணிலே

**அருணன்**

தமிழ் வளர்ப்பதாக கூறிக் கொண்டு தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் போட்டிகள் வைத்து பரிசில்கள் கொடுப்பதால் மட்டும் தமிழ் வளர்ந்து செழிக்குமா?

வளர்ச்சி என்னும் போது உள்ளதில் இருந்து ஆரோக்கியமான உயர்வு என்பதே பொருள். முதலில் உள்ளது உள்ளபடி இருக்க வேண்டும். அதாவது அடிப்படையுடன் இது வரையும் எழுந்த வளர்ச்சியும் சிதைவின்றி இருக்க வேண்டும். அதே நேரம் வளர்ச்சி நோக்கில் ஆரோக்கியமான மாற்றங்களும் சில சமயங்களில் ஆரோக்கியம் கைவிடுதல்களும் சிதைவு என கணிப்பில் சேராதன.

அடுத்து உள்ளதை உள்ளபடி பேணுவதால் மட்டும் வளர்ச்சி வந்து விடாது. அல்லது உள்ள பழம் பெருமைகளைப் போற்றுவதாலோ. நூல்களின் எண்ணிக்கைகளை கூட்டுவதாலோ வளர்ச்சி வந்து விடப் போவதில்லை.

மொழியின் பரிணும நகர்வில் ஏற்ற இறக்கங்கள் வழமையே. எனினும் இறக்கங்கள் ஏற்பட்ட காலம் மொழி மேல் இருந்த கவனம் வேறெதிலோ சாய்ந்ததின் விளைவே இந்த இறக்கத்தின் காரணமாய் அமைகின்றது. தமிழைப் பொறுத்தவரை இப்போது தமிழர் கவனம் அரசியலில் சாய முனைகிறது. அதிலும் ஈழத்து தமிழர் கவனம் அரசியல் முனைப்பான யுத்தத்தின் சாய்வில் இருக்கின்றது. ஆக இக்காலம் தமிழின் பரிணுமத்தில் ஒரு இறக்கத்தின் ஆயத்தமே.

இக்காலகட்டத்தில் தமிழ் தமிழ் என பேசிக்கொள்ளும் சங்கங்கள், தாபனங்கள், தமிழின் மேம்பாட்டுக்கு என்ன செய்து விட்டன? எந்த உணர்ச்சிகளையும் கூட தமிழில் விளங்கப்படுத்த தமிழ் சொற்கள் தாராளமாய் இருக்கின்றனவே என சொல்லிக் கொள்வோர் கூட தமிழுக்கு என்ன செய்து விட்டார்கள்? தமிழ் சொற்கள் எத்தனையோ தமிழர் நினைவுச் சுவட்டிலிருந்து உதிர்ந்து கொண்டிருப்பதை யார் மனதில் வாங்கிக் கொள்கிறீர்கள்? இவ விஞ்ஞான யுகத்தில் புதிய பிறப்பெடுக்கும் விஞ்ஞான கலைச் சொற்களும் புதிய கண்டுப்பிடிப்புக்களின் அந்நிய மொழிச்சொற்களும் சரியான தமிழின்றி அந்தந்த உச்சரிப்புகளுடன் தமிழர்களால் சாதாரணமாய் சுவீகரிக்கப்படுகின்றன. இலக்கணத்தில் திசைச் சொற்கள் உண்டே என நிம்மதியாய் இருப்பதனுல் தமிழ் இலக்கணம் தப்பித்துக் கொள்ளலாம். ஆனுல் அந்த திசைச்சொற்களையே உள்வாங்கி தமிழைப் பூசி எழுத ஆரம்பிக்கையில் பல சமயம் இலக்கணம் முழி பிதுங்கும் அல்லது சரியான பூர்வீக உச்சரிப்பைக் கூட தர தமிழ் நெடுங்கணக்கில் எழுத்து இல்லாமலிருக்கும். இந்த லட்சணத்தில் எதையும் விளக்க வார்த்தைகளா இல்லையெனும் சவால் வேறு!

தமிழில் 'காதல்' எனும் அழகான சொல் தமிழர்களால் பேசப்படுவது அருகி விட்டது. ஆங்கில சொல் சொல்வதிலே அனேகரின் மோகம். காதல் எனும் சொல் தற்போது எழுத்தில் வாழ்ந்தாலும் இன்னும் காலம் நகர அதுவும் இல்லாமல் போகலாம். இன்னும் குசினி, கதிரை, கக்கூசு என்பன போன்று இதுவும் அன்னிய சொல்லா? தமிழ் சொல்லா? என்று பேதம் அறிந்து கொள்ளப்படாமல் லவ்வும் தமிழாக நம்பப்படலாம். இதுபோலவே இசை, படம், நடனம்.... இப்படி பல தமிழிலிருந்து நழுவிக் கொள்கின்றன.

அத்துடன் சில தமிழ் சொற்களை சொல்வதற்கு தமிழருக்கு நா கூசுவதுண்டாம். இது தமிழர் பண்பாடாம். ஆனுல் இதே கருத்துப்பட பிறமொழியில் சொல்வார். இவற்றில் சில பாலியல், முத்தம், உடலுறவு....... ஆனுல் மொழி ஏதெனில் அது கருத்தின் ஊடாகும்.

இது ஒருபுறமிருக்க தமிழர் தமிழாய் சொல்லும் சொற்கள் தகாதென சொல்லும் தமிழரும் உளர். உதாரணமாக சவக்காலே, சவப்பெட்டி என்பவற்றில் வரும் சொல் தகாததாம். மூத்திரம் பண்பற்றதாம். இவர்கள் பிணப்பெட்டியென்றே மாட்டுச்சலம், நாய்சலம் என்றே சொல்லிக்கொள்ளும் பண்பாடா..... வாழ்க நின் தமிழ் தொண்டு!

தமிழ் சொற்கள் பல நூறுகள் கைநழுவிப்போனதும் உண்மைதான். ஆனுல் இருப்பதையாவது காபாந்து போகும் எண்ணம் ஏன் இல்லாமல் போனது? இனி தேவையானதின் புதிய தோற்றம் ஏன் அரும்பாமல் போனது? இதை நிகழ்த்த தனி ஒருவரால் முடியாமல் இருக்கலாம். ஆனுல் இப்போ வையம் பூராவும் பரவப்பட்டு காணப்படுவதுடன் ஆங்காங்கு நிறுவப்பட்ட சங்கங்கள், ஸ்தாபனங்கள் இயக்கங்கள் என்பவற்றுல் இது நிச்சயம் முடிந்திருக்கும். ஆனுல் நடக்கவில்லை. அன்றன்றுடு உருவாகும் பிற மொழிச் சொற்கள் கண்டுப்பிடிப்புகள் என்பவற்றுக்கு ஆங்கில, பிரான்சிய ஸ்பானிய, ஜேர்மனிய, ஏன் மலேசிய மொழியில் கூட உடனே அவ்வவ் மொழிப்பதங்கள் அறிமுகப்படுத்தப்படும் போது தமிழில் மட்டும் ஏன் முடியாமல் போனது? மொழியை மேம்படுத்தும் அதிகாரம் இருந்தும் தமிழ் நாட்டு அரசால் கூட இது கவனிக்கப்படவில்லை. தமிழ் ஆராய்ச்சி மகாநாடு என்று கூட்டப்படும் மகாநாடுகளில் பழைய இலக்கியங்கள் ஆராய்ந்து போற்றப்பட்டன. ஆனுல் அழிந்து போகும் தமிழ் சொற்களை சீரமைக்க எம் முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனுல் எழுத்து சீர்திருத்தம் அறிமுகமானது ஒரு நல்ல காரியம். அதையும் எத்தனை பேர் எதிர்த்தனர் அதிலும் ஈழத்தில் பல காலம் ஆதரவு இருக்கவில்லை விடுதலைப்புலிகள் தான் பல காலம் ஆதரிக்கவில்லை. அவர்களது வெளியீடுகள் எதுவும் அதனை ஆதரிக்கவில்லை. ஆனுலும் எம்.ஜி ஆர் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட எழுத்து சீர்திருத்தத்துக்கு விடுதலை புலிகளும் இங்கு தலைசாய்ந்தனர். புலிகளின் பிரயோகத்தில் உள்ள உலங்குவானூர்தி என்னும் சொல் நிலைத்து நிற்கும் சொல். அவ்வொன்றைச் சொல்லும் போது பிற பத்திரிகைகளும் தனிநபர்களாலும் இச்சொல் பின்பற்றப்பட வேண்டும். அப்போது தான் இச்சொல் நிலைத்து நிற்கும்.

சங்கிலிக் கொம்பு பல குழப்பங்களை தீர்த்தது. சீர்திருத்தத்துக்கு முன் அரிச்சுவடி தொட்டவர்கள் சீர்த்திருத்தத்தில் எழுதத்

சிரமப்பட்டாலும் வாசிக்க சிரமப்படவில்லை. இதுதான் இவ் எழுத்து சீர்திருத்தத்தின் வெற்றி. இதனுடன் தமிழின் சீர்த்திருத்தம் தீர்ந்து விட்டதா?

தமிழ் நெடுங்கணக்கில் உயிர் எழுத்துக்களில் கூட சில எழுத்துக்களின் பாவனை மிக மிக அருமருந்தாயுள்ளது. ஃ எனும் ஆய்த எழுத்தினை பலர் பாவிப்பதேயில்லை. காரணம் இதுபோன்ற சொற்கள் அற்பமே. அதேபோல் ஔ(வன்ன) இதுவும் பாவனையில் குறைவு அத்துடன் இவ் எழுத்தில் பலருக்கு குழப்பமும் கூட. இவ் எழுத்துக்கு பிரதியீடாக புதிய எழுத்தை உருவாக்கினல் என்ன? இவை கொண்ட புதிய சொற்களை உருவாக்கினல் தான் என்ன? பிற மொழிப்பதங்களுக்கு தமிழ் பதம் கொடுக்கையில் மொழிப்பெயர் கருத்துப்பட சொற்களைப் படைக்காமல் இலக்கணம் வரம்பில் நின்றெனினும் கேள்விப்படாத புத்தம் புதிய சொற்களை பாவனையில் குறைந்த இத்தகைய எழுத்துக்களை உள்ளடக்கி உருவாக்கினல் என்ன? இதேபோல் உயிர் மெய் எழுத்துக்களிலும் பலதின் பாவனை குறைவாயேயுள்ளது. ஞகர முகர வரிசையும் கூடுதலாய் பாவனையில் இல்லை. ஔ கொண்ட உயிர் மெய் எழுத்துக்களும் பாவனையில் குறைவே. மேலும் திசைச்சொற்கள் எனும் பிறமொழிச் சொற்களை உள்வாங்கும் போது உச்சரிப்பில் பிசகுகள், பிரள்வுகள் உருவாவதற்கு காரணம் எமக்குள்ள 247 எழுத்துக்களின் உச்சரிப்புக்குள்ளும் அடங்கிக் கொள்ளாத உச்சரிப்புக்களுக்கான எழுத்துக்கள் பல எம் நெடுங்கணக்கில் இல்லை. எனவே புதிய எழுத்துக்கள் உருவாக்கப்படலாம். அல்லது ஸ்பானிய பிரான்சிய முறைபோல் குறியீட்டு வழி வகை செய்யப்படலாம். இதையெல்லாம் யார் செய்ய முடியும்? தமிழ் தமிழ் என கூக்குரல் போடும் அரசாங்கம் செய்ய முடியும். தமிழ் அரசு அமைக்க கடும் பிராய்த்தனம் செய்ய முயல்வோர் செய்யமுடியும். சர்வதேச ரீதியில் இணைப்புக்கள் கொண்ட தாபனங்கள் செய்ய முடியும். ஆனல் செய்ய முயல்வதில்லை. தமிழ் இலக்கியங்களை ஆராய, தமிழ் பரிணமத்தை ஆராய பட்டங்கள் கொடுப்பதும் இலக்கியத்தை வளம் படுத்த போட்டிகள் வைப்பதும் நல்லவிடயங்கள் தான். ஆனலும் அதுமட்டும் தமிழை வளர்த்து விடாது.

தமிழ் தமிழ் என்ற அரசியல் வாதிகள்தான் என்ன சாதித்து விட்டார்கள்? வேறு நாட்டு தலைவர்கள் பிறநாட்டுக்குச் சென்றலும் தம் மொழியில் தான் பேசிக்கொள்ள தமிழ் தலைவர்கள் மட்டும் ஆங்கிலத்தில் பேசிக்கொள்வர். தங்கள் குரலிலே பேசிக்கொண்டால் தான் அதன் பெறுமானத்தை உணர்த்தலாம் என ஞாயப்படுத்திக் கொண்ட இவர்களின் பெறுமானம் எதையும் சாதித்ததாய் சரித்திரம் இல்லை. அப்பத்துக்கும் இடியப்பத்துக்கும் ஆங்கிலம் சொல்லிக்கொடுத்த எம் தமிழருக்கு வேற்று மொழிச் சொற்களுக்குரிய தமிழ் சொற்களை சொல்லி வைக்க வகை தெரியாமல் போய்விட்டது.

புதிதாய் சொல்லிக் கொள்ளப்படும் கணனி எனும் சொல் கொம்பியூட்டருக்கும் பாவிக்கப்பட்டு கல்குலேட்டருக்கும் பாவிக்கப்பட்டு கொம்பியூட்டருக்கும், கல்குலேட்டருக்கும் உள்ள பேதத்தை குழப்பிக் கொள்ள வேண்டி ஏற்பட்டு போய்விட்டது. கொம்பியூட்டர் என்றல் 'இலகுணி' என்பது என் கண்டுபிடிப்பு தமிழ்ப்பதம். இதை யார் அங்கீகரிக்க முடியும்? இதற்கான வழிவகை எம் தமிழ் குடியில் இருக்கின்றதா? இதேபோல் அவ்வப்போது தோற்றம் எடுத்த குளிர் யுத்தம், அரசியல் தேன்நிலவு எனும் பதங்கள் சரியான கருத்துப் பெருமானத்தை அடையவில்லை. இது சொல்லுக்கு நேரடிச் சொல் மொழிப்பெயர்ப்பு என்பதா? இன்று வரை குழப்பம் உண்டு. இதை யார் தீர்த்து வைக்கமுடியும். இதற்காக எம்மிடம் ஏதும் அமைப்பு உண்டு?

எதையாவது புதிதாக சொன்னல் கண்டனமும், ஆர்ப்பாட்டமும் மட்டும் செய்ய தெரிந்த தமிழர் உள்ள தமிழ் சொல் (அதாவது முத்திரம்) இலக்கணத்தின் 'இடக்கல்' அடக்கல்' விதிப்பிரகாரம் தகாததென போர்க்கொடி பிடிக்க தெரிந்த தமிழர் சீர் செய்ய அல்லது திறம் செய்ய முன்வருவார்களா? அல்லது சர்வதேச ரீதியில் போட்டிகள் வைக்கின்றேம் பரிசுகள் கொடுக்கின்றேம் எனப் புளகாங்கிதம் கொள்ளும் அமைப்புகள் தான் முன்வருமா? அல்லது தமிழரே அங்கீகரித்து ஒரு நாட்டை உருவாக்க சர்வதேசமும் அங்கீகரிக்க வேண்டும் என கூப்பாடு போடுவோர் தான் முன் வருவார்களா? முன் வரப் போவதில்லை. ஏனெனில் நாம் கல் தோன்றி மண் தோன்று காலத்தின் முன் தோன்றிய மூத்த குடி என்ற நினைப்பு உள்ளவர்களாச்சே. இந்த மமதை மட்டும் நமக்குப் போதும்.

---

## உலகம் முடிவில்..

பூமியின் அண்மையில் வருகிறது. இன்னுமொரு விஷயம் என்னவென்றல் அந்தக்கிரகத்தில் மனிதனிலும் மதிநுட்பம் வாய்ந்த உயிரினங்கள் இருக்கும் என நம்பப்படுகிறது. (அட— அதுதான் நம்ம தேவலோகமோ! ஊர்வசி ரம்பை எல்லாரும் அங்குதானே!) சில வருடங்களின் முன் ஏதோ ஒரு 'மர்மப் பொருள்' பூமியை நோக்கி வந்ததை சக்தி வாய்ந்த தொலைநோக்கியில் அவதானிக்கப்பட்டது பலருக்கு ஞாபகம்.

இதனல் தான் அண்மைக்காலங்களில் அமெரிக்காவில் வெளியுலக உயிரின நடமாட்டம் பற்றிய ஆராய்ச்சிக்கு பெருந்தொகையான பணம் செலவிடப்படுகிறது. பல ஆங்கிலப் படங்கள்கூட அதை மையமாக வைத்து எடுக்கப்பட்டது. இதை பார்ப்பதற்கு கற்பனையானது போலத் தெரியினும் அதற்கான சாத்தியங்கள்உண்டு என்பதை ஆய்வாளர்களும் வல்லரசுகளும் உணர்ந்துள்ளன. எப்பொழுதும் திடீரென வரக்கூடிய star war க்கு தம்மை ஆயத்தம் செய்கின்றன.

"வருஷம் ஆயிரத்து தொளாயிரத்து
தொண்ணூற்று ஒன்பது
ஏழு மாதங்கள்
ஆகாயத்தில் இருந்து அவன் வருவான்"

என எழுதப்பட்டுள்ளது அந்த "தேவ லோகத்தில்" இருந்து வரப்போகும் அவர்களையா? நொஸ்ரடாமஸ் சொன்ன அந்த வரிக்கு அப்படித்தான் இப்போது மேலைத்தேசத்தில் விளக்கம் சொல்கிறர்கள்.

"அப்பாடா அழிவில்லைத்தானே அது போதும்."

"நோ.....நோ.....அப்படி நிச்சயமாச் சொல்லமுடியாது. அந்த தரிசனம் அழிவைத்தான் சொன்னதாகவும் இருக்கலாம்"

"என்னய்யா நிம்மதியாக இருக்கவிடமாட்டேன் என்கிறீர். சரி... என்னண்டாலும் றொரன்ரோவும் எங்கடை சொந்தக்காரர் இருக்கிற மொன்றியாலும் தப்பிடவேணும் பிள்ளையாரே. புதுக் கார் ...வீடு எல்லாம் வாங்கிப் போட்டன். இப்பதான் கலியாணமும் கட்டி இருக்கிறன். செல்லச் சன்னதியானே. சிலோன் போனலும் பரவாயில்லை. எங்களைக் காப்பாத்திடு ராசா....'

# வாழ்க தமிழ்

ஒரு ஊரில் ஒரு அரசன் இருந்தான். வான் முகில் வானாது பெய்து மலிவளம் சுரந்து குறைவிலாதுயிர்கள் வாழும்படியாக நீதிபரிபாலித்த அந்த அரசனது ஆட்சியில் ஒரு நாள் சனியனுர் ஆட்சி பற்றிக் கொண்டது. நாட்டைப் பரிபாலிக்க திறையின் சேமிப்பு போதாது போகவே அரசன் மக்களின் மீதான வரியை அதிகரிக்க நேரிட்டது. வரிச்சுமையைத் தாங்க முடியாத மக்கள் கொதித்தெழுந்தார்கள். கோன் முறை அரசு செய்த கோனையே குறைசொல்லி வெறுக்கவாரம்பித்தார்கள். அருமைக் குடிகள் என்னை வெறுக்கிறுர்களே யென்றறிந்த அரசன் மிகுந்த கவலை கொண்டான். கவலை அவனது உடலை சிறிது சிறிதாக உண்ண ஆரம்பித்துவிட்டது. விரைவிலேயே தான் இறந்து விடப்போவதாக எண்ணிய அரசன் தனது புத்திரனை அழைத்து ஆட்சியை ஒப்படைக்கத் தீர்மானித்தான். "மகனே இத்தனை ஆண்டுகளாக மன்னுயிரை என்னுயிர்போல் காத்துப் போற்றிய என்னை என் குடிகள் அறவே வெறுக்கின்றுர்கள். இழந்துபோன அவர்களது மதிப்பை நான் என் வாழ்நாளில் திரும்பவும் பெற்ற பின்னர் தான் இறந்து போகவேண்டும் என்பது எனது இறுதி ஆசை. எனது உடல் இருக்கும் நிலையில் அதைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையும் எனக்கில்லை. என்ஞல் தொடர்ந்தும் ஆட்சியைப் பரிபாலிக்க முடியாது விரைவிலேயே நீ ஆட்சியைப் பொறுப்பேற்கவேண்டும் அத்துடன் ஒரு வேண்டுகோளையும் நான் உன்னிடத்து கேட்டுக் கொள்கிறேன். உன்னுடைய ஆட்சியின் போதாவது எனது குடிகள் இழந்த மதிப்பை என்னிடத்துச் செலுத்த வேண்டும். அதற்கு நீ வழி செய்யவேண்டும்"

தந்தை மரணப்படுக்கையில் விடுத்த வேண்டுகோளை நிறைவேற்றுவதாக மகன் உறுதி பூண்டான். அவ்வாறே ஆட்சி கைமாறியதும் மக்கள் மீதான வரிப்பணத்தை மேலும் பன்மடங்காக அதிகரித்தான். மக்கள் வெகுண்டெழுந்தார்கள். நாடு அல்லோலகல்லோலப்பட்டது பழைய மன்னரே மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்றும் புதிய மன்னர் முடிதுறக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்கள். பழைய மன்னர் மீதான மதிப்பு என்றுமில்லாதவாறு உயர்ந்தது. மன்னரும் மகிழ்வோடு உயிரை நீத்துக்கொண்டார்.

இந்தக் கதையை அம்புலிமாவுக்கெல்லோ அனுப்பியிருக்கவேணும், ஏன் தாயகத்துக்கு அனுப்பினது என்று வாசகர்கள் கேட்கலாம். சமீபத்தில் சுபமங்களாவுக்கு மகரந்தன் எழுதிய கட்டுரை விவகாரத்தில் இந்தக் கதையினுல் ஒரு சின்ன சிண்டு முடியலாம் என்பதுதான் நோக்கம். அந்தக் கட்டுரையில் மகரந்தன் இழந்த மதிப்பை விட அதன் பின்வந்த கட்டுரைகளினுல் மகரந்தன் மதிப்பு பன்மடங்கு அதிகரித்திருக்கிறது என்று பலர் அனுதாபப்பட்டுக் கொண்டார்கள். குப்பை இலக்கியம் தேவையானுல் இனியெல்லாம் தென்னிந்தியாவிற்குப் போகத் தேவையில்லை. நம் வீட்டுக் கோடியில் நிறையவே இருக்கிறது. ஒருவனைப் பற்றி அறிய வேண்டுமானுல் அவன் கையில் 'மைக்' ஒன்றைக் கொடுத்து விடுங்கள் என்று சுந்தரராமசாமி எங்கோ எழுதியதாக ஞாபகம்.

மைக் என்ன பேனுவே போதுமே!

என்ன செய்யலாம் நமது கலாச்சாரம் பேணப்படவேண்டும் என்று ஆணித்தரமாக நம்புபவன் நான். அதில் இதுவும் ஒரு பங்கு என்பதனுல் ஏமாற்றம் இருக்கவே முடியாது. வாழ்க தமிழ்!

★ ★ ★

விமர்சனம் என்று வரும் போது எது யார் எப்படி விமர்சிக்கப்படுறது என்கிற விடயத்தில் கவனமாயிருக்கவேண்டும் போலிருக்கிறது. கனம் தம்முடையது என்பதனுல் பத்திரிகைக்காரர்களுக்கு பலம் அதிகம். அதனுல் பத்திரிகைக்காரர்களை விமர்சிக்கும் போது மிக அவதானமாகவிருக்கவேண்டும்

இதனுல் ஏழை இலக்கியவாதிகள் தங்கள் குமையும் இதயங்களை உள்ளுக்குள்ளேயே எழுதி எழுதித் தீர்த்துக் கொள்ளவேண்டியதுதான். தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரர் என்று ஒரு காலத்தில் இயக்கக்காரரை எப்படியெல்லாம் விமர்சித்தோமோ அதே நிலைமைதான் இன்றய பத்திரிகை (இயக்கங்க)ளினதும். இரண்டு சாராருமே ஆயுதபாணிகள். அதனுல் ஏழை இலக்கிய மகாஜனங்கள் எதையும் கையோடு கைவைத்தாற்போல் எழுதிக் கொள்வது நல்லது.

★ ★ ★

பலமுதுபெரும் எழுத்தாளர்கள் இலக்கியவாதிகள் கல்விமான்கள் திடீர் திடீரென்று இறந்து போகின்றுர்கள் நாவற்குழியூர் நடராஜன், ஒரேற்றர் சுப்பிரமணியம், வி. பொன்னம்பலம் என்று பல மலர்கள் இலக்கிய சோலையினின்றும் உதிர்ந்து போய் விட்டார்கள். தமிழ் கூறும் நல்லுலகத்தைப் பொறுத்தவரை இவர்களது மரணங்கள் இன்னும் அகாலமானவையே. இவர்களது படைப்புக்கள் தமிழுலகத்தில் மைற்கற்கள் என்பதில் சந்தேகமில்லாத போதிலும் இவர்கள் செய்யாது போன பெரும்பணிகள் பல. இவர்களது காலத்தைப் பிரதிபலிக்கும் அனுபவ நிகழ்வுகளை இவர்கள் தொகுத்து எதிர்கால இலக்கியச் சந்ததிக்கு விட்டுக் கொள்ளாமல் போனது வருத்தத்துக்குரியது. இலக்கியப் பரிணும வளர்ச்சியில் இவர்களது வரலற்றுப் பதிவுகள் பாலங்களாக அமைய வேண்டியன. இன்னும் நம்மோடு இருக்கின்ற மேதைகளாவது இக்குறையே நீக்க முயற்சிகள் எடுப்பது நல்லது.

மறைந்த மேதைகளுக்கு என் அஞ்சலிகள

★ ★ ★

## சிவதாசனின் அசை

## அட்டவணை 2 .

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 80 | 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 |
| 2.4 | 3.5 | 2.2 | 2.4 | 3.7 | 3.6 | 2.6 | 0.2 | 1.2 |

(புள்ளி விபர தரவுகள்; குடிசன மதிப்பீடு புள்ளிவிபர திணைக்கள தரவைகளிலிருந்து)

விலைமட்டகணக்குகளுக்கு அமைய பின்வருமாறு.

பார்க்க: அட்டவணை 2

தலாவீத மொத்த தேசிய உற்பத்தி புள்ளி விபரங்கள் மூலமாக அதிக பெறுமதியைக் காட்டும் சந்தர்ப்பங்களில் மெய்மை ரீதியாக ஏற்படும் அதிகரிப்பு மிகவும் சொற்பமானதாகவும் இருக்கும் சனத்தொகை பெருகும் வேகத்தையும் ஒப்பிடும் போது இரண்டாவதன் வேகம் முதலாவதன் வேகத்தை விட குறைவாக இருந்தால் பொருளாதார அபிவிருத்தி அவ்வளவு தூரம் மகிழ்ச்சிக்குரியது அல்ல என்பதையே அது காட்டுவதாக இருக்கும். ஆனால் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக இன்று எம்மத்தியிலுள்ள புள்ளி விபரங்கள் தரவைகள் குறித்து பூரண நம்பிக்கை கொள்ள முடியாததால் இவற்றை ஒப்பிடுவதும் கஷ்டமானதாகும்.

நிலவும் அமைப்புக்குள்ளேயாயினும் பொருளாதாரம் உண்மையிலேயே அபிவிருத்திப் பாதையிலேயோ பயணம் செய்கிறது என்பதைக் கண்டு கொள்ளக்கூடிய நல்லதொரு காரணியாக திகழ்வது போதிய அளவு, முதலீடு செய்யப்படுகிறதா என்பதாகும். அபிவிருத்தி பெற்ற நாடுகளது முதலீடு

### அட்டவணை 3

| ஆண்டு | அவ்வருடய விலை மட்டத்தின்படி | நிலையான விலை மட்டத்தின்படி |
|---|---|---|
| 1975 | 13.2 | 13.2 |
| 1977 | 12.9 | 14.1 |
| 1978 | 21.7 | 16.8 |
| 1979 | 25.7 | 17.9 |
| 1980 | 32.8 | 19.8 |
| 1981 | 28.9 | 20.8 |
| 1982 | 29.5 | 19.3 |
| 1983 | 27.0 | 18.3 |
| 1984 | 23.8 | 15.9 |
| 1985 | 24.4 | 15.0 |
| 1986 | 22.8 | 13.8 |
| 1987 | 23.9 | 14.7 |
| 1988 | 22.4 | 13.3 |

புள்ளிவிபர தரவுகள்; குடிசன மதிப்பீடு புள்ளிவிபர திணைக்களம்

பொதுவாக மொத்த தேசிய உற்பத்தியில் 20 25 வீதம் அளவைக் கொண்டதாகும். அவ்வாறே அவற்றின் உற்பத்திச் சக்திகளது விசேடமாக இயந்திர சாதனங்கள், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் வளர்ச்சி காரணமாக பொருளாதாரத்தில் சேர்ந்து கொள்ளும் அளவும் ஒப்பீட்டு ரீதியாக அதிகமானதாகும்.

மட்டத்திற்கும் நிலையான விலை மட்டத்திற்கும் ஏற்ப பின்வருமாறு.

பார்க்க:அட்டவணை:3

1977 தொடக்கம் மொத்த தேசிய உற்பத்தியில் முதலீட்டுக்கான வீதம் படிப்படியாக அதிகரித்ததையும் 1988இலிருந்து அது மீண்டும் சீரழியத் தொடங்கியதையும் காணலாம் 1988 ஐ அடையும்போது 1975ன் மட்டத்திற்கு முதலீட்டு வீதம் குறைந்தது. இதன் அர்த்தம் 1979 83 காலகட்டத்துள் பொருளாதாரம்

### அட்டவணை 4

| 65–70 | 70–77 | 77–83 | 83–88 |
|---|---|---|---|
| 11.2 | 7.6 | 14.3 | 5.9 |

முதலீடு தொடர்பாக ஓரளவு அதிகரிப்பை காட்டிய போதிலும் 1983க்குப் பின்னர் கணிசமான அளவு பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்பதேயாகும். முதலீட்டு அதிகரிப்பு வேகத்தை பரிசீலனை செய்து பார்ப்பதன் மூலமாக இதனை மேலும் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். முதலீட்டு அதிகரிப்பு வேகம் பின்வருமாறு. பார்க்க அட்டவணை 4.

முதலீடு அதிகரிப்பு வேகத்தைப் பார்க்கும் போது 1965க்குப் பின்னரான காலகட்டத்தில் முதலீடு அதிகரிப்பு ஆகக் குறைவான வேகத்தில் இடம் பெற்றது 83 88 காலகட்டத்திலேயே என்பதை தெளிவாக காணலாம்.

முதலீடு தொடர்பாகவும் எடுத்துப் பார்ப்போமானால் முதலீடு செய்யப்பட்ட தொகையிலும் கணிசமான அளவு கட்டிடங்கள் உடுதுணிகள் போன்ற துறைகளிலேயே செலவு செய்யப்பட்டதே தவிர பொருளாதாரம் நீண்ட காலத்துக்கு தாக்குப்பிடிக்கக் கூடியதற்கு அடிப்படையான கைத்தொழில்களில் அல்ல என்பதையும் காணலாம். அவ்வாறே முதலீட்டு துறையிலும் விசேடமாக அரசாங்க முதலீடுகளில் இடம்பெற்றுள்ள பாரிய ஊழல்களையும் விரயங்களையும் கணக்கில் கொள்வோமாயின் உண்மையான முதலீட்டு தொகையில் குறைவே ஏற்படும் சில துறைகளில் அரசாங்கத்தால் ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் முற்றாக முதலீடு செய்யப்படவும் இல்லை. உதாரணமாகக் கூறுவதாயின் 1978 83 ஆறு வருட காலத்துள் மூலதனமாக பெருந் தோட்டத்துறைக்கென பாராளு மன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 61.8% மட்டுமே முதலீடு செய்யப்பட்டுள்ளது.

போதிய அளவு முதலீடு செய்யப்படாமை, செய்யப்பட்ட முதலீடுகளின் சுபாவம், முதலீட்டு துறையில் இடம் பெற்ற பாரிய ஊழல்களும் விரயமும் ஆகிய காரணங்களால் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படச் செய்வது கடினமானதாகும். இது தவிர பல்வேறு வழிகளிலும் செல்வந்தர்களாகியுள்ள பெரும் கள்ள வியாபாரிகள் பெருந்தொகையான பணத்தை கறுப்புப் பணமாக பதுக்கி வைத்துள்ளார்களே தவிர முதலீடு செய்யவும் இல்லை. இவ்வாறாக எமது முதலீட்டுத்துறை கணிசமான அளவு பலவீனத்தையே காட்டுகிறது.

பிழை திருத்தம் இத் தொடரின் கடந்த வாரத் தலைப்பாக ஜே விபியின் வரலாற்றுக் கதை' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை தயவு செய்து 'ஜேவிபி அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி 2' எனத் திருத்திக் கொள்ளவும்.

அதே இதழில் பக்கம் 25, கலம் 2 வரி 12ல் 'தாம் சமுதாயம் என்னும் தேசத்திலிருந்து வெளியே தூக்கி எறியப்பட்ட' என்பதை தயவு செய்து 'தாம் சமுதாயம் என்னும் தேகத்திலிருந்து வெளியே தூக்கி எறியப்பட்ட' எனத் திருத்திக் கொள்ளவும், அதே பக்கம் 2 வது கலம் 50 வது வரியில் 'கேகாலை 19 பேரில் 8 பேர் என்பதை' தயவு செய்து 'கேகாலை 19 பேரில் 18 பேர்' எனத் திருத்தி வாசிக்கவும் தவறுகளுக்கு வருந்துகிறோம்.

# ரஷ்யா;
# உடைந்து நொருங்கும் பொருளாதாரம்

அரசியல், பொருளாதாரப் பிரச்சனைகள் ரஷ்யாவை ஆட்டிப் படைக்க ஆரம்பித்துள்ளன. அரசியல் முனையில் மீண்டும் ரஷ்யப் பாராளுமன்றத்துக்கும் ஜனாதிபதி யெல்ஸ்ரினுக்கும் இடையிலான இழுபறிகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன. ஆட்சிக் கவிழ்ப்புச் சதியில் ஈடுபட்டவர்கள் என குற்றம் சாட்டப்பட்டு யெல்ஸ்ரினல் சிறையில் தள்ளப்பட்டவர்களை பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றி விடுதலை செய்தது அரசியல் முனையில் யெல்ஸ்ரினுக்கு விழுந்த அடியாகும். இதனல் தனது பலவீனமான நிலையை உணர்ந்து கொண்டு யெல்ஸ்ரின் பாராளுமன்றத்துடன் சமரசத்துக்குப் போக முயல்கிறர்.

அதேசமயம் பொஸ்னியாவில் சேர்பியர்களுக்கு ஆதரவான ரஷ்யாவின் நிலைப்பாடு, பொருளாதார சீர்திருத்தவாதிகள் அரசாங்கத்திலிருந்து வெளியேறியமை, அமெரிக்க சி.ஐ.ஏ அதிகாரியைப் பாவித்து தொடர்ந்து அமெரிக்க ரகசியங்களை உளவு பார்த்தமை ஆகியன மேற்குலகத்தை யெல்ஸ்ரினின் மீது நம்பிக்கை இழக்க வைத்திருக்கிறது. விளைவு ரஷ்யாவின் எதிர்ப்பையும் மீறி நேட்டோ விமானங்கள் சேர்பிய விமானங்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளன. ரஷ்யாவுக்கு வழங்குவதாக மேற்குலகம் வாக்குறுதியளித்த பொருளாதார உதவிகள் இழுத்தடிக்கப்படுகின்றன. விளைவு பொருளாதார முனையில் ரஷ்யா ஒரு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. தொழிற்சாலைகள் தொடர்ந்து மூடப்படுகின்றன. மில்லியன் கணக்கான தொழிலாளர்கள் மாதக்கணக்காக சம்பளம் கொடுக்காமல் வைக்கப்பட்டுள்ளார்கள். முன்னள் சோவியத் ஆட்சியாளர்கள் பாவிக்கும் வாகனங்களை உற்பத்திசெய்த 2IL தொழிற்சாலையின் தொழிலாளர்கள் சம்பளம் இல்லாத விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளனர். போதிய நிதி இல்லாத காரணத்தால் சைபீரிய எண்ணெய் வயல்களில் வேலை செய்யும் 15000 தொழிலாளர்களின் வேலை நேரங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. ரஷ்யாவின் துணி உற்பத்தி நகரில் ஒரு சில தொழிற்சாலைகள் மாத்திரமே இயங்குகின்றன. மற்றவை மூடப்பட்டு விட்டன. அதிகாரிகளோ அனைத்துத் தொழிற்சாலைகளையும் மூடிவிட்டு இப்பகுதியை 'பொருளாதாரப் பாதிப்புக்கு உட்பட்ட பிரதேசமாக பிரகடனம் செய்ய முயல்கின்றனர்.

ரஷ்யாவின் கைத்தொழில்துறை மிக மோசமாக காலகட்டத்தை அண்மித்து விட்டது. வொட்கா தயாரிக்கும் தொழிற்சாலைகளிலிருந்து ட்ராக்டர் தொழிற்சாலையூடாக றெக்கெற் தயாரிக்கும் தொழிற்சாலைகள் வரை மூடப்படுகின்றன. தினந்தோறும் சம்பளமில்லாமல் கட்டாய விடுமுறையில் அனுப்பப்படும் தொழிலாளர்களது பட்டியல் நீள்கிறது. அரசநிர்வாகத்தின் கீழுள்ள தொழிற்சாலைகளும் மூடப்படுகின்றன. அதற்கு வெளியேயுள்ள தொழிற்சாலைகளும் மூடப்படுகின்றன இது ரஷ்யாவின் பொருளாதார சீர்த்திருத்தக் கொள்கை குறித்து பெரும் கேள்வியை எழுப்பியுள்ளது. அரச மான்யங்களால தொழிற்சாலைகள் இயங்குவது நிறுத்தப்பட்டு சந்தை முறைக்கேற்ப உற்பத்திகள் நடத்தப்படவேண்டும் என பொருளாதார சீர்த்திருத்தவாதிகள் முன்வைத்த கருத்து பழமைவாதிகளால் நிராகரிக்கப்பட்டதுவும் இன்றைய நிலைக்கு ஒரு காரணம். அதிகரிக்கும் பணவீக்கமும் தோல்வியடைந்த திறந்த சந்தை முறையும் ரஷ்யாவின் அடுத்த காயங்கள். இப்போது பொருளாதார சீர்த்திருத்தவாதிகள் முற்றாகவே யெல்ஸ்ரினின் அரசிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு விட்டார்கள், இப்போது பழமைவாதிகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட அரசாங்கம் பிரதமர் விக்ரர் செர்னோமைர்டினின் தலைமையில் பதவியில் உள்ளது. இந்த அரசு தொழிற்சாலைகளுக்கு மீண்டும் அரச மான்யம் வழங்கப்படும் என வாக்குறுதியளித்துள்ளது.

அதிகரிக்கும் பணவீக்கம், உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி குறைந்தமை, அரச நிறுவனங்களின் கொள்வனவுகள் வீழ்ச்சியடைந்தமை ஆகியவற்றால் பல தொழில் நிறுவனங்களுக்கு பெருமளவு நிதி தேவையாக இருக்கிறது. இதனாலேயே சில நிறுவனங்கள் பொருளாதார சீர்திருத்தவாதிகள் பிரேரித்த முதலாளித்துவ முறைகளைக் கடைப்பிடிக்கிறார்கள் இதன் வழியேயே தொழிலாளர்களது வேலை நேரங்கள் குறைக்கப்படுகின்றன அல்லது தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுகிறார்கள். இலாபமற்ற பொருட்களின் உற்பத்திப் பகுதிகள் மூடப்படுகின்றன.

சில நிறுவனங்கள் முற்றாகவே வங்குரோத்து அடைந்து விட்டன. இன்னும் பல நிறுவனங்கள் அந்த நிலையை அடைந்த போதும் மூடுவதை தவிர்த்து வருகின்றன. பொருளாதாரம் குறித்த விரக்தி சகல துறைகளிலும் பரவியுள்ளது. இந்த நிலை இன்னும் எத்தனை நாட்களுக்கு என்று இப்போது அனைத்துத் தரப்பிலும் பரவியுள்ளது. ஆனால் அடுக்கடுக்காய் தொழிற்சாலைகள் மூடப்படுதலும் தொழிலாளர்கள் மாதக்கணக்கான கட்டாய விடுமுறைகளில் அனுப்பப்படுவதும் இது ஒரு தற்காலிகப் பிரச்சனையல்ல என்பதைக் காட்டுகிறது. கடந்த இரண்டு வருட காலங்களாகவே ரஷ்யாவின் தொழிற்சாலைகள் இந்தப் பிரச்சனைகளை எதிர்கொண்டன. விற்பனைகள் சரிந்தபோதும், அரசமான்யங்களைப் பெறுவதில் சிரமமிருந்த போதும் இவை இறுக்கமான முடிவுகளை எடுப்பதைத் தள்ளிப்போட்டன. சில நிறுவனங்களுக்கே புதிய சந்தைகள் கிடைத்தன. அதுவும் வெளிநாடுகளில் இன்னும் சில சந்தைகளின் தேவைக்கேற்ப தமது உற்பத்திகளை மாற்றிக் கொண்டன. மற்ற நிறுவனங்கள் மாற்றத்தை நோக்கிக் காத்திருந்தன. விளைவு கடன் பெருகிறது. இதனல் பல நிறுவனங்கள் வரிகளையும்

## சுழலும் உலகம்



தி. உமாகாந்தன்

இதர கட்டணங்களையும் செலுத்துவதை நிறுத்தின. இதனுல் இவர்களது வாடிக்கையாளர்கள் குறிப்பாக ரஷ்ய அரசு இவர்களுக்கு கொடுக்கவேண்டிய தொகைகளை நிறுத்தியது. இவ்வகையில் இந்தக் கொடுப்பனவுகளின் எண்ணிக்கை 10 பில்லியன் டொலர்கள் எனக் கணிக்கப்படுகிறது.

அதிகாரபூர்வமாக ரஷ்யாவின் வேலையற்றோர் தொகை 2%மாக இருக்கிறது. ஆனுல் இந்தக் கணிப்புக்குள் மாதக்கணக்காக சம்பளம் பெறுமல் இருக்கும் மில்லியன் கணக்கான ரஷ்ய தொழிலாளர்களோ அல்லது மாதக் கணக்காக கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட தொழிலாளர்களோ அடங்கவில்லை. சமீபத்தில் ஜெனிவாவில் இயங்கிவரும் ஐ.நாவின் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் கணிப்பீட்டின்படி ரஷ்யாவின் வேலையற்றோர் தொகை 10%. அது தொடர்ந்து அதிகரிக்கிறது என்பதுமே. இந்தப் பிரச்சனையிலிருந்து எந்தத் துறையும் தப்பவில்லை. தொழிலாளர்களின் சொர்க்கம் என வர்ணிக்கப்பட்ட நாட்டில் இப்போது பரவலாக வேலைநிறுத்தங்கள் நிகழ்கின்றன. அரசதரப்புக் கேள்விகள் குறைந்ததால் ஓய்வில்லாமல் இயங்கி வந்த இராணுவத்தளபாட உற்பத்தி தொழிற்சாலைகள் கூட மந்தமடைந்து விட்டன. கிராசொன்பார்க் இயந்திரத் தயாரிப்பு தளத்தைக் கொண்டது. இங்கு சமீபத்தில் தொழிலாளர்கள் பெரும் போராட்டத்தை நடத்தினுர்கள் காரணம் கடந்த 4 மாதங்களாக இவர்களுக்கு ஊதியம் அளிக்கப்படவில்லை. பலர் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுவிட்டனர். தொழிற்சாலையின் பல பகுதிகள் முடப்பட்டுவிட்டன. அதுமட்டுமல்ல வாரத்தில் மூன்று நாள் வேலைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதுபோலவே மோட்டார் வாகன உற்பத்தித் துறையும் தள்ளாடுகிறது. பிரபல நிறுவனமான 2IL இல் கிட்டத்தட்ட பாதி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யப்பட்டுவிட்டார்கள். 70 ஆயிரமாகவிருந்த இவர்களது தொகை இப்போது 39 ஆயிரம். இப்போது இதில் பாதிப்பேர் கட்டாயலீவில் அனுப்பப்பட்டுள்ளனர். இந்நிறுவனம் தயாரித்த வாகனங்கள் விற்பனையாகாமல் முடங்கியுள்ளன. இவை எல்லாவற்றையும்விட ரஷ்யாவில் அனைவரையும் அதிர்ச்சியடைய வைத்த விடயம் பிரபல ரஷ்யக் குடிபானமான வொட்காவைத் தயாரிக்கும் கிறிஸ்ரல் எனும் நிறுவனம் விற்பனைக் குறைவு காரணமாக தனது 1200 தொழிலாளர்களில் 700 பேரை சம்பளமில்லாத இரண்டுவார விடுமுறையில் அனுப்பியதுதான். ஏனென்றுல் கடந்த 99 வருட காலமாக தொடர்ந்து இயங்கிவந்தது இந்தத் தொழிற்சாலை. இந்தப் பொருளாதார உடைவுகள் எதிர்வரும் நாட்களில் ரஷ்யாவில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தும். இது ரஷ்யாவில் இன்னும் ஒரு அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தினுல் கூட வியப்பில்லை.

# ஆபாச புத்தகம் விற்றவர்களுக்கு அரசியல்வாதிகள் உதவி

கொழும்பில் கைது செய்யப்பட்ட ஆபாசப் புத்தக வெளியீட்டாளர்களுக்கு சில அரசியல்வாதிகளின் தயவுள்ளதாக கூறப்படுகிறது. சமீபத்தில் லட்சக்கணக்கான ஆபாசப் புத்தகங்கள் தெகிவளை, மவுண்ட் லவினியா, பெலியகொட பகுதிகளில் கைப்பற்றப்பட்டதுடன் அவற்றின் பிரசுரகர்த்தாக்களும் கைது செய்யப்பட்டிருந்தனர். விற்பனை நிலையங்கள், அச்சகங்கள் என்பன மீதும் சோதனை போடப்பட்டது. கைது செய்யப்பட்ட பிரசுரகர்த்தாக்களை விடுவிப்பதில் அரசியல்வாதிகள் தலையிட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

## வேலி....

துளியும் இருக்கவில்லை பெடியள் மட்டுமே சளசளத்தார்கள்.

அது சிறிய சைகை. கணிசமான நம்பிக்கையில்லை. உள்ளே வந்தார்கள்.

"எப்ப துண்டு வெட்டுவினம்" பாபு கேட்டான்.

"அனேகமாக நாளை என்றவையள்" கண்ணப்பர் பதிலளித்தார்.

"அப்பா நீங்க. வீட்ட போய் சாப்பிட்டுட்டு வாங்கோ" என்று முத்தன் மெதுவாக சொன்னுன்.

ஆஸ்பத்திரிகாரர் அவருக்கும் சாப்பாடு கொடுக்க மாட்டினம். நிலமை புரிய சுரேஷ் மிச்சமாக வைத்திருந்த 5 ருபாய் எடுத்து "அண்ணை கடையிலே போய் சாப்பிடுங்கோ" என்று கொடுத்தான். வாங்க அவர் மறுத்தார்.

"டேய் முத்து வாங்கச் சொல்லடா" என்று பாபு சொன்னுன். "வாங்கணை" என்று சாடை காட்டினுன். அவர் வெட்கத்துடன் வாங்கிக் கொண்டார்.

ஆளுக்கு 5 ருபாய்படி கொண்டுவந்தார்கள் அதிலே 10 க்கு தோடம்பழம் 2 வாங்கினுர்கள் மீதியை செலவுக்கு வைத்திருந்தார்கள் பெரிசாயில்லை டீயும், பங்கீட்டு வடையும் வெட்டலாம்.

ஆனுல் அங்கத்தைய நிலமை அதைவிட மோசம்!

அவன் அவர்களைப் பார்த்துச் சொன்னுன் "போகேக்க ஆச்சிவீட்ட போய்யிட்டு போவோம்" என்றுன்.

அங்கேயிருக்கிற சின்னம்மா வாறவயள்க்கு நல்ல ரீ போட்டு உபசரிக்காமல் அனுப்புவதில்லை.

முத்தனையும் விசாரிக்கிற நிலமையில்லை.

அவன் நட்புள்ளங்களால் மனநிறைவு பெற்றிருந்தான்

கண்ணப்பர் வர விடைபெற்றுர்கள்.

தொடரும்

## அமரர் வி.பொன்னம்பலம்...

அவர் கதிரையில் அமர்ந்ததும் சரிந்தார். இதை கண்டதும் மிக அதிர்ச்சியுற்றேன். மற்றவர்களும் அதிர்ச்சியுற்று ஏதேதோ வாய்க்குள் சொல்லிக் கொண்டே நின்றுர்கள். எங்கள் ஜனங்களும் அவருக்கு ஒன்றுமே நடக்ககூடாதென்ற எமது எதிர்பார்ப்பு எண்ணங்களும் அவரது இருதயத்தை சரிவரத் தொழிற்படச் செய்யவில்லை. அவர் உயிர் பிரிந்து வீ.பி அமரராகிவிட்டார்

தாயகத்தில் அரசியலில் குறுக்குவழியை பின்பற்றியிருப்பாரேயாகில் அவர் எப்பவோ அரசியல் கொடி நாட்டியிருப்பார் ஆனுல் அவரது அரசியற் கொள்கைப்பற்றினுலும் நம்பிக்கையாலும் அதை அவர் செய்ய விரும்பவில்லை. அவர் சமூகத்தில் ஏழை எளியவர்கள் பக்கம் நின்று அவர்களின் விமோசனத்திற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டவரென்ற காரணத்தினுல், சமூகத்திலுள்ள பணக்காரரும், உயர் சாதி மக்களும் அவரை அரசியற் போட்டிகளில் ஆதரிக்காமையாற்தான் தாயக அரசியலில் பிரகாசிக்க முடியாமற் போனது.

அவர் கொண்ட நின்ற சமுகத்துவ சமதர்ம அரசியற் கொள்கையின் வலியுறுத்திக் கூறியே இரங்கற் கூட்டத்தில் இரங்கலுக்கான அமரர் வீ.பியின் சமூகத்துவசமதர்மக் கொள்கையை கடைப்பிடிப்பதன் மூலமே அவருக்கான அஞ்சலியைச் செய்தவர்கள் ஆவோம்.

# அன்ரனி பிறதர்ஸ்

## மாபெரும் மலிவு விற்பனை

**பெப்ரவரி 15 முதல் மார்ச் 15 வரை**

**1484 Queen West (at Jameson)**

**Tel:588 3447**

***இறைச்சி வகைகள்***
ஆட்டிறைச்சி இறாத் $2.49
மாட்டிறைச்சி இறாத் $2.49
(எலும்புகள் இல்லாமல்)
உயிர்க்கோழி $2.50
கோழிக்கால் இறாத் $.79

***மீன் வகைகள் - இறாத்***
பாரை $1.99
திரளி $1.99
கணவாய் $2.99
சீலா $2.49
King Fish $3.99

***மரக்கறி வகைகள்***
கத்தரிக்காய்,பாவற்காய்,
பயிற்றங்காய் $1.29 இறாத்
வெங்காயம் $2.49 10 இறாத்

***பருப்பு வகைகள்***
மைசூர்ப்பருப்பு, கடலைப்பருப்பு,
துவரம்பருப்பு, உழுந்து, கடலை,
ரவை
இறாத் 69 சதங்கள் மட்டுமே

***சவர்க்கார வகைகள்***
ராணி, லக்ஸ், கோம்பா, லைவ்
போய்
$2 டொலருக்கு நான்கு

கடுகு, பெருஞ்சீரகம், வெந்தயம்
.99 200 கிராம்
ஜாம்வகைகள் $1.49
ஹோமோ பால் 2 வீதம் $2.99
தயிர் 750 மிலீ $1.59
முட்டை XL $1.69
டின்பால் பிளாக் & வைட் $1.99

***உங்கள் வதிவிடங்களில் பூச்சித்***
***தொல்லையை அறவே ஒழிக்க***
***எங்களை நாடுங்கள்***

***சகல சுவாமிப் படங்களும்***
***ஐம்பது வீத மலிவு விலையில்***
***கிடைக்கும்***

# ANTONY BROTHERS FASHION HOUSE


***1484 Queen St West***

**Tel:588 3447**

**Feb 15-Mar 15**

***Audio 60 min ¢99 ........ ~~$1.99~~***
***Video 120 min $2.79......... ~~$3.99~~***
***Ladies Clothes $ 9.99........ ~~$14.99~~***
***Single Heart Clock $11.99 .......... ~~14.99~~***
***Double Heart Clock $17.00 .......... ~~24.99~~***
***Classical Art Clock $29.99 ........ ~~39.99~~***

# GOOD BYE BALDNESS



## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி

ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை
வளரச் செய்கிறது

**பரீட்சித்துப் பாருங்கள்**
**Try First**

பலர் இச்சிகிச்சை மூலம் பயன
அடைந்துள்ளனர்

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

---

## சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!
## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




VITAMOL சத்துள்ளதாகவும் மிருந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.றொபேட்டினால் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட மிக சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.

### NERVOGEN NERVE FOOD




உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.

அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.


Universal Foods & Merchandise Co.

### CHATAK: CURRY EXCELLENT




Chatak Madras Cu[...] Powder இன்றைய நிலை[...] சிறந்த கறி படைராகும். [...] வருட காலமாக வரும் பாரம்பரியப்ப[...] தயாரிக்கப்பட்டது. மற்ற கறி படைர்களை வி[...] சிறந்தது. Chatak Meat Seasoning, Fish Seasoni[...] Tandoori Chicken Mix போன்றவையும் கிடைக்கு[...]

### DR.ROBERT'S GLUCOSE




குளுக்கோஸ் மரக்கறிகளி[...] பழங்களிலும் இயற்கைய[...] கிடைக்கிறது. டாக்டர் றொபேட்[...] குளுக்கோஸ் இயற்கை[...] மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்தி[...] தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான ச[...] தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசை[...] போன்றவற்றிற்கு சிறந்தது. பால்குடிக்கும்குழந்தைகளு[...] வயதானவர்களுக்கும் சிறந்தது. ஏனெனில் இது உடல்[...] உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்[...]
உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்[...]
அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)

# புத்தல பிரதேசத்தின் 2வது கட்ட காணிக் கொள்ளை

நந்தன வீரரத்ன, ஹசகரத்னமலல
தமிழாக்கம் செ. லோகநாதன்

நன்றி:ராவய 1994 மார்ச் 06

*அரசாங்கம் உலக முதலாளித்துவத்துடன் இணைந்து புத்தல (மொனராகலை மாவட்டம்) விவசாயிகளது 84000 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட பாரம்பரிய காணிகளைக் கொள்ளையடித்து 10 வருடங்கள் கழிய முன்னர் அம்மக்கள் இதுவரை காலமும் அனுபவித்து வந்த கதிர்காமம் கோவிலுக்குரிய காணிகளையும் கொள்ளையடிக்கின்றனர். திக்கற்ற அம் மக்களின் துயரக் கதையே இங்கு வெளியிடப்படுகிறது.*

"ஆக .........இந்த நூறுரூபாய் தாள்களைக் கொண்டு போய் பங்கு போட்டுக் கொள்ளுங்கள். ஆனல் பெப்ரவரி மாதம் முடியுமுன்னர் இந்தக் காணிகளிலிருந்து வெளியேற வேண்டும். இந்தக் காணிகளை யெல்லாம் நாம் கோவில் நிர்வாகத்திடமிருந்து குத்தகைக்கு எடுத்துள்ளோம். சிலவேளை அரசாங்கம் உங்களுக்கு வீடுகளுடன் வேறு இடத்தில் காணி தரலாம். இதனை நிறுத்த யாராலும் முடியாது. ஜனதிபதியின் ஓடரின்படிதான் நாம் இக்காணிகளை எடுத்துள்ளோம். நாம் உங்களைப் போல இந்தக் காணிகளில் காடு வரை விடமாட்டோம். இங்கு பெரிய தொழிற்சாலை கட்டப் போகிறோம். உங்களுடைய பிள்ளைகளுக்கும் அங்கு வேலை தருவோம்... ஷ்..ஷா... அது விவசாயம் செய்வதைப் போலவா...? மாதம் முடிய சம்பளம்.....!"

இப்படி தான் கொழும்பில் இருந்து வந்தவர்கள் கூறினர்கள்! இவ்வளவு கஷ்டப்பட்டு 20 30 வருடமாக உருவாக்கிய காணியை விட்டு நாம் எங்குதான் செல்வது? நாம் இவ்வளவு காலமும் எமது குடலை நிரப்பியது அவர்கள் தந்த சம்பளத்திலா? அவர்களுடைய அப்பாமாரின் சம்பளத்தில் தான்.....! நாம் இந்தப் பெரிய வனாந்தரத்தில் முட்டி மோதி, மிருகங்களுடன் நடமாடித்தான் எமது வயிற்று பசியை தீர்த்துக்கொண்டோம். அப்படிப்பட்ட எங்களை இக் காணிகளிலிருந்து தூரத்தப் போகிறார்கள். ...." வேக்கட பிரதேசத்தின் வயதான விவசாயி தனது தலைமீது வீழ்ந்துள்ள இடியை சுமந்து கொண்டு இவ்வாறு கூறினர். அவருக்கு ஆறுதல் கூற வார்த்தைகள் இல்லாத நாம் அவருடைய குடிசையை எட்டிப் பார்த்தோம்.

முழு வேக்கட கிராமத்திற்கும் ஓடு வேயப்பட்ட வீடு ஒன்றே ஒன்றுதான். ஏனைய அனைத்தும் களிமண் சுவர்களும் இலுக்கு புல்லினல் வேயப்பட்ட கூரைகளுமாகும். வேக்கட கிராமத்தின் சௌபாக்கிய நிலையை கூறுவதாயின் நாம் இவ் வீடுகளுக்குள் அடி எடுத்து வைக்கும் போது வீட்டிலிருந்தவர்கள் வெட்கப்பட்டு ஒதுங்கிக் கொண்டார்கள். வீட்டுக்கு வரும் காற்சட்டை அணிந்த விருந்தினர்களை உட்கார வைப்பதற்கும் கூட கதிரை இல்லையே என்ற வெட்கம்தான் அது. அவர்களுடைய காணிகளைக் கொள்ளையடிப்பது தொடர்பாக நாம் அவர்களிடம் விசாரித்த போது அவர்களில அனேகர் முற்றத்தில் இருநத மரக்குத்தியின்மேல் உட்கார்ந்து கொண்டு ஆகாயத்தைப் பார்த்து கதிர்காமக் கடவுளை நினைத்து அழுது பிரார்த்தித்தனர்.

யால வன பாதுகாப்பு பிரதேசத்துக்கும் பெல்வத்த கரும்பு பயிர்செய்கை எல்லையோடும் வேக்கட கிராமம் அமைந்துள்ளது. புத்தல என்னுமிடத்திலிருந்து கதிர்காமத்தை நோக்கிய பிரதான பாதையில் 4 மைல்கள் சென்று பின்னர் காட்டுக்குள் ஒருமைல் தூரம் பயணம் செய்தால் இக்கிராமத்தைச் சந்திக்கலாம். 600 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட இக்கிராமத்தின் மக்களது பழைய கதையை நாம் இப்போது கேட்போம்.

"இக் காணிகள் அனைத்தும் கதிர்காமம் கோவிலுக்கு சொந்தமானவை அங்கே தெரிகிற வாய்காலுக்கு அப்பால் உள்ள காணிகள் எல்லாம் கணபதி கடவுளின் கோவிலுக்கு சார்ந்தவை. நாம் இக் கோவில் காணிகளில் 25 வருடத்திற்கு முன்னரே வந்து குடியேறியவர்கள். அதற்கும் முன்னர் நாம் இங்கு சேனைப் பயிர் செய்தோம் நாம் கோவிலுக்கு குத்தகை கொடுத்தோம். நான் கோயிலுக்கு குத்தகை கொடுக்க தொடங்கியது ஏக்கர் ஒன்றுக்கு குத்தகை மூன்று ரூபாயாக இருந்த காலத்தில். இப்பொழுது குத்தகை ஏக்கர் ஒன்றுக்கு நூறு ரூபாய்"

"நாம் கோயில் காணியில் பயிர் செய்வதால் குத்தகையும் கொடுப்பதோடு அதைத் தவிர ஒவ்வொரு வருடமும் கோயிலுக்கு தானமும் வழங்குவோம். கடவுளின் பெயரால் தானம் வழங்குவது மனிதர்களுக்குத்தான் இவ்வாறன சம்பிரதாயங்களில் ஈடுபட்டுக் கொண்டுதான் நாம் இக் காணிகளின் பயனை அனுபவித்தோம். இப்போது கோவில் அதிகாரிகள் இவை எதுவுமே செய்யாத கொம்பனிக்காரர்களுக்கு காணிகளைக் கொடுக்கப் போகிறார்கள் எங்களைத் துரத்திப் போட்டு...." 60 வயதான டேவிட் சிங்கோ தனது கடந்த கால கதையைக் கூறியது இவ்வாறுதான்.

வேக்கட கிராமத்தைச் தேடிச் சென்ற நாம் ஓர் அபூர்வமான இளைஞனை சந்தித்தோம். அவரது பெயர் குமார என்பதாகும் நாம் எமது நோக்கத்தைக் கூறியவுடன் வாய்க்காலுக்கு குளிக்கச் சென்ற அவர் தனது பயணத்தை நிறுத்தி அடர்த்தி குன்றிய காடுகளுள் மறைந்திருந்த வீடுகளைக் காண்பிக்க எம்முடன் வந்தார். 18 வயதான குமார புத்தல துட்டகைமுனு வித்தியாலய மாணவன். இக் காணிக் கொள்ளையினல் அவனுக்கு வருமானம் அளித்த சேனையும் இழந்து போகும் நிலைமையில் உள்ள அவன் எங்களுடன் சேர்ந்து வேக்கட கிராமத்தில் அலைய அவர் முன் வந்தது இக் காணிகளை இழப்பதால் ஏற்பட்ட வேதனையால் ஆகவும் இருக்கலாம்.

குமாரவுடன் தாம் அடியெடுத்து வைத்த இரண்டாவது குடிசையில் நான்கு பிள்ளைகளுடன் தனிமையிலேயே தொழில் செய்து கொண்டிருக்கும் அம்மா ஒருவரே இருந்தார். இரத்னாயக முதியான்சலாகே சுது மெனிக்கே என்னும் பெயரைக் கொண்ட 35 வயதான அவ் அம்மா தனது தலைமீது வீழ்ந்து கொண்டிருக்கும் கொம்பனி இடியைப் பற்றி இவ்வாறு கூறினர்.

"வீட்டுக் காரர் இறந்து இன்றைக்கு மூன்று மாதங்கள் ஆகின்றன மூன்றுவது மாதம் வழங்கவேண்டிய தானம் நாளைக்குத்தான். தானம் வழங்குவது எப்படி என்றுதான் நான் இப்போது யோசிக்கிறேன். இங்கே இரண்டு ஏக்கர் காணி இருக்குது. அங்கே உள்ள நெற்பயிர்களை அயலவர்களது உதவியுடன்தான் செய்துள்ளோம். இக் காணியை விட்டுப்போட்டு நான் எங்கு தான் போவது? கூலி வேலையும் விவசாயமும் செய்து வாழும் எங்களை

இக்காணிகளில் இருந்து துரத்தியால பிரதேசத்தில் மிருகங்கள் கூடுதலாகவுள்ள 18 வது காட்டுக்கு அண்மையில் அனுப்பப் போகிறார்களாம். இந்தக் குழந்தை குட்டிகளோடு சேர்த்து என்னை இந்த இடத்திலேயே புள்டோசரால் நெரித்தாலும் சரி நான் இங்கிருந்து போகமாட்டேன். இந்த இடத்திலிருந்து.

பசறையில் ஏற்பட்ட காணிப் பற்றுக்குறையிலிருந்து வெற்றிபெற புத்தல காட்டுக்குள் பிரவேசித்த ஜயசுந்தர முதியான்சலாகே புஞ்சி பண்டா நான்கு குழந்தைகளின் தகப்பன் ஆவார் போலியோ நோயினுல் ஊனமான அவர் தனது மனைவியுடன் சேர்த்து இரண்டு ஏக்கர் காணியில் பயிர் செய்வதுடன் கூலிவேலையும் செய்து தனது குடும்பம் பிள்ளைகளுடன் வாழ்கின்றார். தனது இரண்டாவது வாழ்க்கையை எந்தக் காட்டில் தொடங்குவது என அவர் நினைத்து நினைத்து யோசனையுடன் உள்ளார்.

அறுபது வயதான வீரக்கொடி என்பவருக்கு எட்டு பிள்ளைகள் உள்ளனர். இவற்றில் ஏழுபேர் பெண்பிள்ளைகளாவர். கடைசிப் பிள்ளையின் வயது இரண்டு ஆகிறது. இக்குடும்பத்துடன் அவர் ஆறு ஏக்கர் காணியில் விவசாயம் செய்து கொண்டு கோவிலுக்கும் குத்தகை கொடுத்து வாழ்ந்து வருகிறார்.

வேக்கட கிராமத்தில் ஓடு வேயப்பட்ட கூரையும் பூசப்பட்ட சுவர்களுடனும் கூடிய ஒரே ஒரு வீடு 57 வயது நிரம்பிய ஜயதுங்ககே மாட்டின் என்பவருக்கு சொந்தமானது. அவர் 30 வருடங்களுக்கு முன்னர் இக் கிராமத்துக்கு வந்தவர். அவர் தனது காணியில் உள்ள 26 பலா மரங்களுக்கும் 10 தென்னைமரங்களுக்கும் உடமையாளர் "எங்களை எங்கள் காணிகளில் இருந்து துரத்தி நட்ட ஈடு வழங்கப் போவதாக கூறும் இக் கொம்பனிக் காரர்களின் அரசாங்கத்துக்கு இம் மரங்களுக்கு நட்ட ஈடு வழங்க முடியுமா?" அவர் கோபமாக கேட்டார். மரங்களினுல் கிடைக்கும் பலனையும் அங்கு வளரும் மரங்களின் பலகைகளினது பெறுமதியையும் விவசாயி என்ற ரீதியில் விளங்கியுள்ள அவருக்கு பதில் கூற காணி மதிப்பீட்டாளர் ஒருவரால் முடியுமா?

43 வயதான திசாநாயக முதியான்சலாகே பியசேன என்பவர்தான் விவசாய வாழ்க்கைக்கு பிரவேசித்த முறையை இவ்வாறு விபரிக்கிறார். "1963 ஆண்டு தொடக்கம் எங்களுடைய அரசி பங்கீட்டை வெட்டிய அரசாங்கம் விவசாயிகள் அரசனுக்கு சமனுனவர்கள் என ஊளையிடுகின்றது.

"மண் வெட்டி எடுத்து வாருங்கள் விவசாயம் செய்யுங்கள்" என எங்களுடைய தலைவர்களும் அக்காலத்தில் பாடினுர்கள் நீங்கள் கேள்விப்படவில்லையா "ட்ரக்டர்களிலிருந்து புரண்டு புரண்டு வரும் மண்களால் படிப்படியாக உயரும் எங்களது தேசம்" போன்ற பாடல்களை. அந்தப் பாடல்களைக் கேட்ட நான் எஸ். எஸ்.சி.பாஸ் பண்ணியிருந்தும் மற்றவனுக்கு முன்னுல் கை கட்டி நிற்காத தொழிலை செய்ய வேண்டும் என்றுதான் இக் காட்டுக்குள் பாய்ந்தேன். பின்னர் தான் தெரிந்தது விவசாயம் நாய் வேலை என்று. மாடாகிக் கொண்டிருக்கிறது. ஏனென்றல் அவ் அவ் அரசாங்கங்கள் சொல்வதை செய்ய வேண்டி இருக்கிறது. அதற்குப்பிறகு எம்மை எருமைக் கூட்டத்தைப்போன்று தாம் விரும்பிய விரும்பிய இடத்துக்கு சாய்கிறர்கள்.

சோளன், குரக்கன், பூசனி, கத்தரி ஆகிய பயிர் செய்கையில் ஈடுபட்டு வாழ்ந்துவரும் இவ் வறிய விவசாயிகளால் அரசாங்கத்தின் தொழில் மயமாக்கும் கீதத்திற்கு எவ்வித பிரயோசனமும் இல்லை. பாரிய அளவிலான பயிர் செய்கையும் தொழிற்சாலைகளுமே இக் கீதத்திற்கு பிரயோசனமானவை. இதனை விளங்கிக் கொண்ட வயதான விவசாயி ஒருவர் வேக்கட கிராமத்தில் வாழ்கின்றார். அவரது பெயர் மனதுங்க உண்மையிலேயே மனதுங்க ஒரு ஆச்சரியமான மனிதன் அவரது பெரிய விவசாயப்பண்ணை கிராமத்தின் எல்லையிலே அமைந்துள்ளது. தனியாகவே குளம் ஒன்றை அமைத்து 35 ஏக்கர் காணியில் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் மனதுங்க மாத்தறை பிரதேசத்தை சார்ந்த வலஸ்முல்ல என்னும் இடத்திலிருந்து இங்கு குடியேறி விவசாயம் செய்பவர்.

"இங்கு கசிப்பு கொம்புனி ஒன்று அமைக்கப் போகிறர்கள் ஏனென்றல் பெல்வத்தை கம்பனியில் இன்னும் சரியாக கசிப்பு வடிப்பதில்லைதானே. அங்குள்ள கரும்புச் சக்கைகளை இங்கு கொண்டுவந்தால் திறமாக கசிப்பு வடிக்கலாம். அரசாங்கத்துடன் வந்துள்ள கசிப்புக் கொம்பனிக் காரர்கள் இப்பொழுது எங்களை இக்காணியிலிருந்து துரத்த முயல்கிறர்கள் 1975 தொடக்கம் இக் காணியில் பயிர் செய்யும் நான் இதை விட்டு எங்கேதான் செல்வது?"

"இப்பிரதேசத்திலிருந்து விவசாய திணைக்களத்திற்கு கூடுதலான பயிர்கன்றுகள் வழங்கும் மனிதன் நானேயாகும். நான் வருடமொன்றுக்கு 30,000 பயிர் கன்றுகளை விவசாய திணைக்களத்திற்கு வழங்குகிறேன். எலுமிச்சை, மா, விளா ஒட்டப்பட்ட எலுமிச்சை ஆகிய பயிர்க் கன்றுகளை நான் வழங்குகிறேன். 1984 ம் ஆண்டு விவசாயத் திணைக்களத்தால் எனக்கு விருது வழங்கப்பட்டது. அவ்வாறன என்னைத் துரத்தி எங்களுடைய காணிகளைப் பறித்தா அரசாங்கம் விவசாயத்தை முன்னேற்றப் போகின்றது?

"அது மட்டுமல்ல, இவ்வளவு காலமும் விவசாயம் செய்த எம்மை பார்த்து அந்தக் கொம்பனிக்காரர்கள் கூறுகிறர்கள் நாம் சரியான முறையில் இக் காணிகளிலிருந்து பிரயோசனம் பெறுவதில்லை என்று. ஏனென்றல் நாம் அவர்களைப் போல் எல்லா மரம் செடிகளையும் வெட்டவில்லை. இருக்கின்ற மிருகங்கள் மின்சாரம் பாய்ச்சி கொல்லுவதில்லை இந்த அரசாங்கத்துக்கு தேவையானது இப்படியான ஒரு வேலை முறைதான் கோவில் பெரியவர்களும் அரசாங்கத்தில் உள்ள பெரியவர்களும் எல்லோருமாக இவ்வாறன அழிவுக்குத்தானே ஆதரவு, கொடுக்கிறர்கள். நானென்றல் என்னைக் கொன்றலும் சரி இக்காணிகளை விட்டு நான் கட்டிய குளத்தை விட்டு எங்கேயும் போகமாட்டேன்..."

இக் காணிக் கொள்ளையால் அதிக நட்டமடைய விருக்கும் விவசாயி மனதுங்க அவர்களே இன்று அவர் மிகுந்த கோபத்துடன் இருக்கிறர்.

கதிர்காம கோவிலில் உள்ள கடவுளின் பிரதிநிதிகள் பக்தர்கள் வழங்கும் பூசைப்பொருட்கள் நேர்த்திக் கடன்கள் மூலமாகவே வாழ்கின்றனர். சகதிக்கு அதிபதியான இக்கடவுளின் மனித பிரதிநிதிகள் இன்று இவ் அப்பாவி மக்கள் மீது கருணை செலுத்துவதில்லை. அறுபது வயதான சிறிசேன இதுபற்றி இவ்வாறு கூறுகின்றர்..."

பெல்வத்தையிலுள்ள வெள்ளையனுக்கு 17000 ஏக்கர் கோவில் காணியை வழங்கினுர்கள். அக் காணிகளெல்லாம் ஏக்கரொன்றுக்கு ரூபா 40 குத்தகையிலேயே வழங்கப்பட்டது. கடவுளை வழிபடாத, கடவுளுக்கு தானம் வழங்காத வெள்ளையனுக்கு பெரியவர்கள் ஏக்கரிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 100 அறவிடுகிறர்கள். ஐயோ! இவ்வளவு தூரம் உலகத்துக்கு சேவையாற்றும் கதிர்கமம் கடவுளுக்கும் இவைகள் தெரிவதில்லையா.....!

# NOTICE TO TOBACCO RETAILERS

## On February 8, 1994, the *Tobacco Sales to Young Persons Act* came into force.

This federal legislation

- raises the minimum legal age of persons to whom tobacco products can be sold from 16 to 18 years
- restricts the location of cigarette vending machines to bars, taverns and similar beverage rooms
- increases the penalty for selling tobacco to young persons from $100 to a maximum of up to $50,000 for repeated offences.

| | |
|---|---|
| **It is prohibited by federal law to provide tobacco products to persons under 18 years of age.** | **Il est interdit par la loi fédérale de fournir des produits du tabac aux personnes âgées de moins de 18 ans.** |

If you sell tobacco on your premises, you are obliged, under the *Tobacco Sales to Young Persons Act*, to display a sign containing the message shown here.

A full-size, colour sign and a letter explaining your obligations as a tobacco retailer will be sent to you soon by Health Canada.

Check with your province for any additional laws regarding the sale of tobacco products to young persons.

If you do not receive an information package by March 15 or if you want further information on the *Tobacco Sales to Young Persons Act*, please call

**1-800-263-9004.**

Health Canada Santé Canada

Canada

# காக்க காக்க கடவுள் காக்க.. தமிழ் மக்களை!

அறுஞர் பேராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

இந்த வாரத்திலிருந்து கியூறியஸ் ஜியின் அறு(சு)வையில் புதிய தத்துவம் ஒன்று சுலோகமாக காணப்படும். 'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள். எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்' ம்.. பெரிய தத்துவஞானி பிளேட்டோ என்ற நினைப்பு என்று முணுமுணுப்பது கேட்கிறது. உண்மையில் இது பிளேட்டோ சொன்ன தத்துவம் ஒன்றின் முலம் குறிப்பிடாத மறுபிரசுரம் தான். நான் அனுபவம் வாய்ந்த பத்திரிகையாளர்கள் மாதிரி இல்லை. முலம் குறிப்பிட்டு விடுவேன். Wise men talk, because they have something to say. Fools talk, because they have to say something என்பது தான் பிளேட்டோ சொன்னது. சொல்லுதல் என்பதற்கு பதிலாக எழுதுதல் கியூறியஸின் கைங்கர்யம். அதுசரி.. இதில் கியூறியஸ் எந்த ரகம்? புத்திசீவியா? முட்டாளா?

★ ★ ★

இதை ஏன் சொல்ல வந்தேன்னு... தற்போது பல பத்திரிகைகள் வந்து அதில் பல கவிஞர்கள், எழுத்தாளர்கள் எழுதுவதைப் பார்க்கும் போது இதுதான் ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு நோக்கமின்றி ஏதோ பத்திரிகை வெளியிட வேண்டும், ஏதோ கவிதை எழுத வேண்டும் என்கின்ற நிலைமை கூடிக் கொண்டே போகிறது. அமீபாக்களின் பெருக்கம் மாதிரி ஒன்று இரண்டாகி, ஒன்றை ஒன்று விழுங்கி.. பத்தோடு பதினொன்று.. பத்தா? பத்தாயிரமா?

ஏற்கனவே வெளிவந்த சஞ்சிகைகளே ஒழுங்காக வர முடியாமல் திணறும் போது புதிதாய் பல.... பாருங்கள்.. கொஞ்ச நாளில் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று பலர் ஓடப் போகிறார்கள். அனுபவம் என்பது தான் அனுபவிப்பதால் மட்டுமல்ல, அனுபவித்தவனைப் பார்ப்பதாலும் வர வேண்டியது. பட்ட பின்னாலே வருகின்ற ஞானம் யாருக்கும் உதவாது.. கடைசியில் வாசகர்களை விட பத்திரிகையாசிரியர்கள் அதிகமாகப் போகிறார்கள்.

★ ★ ★

'அரசியல் பிச்சுப்பிடுங்கல்களில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டு, ஈழத்தில் சாவை வரவேற்று காத்திருந்தபடி சாகாமல் செத்துக் கொண்டிருக்கும் எமது மக்களுக்காக மனம் வருந்தி அவர்களின் விடிவை வேண்டிக் குரல் கொடுக்கின்ற' ஒரு சஞ்சிகையின் சமீபத்திய இதழ் ஒன்றைப் பார்த்தேன். 'பிய்த்தல், பிடுங்கல் இல்லை' என்பது உண்மை. ஆனால் அந்த மக்களின் விடிவை வேண்டி எந்தக் குரலையும் காணவில்லை. வருவதே ஆண்டிற்கு ஒரு சில தடவைகள். அதிலும் இந்தக் குரல் வெளிவரவிட்டால்... ஐயோ பாவம் தமிழீழ மக்கள்.. அவர்களுக்காக குரல் கொடுக்க வேறு யாரிருக்கிறார்கள்? அவர்கள் தொடர்ந்தும் சாகாமல் செத்துக் கொண்டிருக்க வேண்டியது தான்.

ஆக சாவை வரவேற்று காத்திருந்தபடி சாகாமல் செத்துக் கொண்டிருக்கும் சல்மான் ருஷ்டி பற்றி ஒரு செய்திக் குறிப்பு இருந்தது.

★ ★ ★

சென்ற வாரம் தாயகம் மேல(ா)(ட்)டை இல்லாமல் கொஞ்சம் செக்ஸியாய் இருந்தது. என்னங்க இது என்று மேலிடத்தில் விசாரித்தால்.... சம்மர் தொடங்குது. அதாலை மேல் சட்டையைக் கழட்டிப் போட்டம். இனி கோடை காலத்தில் தாயகம் வண்ண வண்ண மே(ா)(ட்)டைகளுடன் வரும் என்று பதில் வந்தது. இவர்கள் திருந்தவே மாட்டார்களா?

மார்ச் 1ம் திகதி தான் வசந்த காலத் தொடக்கம் என்பது ரஷ்யாவில் நம்பிக்கையாம். இதனால் கடும் குளிருக்குள்ளும் நீச்சலுடையுடன் கன்னியர்கள் சூரியஸ்நானம் செய்யும் படம் ஒன்றை சென்ற வாரம் ஆங்கிலப் பத்திரிகைகளில் பார்த்தேன். தாயகம் மேலட்டை விவகாரமும் அதன் பாதிப்பாக இருக்கக் கூடும்.

★ ★ ★

சென்ற வாரம் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் சிறு வயதில் இருந்தே உடலை அசைக்க முடியாதபடி அங்கவீனமுற்ற ஒருவர் சட்டத்தரணியானது பற்றிப் படித்தேன். இவ்வாறான தன்னம்பிக்கையும் முயற்சியும் என்னை நிறையக் கவர்வன. தற்போது இந்தச் சட்டத்தரணி வேலை குறைவால் நிகழ்ச்சிகளின் போது உரை நிகழ்த்துபவர்களுக்கு நகைச்சுவைத் துணுக்குகள் எழுதிக் கொடுத்து பணம் சம்பாதிக்கிறார். எந்த தலைப்பைக் கொடுத்தாலும் அது பற்றி துணுக்கு தருகிறார். பத்திரிகைகள் பற்றிக் கேட்ட போது பத்திரிகைகள் பற்றிய அவரது வரைவிலக்கணம் இது: A newspaper: a publication in which the advertisments

## அறு(சு)வை



'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள். எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'.

are 50 per cent truthful while the reading matter rareley achieves that percentage. அதாவது பத்திரிகை என்றால் அதில் உள்ள விளம்பரங்களில் ஐம்பது வீதமாவது உண்மை இருக்கும். ஆனால் மற்ற விடயங்களில் அவ்வளவு உண்மை இருக்காது.

உண்மை.. விளம்பரங்களில் இருக்கின்ற உண்மை.. இலங்கையிலிருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்ட— தில் ஐம்பது வீதம் உண்மை. தோலகட்டி நெல்லி ரசம், இரத்தம் சொட்டச் சொட்ட ஆட்டிறைச்சி மாதிரி..

சமீபத்தில் ஒரு உணவு தயாரிப்பாளரின் விளம்பரம் கவிதையாகப் போகிறது.

அடைஅடையாய் பிட்டு
அருமையான பிரட்டலுடன்
ஆசைதீர தோசை மசாலா
முட்டையுடன்
இதமான இட்லி, இடியப்பம்,
சுவையான சாம்பார் சம்பலுடன்
காத்திருந்து கொத்து ரொட்டி
காராசாரா கறியுடன்
செப்பான உப்புமா சரளமாய்
சம்பலுடன்
வாயூறும் அச்சாறும் தேவையானால்
மீனுடன்.. என்று போகிறது. எதற்கும் அடுத்தமுறை சுபமங்களாவிற்கு கனடிய இலக்கிய வளர்ச்சி பற்றி எழுதும் போது இந்தக் கவிஞரையும் மறக்காமல் ஞாபகப்படுத்துங்கள். இல்லாவிட்டால் மகாநதி மாதிரி சுடுகுழம்புக்குள் அமுக்கி விடுவார். அவரால் முடிந்தது அதுதான்.

பத்திரிகைகள் மலிந்த மாதிரி பாண் தயாரிப்பாளர்களும் மலிந்து விட்டார்கள். பத்திரிகைகளும் உப்புச்சப்பில்லாத மாதிரி பாணும் தரம் குறைந்து பச்சையாய் இருக்கிறது. தொழிற் போட்டியில் பாணுடன் சம்பல் இலவச இணைப்பு நடக்கிறது. இனிமேல் பருப்புக்கறி, சீனிச் சம்பல், ஆட்டுஇறைச்சிக் குழம்பும் இலவச இணைப்பாகலாம். எதை இலவசமாய் கொடுத்தாலும் நம்ம ஊர் மாதிரி வண்டு, பூச்சி புழு இலவச இணைப்பு வராத வரைக்கும் மகிழ்ச்சியே..

★ ★ ★

இந்த அங்கவீனரான சட்டத்தரணியின் பத்திரிகை பற்றிய இன்னொரு வரைவிலக்கணம்.. a journal to expose the faults of the world and the typographical errors of its staff. அதாகப்பட்டது பத்திரிகை என்றால் உலகத்தின் தவறுகளையும், அதில் வேலை செய்பவர்களின் எழுத்துப் பிழைகளையும் வெளிப்படுத்துகின்ற ஒன்று..

இது தாயகத்தைத் தான் குறிக்கிறது போலும்.

★ ★ ★

இந்த குறும்பான வரைவிலக்கணங்கள் போல தற்போது குமுதத்தில் டாவி டிக்ஷ் என்று ஒரு பகுதி வரும்..

திருமணம்: விவாகரத்திற்கு முதல் நடிகைகள் செய்து கொள்வது.
தொழிலதிபர்: நடிகையை மணந்து கொள்பவர்
இலவச இணைப்பு: மனைவியின் தங்கை
அழகி: கொலை செய்யப்படும் பெண்களுக்கு தமிழ் பத்திரிகைகள் கொடுக்கும் பெயர்.

ஆனால் நம்முரில் 71 ஜே.வி.பி காலத்தில் கதிர்காமத்தில் மனம்பேரி இராணுவத்தினரால் கொல்லப்பட்ட போது பத்திரிகைகள் கதிர்காம அழகி என்று தான் சொல்லின. காரணம் அவுறுத்து குமாரி என்று புதுவருட அழகியாக அவர் தெரிவு செய்யப்பட்டதால். மற்றும்படி பொலிகண்டி கமலம், ஆனையிறவு மாலினி என்று பல பெண்கள் கொல்லப்பட்ட போது பத்திரிகைகளால் அழகிகள் ஆக்கப்பட்டார்கள். மித்திரன் பார்த்திருந்தால் தெரிந்திருக்கும்.

இம்முறை போதாக்குறைக்கு நம்ம ஜெயந்தீஸனும் பிரெஞ்சு அகராதி ஒன்று விட்டிருக்கிறார். அடுத்த முறை பென் கூரியனோ?

★ ★ ★

மரணமானவுடன் தியாகி லெப்டினன்ட் பட்டம் பெறுவது போலத் தான் இந்த பத்திரிகை அழகி விடயமும். இல்லாததை இருப்பதாக மாற்றுவதில் பத்திரிகைகளைக் கேட்டுத்தான். கொழும்பில் அரச பத்திரிகையான சண்டே ஒப்சேர்வரும் ஐலண்டும் சண்டே ரைம்ஸும் இப்போது மாறி மாறி மோதிக் கொண்டுள்ளன. இதில் யுத்தம் பற்றி 'உடான்ஸ்' கதை எல்லாம் விடுவார்கள். இந்த செய்திகளில் உண்மை இருக்கிறதா என்ற கவலையேயில்லாமல்!

யுத்த முனை சஞ்சயன் மாதிரி.. ஒப்சேர்வரில் நிக்கலஸ் கந்தப்பா, ஆனந்த் பாலகிட்னர் என்ற தமிழ் பெயர்கள் இப்படியான செய்திகளை எழுதும் போது பயன்படும். பிரபாகரனைப் பிடிப்பதற்கு இந்திய விசேட படை ஒன்று குடாநாட்டுக்குள் புகுந்து விட்டதாகவும் புலிகளின் பலத்திற்கு சமமாக அவர்கள் இருப்பதாகவும் ஒப்சேர்வர் கதை விட்டது.

இதைப் போல ஐலண்ட் 'உடான்ஸ்' விடும்போது 'நமது விசேட நிருபர்' வருவார். அதில் இந்தியா மாத்தயாவை விடுவிப்பதற்காகவும் பிரபாகரனை அழிப்பதற்காகவும் முயற்சிகளில் ஈடுபடுகிறது என்று புலிகளுக்கு தகவல் கிடைத்திருக்கிறதாம். அதிலும் முன்பு கொழும்பிலும் சென்னையிலும் பணியாற்றிய றோ அதிகாரி ஒருவர் கனடா வந்து கிட்டுவின் சகபாடியான ரகீமைச் சந்தித்தார் என்றும் தங்கள் நடவடிக்கை பற்றி அவருடன் கலந்துரையாடினார் என்றும் ஐலண்ட் எழுதுகிறது. இதில் ரகீம் கொத்தலாவலையின் நண்பர் மட்டுமல்ல, மஞ்சரி ஆசிரியரின் நண்பரும் கூட. மஞ்சரி ஆசிரியர் ஐலண்டில் கொத்தலாவல பற்றி எழுதியவர். எனவே ஐலண்ட் இந்தச் செய்தியைப் பிரசுரிக்கும் போது கனடாவிற்கு தொடர்பு கொண்டு அதன் உண்மையை ஆராய்ந்து தான் எழுதியிருக்குமோ? என்ன குழப்பமோ? கிட்டுவை இந்தியாவுக்கு காட்டிக் கொடுத்தவர் என்று மாத்தயாவுக்கு தண்டனை. கிட்டுவின் நண்பரை றோ சந்திக்கிறதாம்? எதற்கும் மஞ்சரியில் மறுப்பு வராவிட்டால் செய்தி உண்மை என்று நாம் கருதிக் கொள்ளலாமா? சென்ற வாரம் மஞ்சரி இது பற்றி மூச்சே விடவில்லை. பாவம் ரகீம். இங்குள்ள கலகத் தமிழர்கள் கொதித்தெழப் போகிறார்கள். தலைவரைக் காட்டிக் கொடுக்க முயன்ற மாத்தயாவுக்கே இந்தக் கதி என்றால்.. ரகீம் பாவம். இதுதான் சொல்வது சேரிடம் அறிந்து சேர்.

கொத்தலாவலை விடயத்தில் ஐலண்ட் சண்டே ரைம்ஸ் உடன் மோதியிருக்கிறது. சண்டே ரைம்ஸ் உம் somewhere in north america என்றதைக்

கிண்டியதுடன் மஞ்சரி ஆசிரியர், ரகீம் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறது. எது எப்படியோ, இந்தப் பேட்டியினுல் தான் கொத்தலாவலையின் வேலை பறிக்கப்பட்டது. ராசி அப்படி? கிட்டுவை ஆதரித்தால் கிட்டு தீக்குளிப்பு. மாத்தயாவை ஆதரித்தால் மாத்தயா முக்குளிப்பு. கொத்தலாவலையை ஆதரித்தால் கொத்தலாவலை தத்தளிப்பு.. இப்போ தலைவரை ஆதரிக்கப்படுகிறது. மேலிடத்தில் இருந்து மிரட்டல் வரக் கூடும்.. ஆதரித்து எழுதினுல் வீண் பிரச்சனை வரும் என்று.

★ ★ ★

இம்முறைமொன்றியலில் திருக்குறள் விழா.. சிறப்பு விருந்தினர் வேறு யாருமல்ல... அனுவவம் வாய்ந்த பத்திரிகையாளர் தான். கிழிந்தது போ! இன்னெரு பத்திரிகை, இன்னெரு படம், இன்னெரு ஆய்வுக்கட்டுரை. இதெல்லாம் தேவையா?

திருக்குள் விழாவின் வள்ளுவர் ஆண்டு பற்றி எதுவும் இல்லை. இந்த வருடம் வள்ளுவர் ஆண்டு 2025 என்றிருக்கலாம். மறை இனிது சரி இனிது என்பவர் நம் தாயகத்தின் விடலைச் சொல் கேளாதவர்

★ ★ ★

விளம்பரம் பார்த்தேன். தொடர்பு சாதனங்கள் உண்மையை எப்படி திரிக்கின்றன என்பதற்கு மேலும் சாட்சியாக சென்ற வாரம் Manufacturing Consent என்ற விவரணத் திரைப்படத்தை தொலைக்காட்சியில் பார்த்தேன். நோம் சொம்ஸ்கி என்ற மசாசுசெற்ஸ் தொழில்நுட்ப நிறுவன பேராசிரியர் ஒருவர் இங்குள்ள தொடர்பு சாதனங்கள் எப்படி உண்மையை மறைத்தும் திரித்தும் எழுதுகின்றன என்பது பற்றி விபரித்திருந்தார். வழமையாக சில புத்திஜீவிகள் தப்பித்துக் கொள்வதற்காக சொல்வது போல 'அவரது சில கருத்துக்களுடன் எனக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும்', பல கருத்துக்கள் சர்ச்சைக்குரியனவாக இருந்தன. அத்துடன் இங்குள்ள வியாபார மயப்படுத்தப்பட்ட விளையாட்டுக்களும் மக்கள் உண்மையான பிரச்சனையை ஆளும் வர்க்கத்திற்கு எதி கிளர்ந்தெழாமல் அவர்க கவனத்தை திசை திருப்பவே பயன்படுத்தப்படுகின்றன என்பது அவருடைய வாதம். உதாரணமாக கிழக்குத் திமோர் பற்றிய பிரச்சனையைக் காட்டி அதில் இங்குள்ள தொடர்பு சாதனங்கள் காட்டிய அக்கறை பற்றி குறிப்பிடுகிறர். லண்டன் பத்திரிகை ஒன்றில் வந்த செய்தி அமெரிக்க பத்திரிகை ஒன்றில் எப்படி திரிக்கப்பட்டு வெளிவந்தது என்பதை காணக் கூடியதாக இருந்தது.

வட அமெரிக்காவைப் பொறுத்தவரை செய்தி கூட ஒரு நுகர்பொருள் தான். இங்கே எது விற்பனையாகுமோ, எது பங்குதாரர்களுக்கு லாபம் ஈட்டித் தருமோ அது சந்தையில் விற்பனையாகும். மற்றும்படி கொள்கை எல்லாம் கிடையாது. இந்தக் கிழமை பொஸ்னியாவில் தொலைக்காட்சி கமெராக்கள் நிற்கும். அடுத்த கிழமை கணவனின் ஆணுறுப்பைத் துண்டித்த பெண் பற்றி செய்தி வரும். இப்படி எது எது பரபரப்பை ஏற்படுத்தி விற்கப்பட முடியுமோ அதுதான் வெளிவரும்.

அமெரிக்காவில் 1400 வானொலி நிலையங்கள் உள்ளன. 1400 தினசரிகள், 18 ஆயிரம் சஞ்சிகைகள் வெளிவருகின்றன. இதைப் பார்த்துத் தான் நம்மவர்கள் தொடங்கினர்களோ என்னவோ? ரொறன்ரோவில் நான்கு தினசரிகள் ஆங்கிலத்தில். தமிழர்களுக்கு இரண்டு தினசரிகள் வரப்போகின்றனவாம்.

★ ★ ★

முன்பு ஜிம்மி காட்டரின் கொமெய்னியின் ஈரான் தூதுவரகத்தை அமெரிக்கர்களை கைதிகளாக்கி தேர்தலில் இரகசிய பேச்சு மு

பெறப்பட்டது. இந்த விபத்தின் போது அனுமதேய பார்சல் ஒன்று வைக்கப்பட்டிருந்ததால் தான் வெடித்ததாம். கடைசியாக றீகன் வெற்றி பெற்று பதவியேற்க முன்னர் பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். இந்த விடயம் நீண்ட காலமாக வெளியில் வரவேயில்லை. பின்னர் லொஸ் ஏஞ்ஜலஸில் உள்ள வானொலி நிலையம் ஒன்று இது குறித்து தகவல் சேர்த்து வெளியிட்ட செய்தியில் காட்டரிடம் கருத்துக் கேட்ட போது அவர் தனக்கு இது பற்றி பின்னர் தான் தெரிய வந்தது என்றும் அப்போது தன் பதவி முடிந்து விட்டதால் தன்னுல் ஒன்றும் செய்ய முடியவில்லை என்றும் தான் இதை சரித்திரத்தின் கையில் ஒப்படைப்பதாகவும் கூறியிருந்தார். இந்த விடயம் இரண்டு வருடங்களின் பின்னர் வாசிங்டன் போஸ்ட் நிறுவனத்தினுல் சிறு செய்திக் குறிப்பாக வெளிவந்திருந்தது. அதற்கு எந்த முக்கியத்துவமும் கிடைக்கவில்லை.

கொமெய்னி தனக்கு செய்த நன்றிக்கடன் காரணமாக பின்னர் ஈரானுக்கு ஆயுதம் விற்ற அமெரிக்கா அந்தப் பணத்தை நிக்கரகுவாவின் போராளிகளுக்கு அனுப்பியது. இதில் தான் out of the loop என்று புஷ் ... கொண்டார். தனக்கு இ... மே தெரியாது ... போது அவர்

முயன்ற புஷ் அரசுக்கு தொடர்பு சாதனங்கள் நன்றாகத் துணை போயின. குவைத்தை ஆக்கிரமித்த போது கண்ணாடிப் பெட்டிகளுக்குள் வைக்கப்பட்டிருந்த குழந்தைகள் தூக்கி வீசப்பட்டதாக செய்திகள் வெளிவந்தன. ஆனால் உண்மையில் இந்த செய்தி பொய்யானது என்று இப்போது தான் தெரிய வந்திருக்கிறது. குவைத்தை ஈராக் ஆக்கிரமித்த போது 'குவைத்தை விடுவிக்கும்' அமைப்பு ஒன்று அமெரிக்காவில் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்புக்கு பொதுமக்கள் 18 ஆயிரம் டொலர்கள் கொடுத்தார்களாம். ஆனால் குவைத் அரசு ஒன்றரை மில்லியன் டொலர்களை கொடுத்திருந்தது. இந்த அமைப்பும் குவைத் அரசும் Knowlton Hill என்ற பொது தொடர்பு நிறுவனத்தை சம்பளத்திற்கு அமர்த்தி பிரசாரம் செய்யும்படி பணித்தன. இந்த நிறுவனம் தான் சதாம் பற்றிய பல பொய்களை அவிழ்த்தது. இதில் தான் இந்த கண்ணாடிப் பெட்டிக் குழந்தைகள் கதையும் அடக்கம். அந்த நேரத்து மக்கள் உணர்வு சதாமிற்கு எதிரானதாக இருந்ததால் அதைப் பயன்படுத்தி தொடர்பு சாதனங்கள் சதாமை காட்டுமிராண்டியாக்கி இருந்தன.

ஆனால் இப்போது வருகின்ற தகவல்களின்படி குவைத்தை ஈராக் ஆக்கிரமிப்பது பற்றி அமெரிக்காவிற்கு தெரிந்த போதும் 'அது உள்நாட்டு விடயம்' என்று அமெரிக்க தூதுவர் சதாமிற்கு தெரிவித்திருந்தார். இதன்படி சதாமைத் தூண்டி விட்டிருக்கிறது அமெரிக்கா. அடுத்து எல்லைப் புறமாக மணலில் அமைக்கப்பட்டிருந்த கிடங்குகளை டாங்கிகள் மூலமாக மூடிய போது அதனுள் முப்பதாயிரம் வரை ஈராக்கிய படையினர் உயிரோடு புதைக்கப்பட்டனர். இப்படி அமெரிக்க நடவடிக்கைகள் இப்போது தான் வெளிவருகின்றன.

மக்களை அறியாமை இருளில் இருந்து நீக்குவதும் இருட்டில் வைத்திருப்பதும் இந்த தொடர்பு சாதனங்கள் தான்.

★ ★ ★

நம் நாட்டிலும் தற்போதைய தொழில்நுட்ப வசதிகளால் சிங்களப்பத்திரிகைகள் பல வழமையான நிலையிலிருந்து வேறுபட்டு துணிச்சலாக செய்தி வெளியிடுகின்றன. ஆனால் அதே அளவு வளர்ச்சி தமிழ் பத்திரிகையுலகில் ஏற்படவில்லை. சரிநிகர் மட்டுமே தனித்து செயற்படுகிறது. மற்றவை எல்லாம் நமக்கேன் வம்பு என்ற நிலையில் தான். அரசுக்கு எதிரான எந்தச் செய்தியையும் பிரசுரித்து பகையைத் தேடி வியாபாரத்தை மடக்கிக் கொள்ள விரும்பவில்லை.

யாழ்ப்பாண நிலைமையும் அதே. சீர் திருத்தம் பேசிய இலக்கியவாதிகள் எல்லாம் புலிகளுக்குள் முடக்கம். பத்திரிகைகளும் புலி பஜனை...

இங்கேயோ இன்று இரத்தம் சொட்ட விற்கப்படும் இறைச்சிக்கு அருகில் பூனகரியில் இரத்தம் கொட்டுவது பற்றிய செய்திகளைத் தாங்கிய நம்ம பத்திரிகைகள் விற்பனையாகின்றன. இவை எமது தமிழ் மக்களின் அறியாமையைப் போக்க என்ன செய்திருக்கின்றன? இவையும் உண்மையான பிரச்சனையில் இருந்து மக்களை திசை திருப்பும் விளையாட்டில் ஈடுபடுகின்றன. எது விற்குமோ அதை வெளியிடுகிறார்கள். மாத்தயா பற்றி செய்திகளை தாயகம் வெளியிட்ட போது பொய் என்றவர்கள் பின்னர் உத்தியோகபூர்வ செய்தி வந்ததும் தலைக்கு துண்டைப் போட்டுக் கொள்கிறார்கள். வியாபார நோக்கத்தை விட்டு தமிழுக்கும் தமிழினத்திற்கும் தங்கள் சக்திக்குட்பட்ட முறையில் தொண்டாற்றுவதே குறிக்கோள் என்றுதான் எல்லாப் பத்திரிகைகளும் சொல்கின்றன. ஆமா! வைரவன் சேவை நாட்டுக்குத் தேவை... எல்லாருமே மொத்தத்தில் குழப்பத்தைத் தான் ஏற்படுத்து கிறார்கள். தமிழ் மக்களை நிம்மதியாக இருக்க விடுவதே இவர்களுக்கு செய்யக் கூடிய ஒரே சேவை.

தாயகத்திற்கோ பிரச்சனை இல்லை. வளமான, ஆரோக்கியமான, சிந்திக்கத் தெரிந்த வாசகர் கூட்டம். புலி ஆதரவாளர்கள் முடியைப் பிய்ச்சக்க வேண்டியதுதான். புலிகளுக்கு ஆதரவான பத்திரிகை களே ஒன்றுக்கு ஒன்று முரணான செய்தி வெளியிட்டால் என்ன செய்ய முடியும்? தாயகம் பொய் என்ற மாதிரி சொல்ல முடியுமா? என்னவோ, இந்த தமிழர்களை பத்திரிகைகளிடமிருந்து கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்.

---


This newspaper
is published by
Georgicka communications.
A member of
Ethnic Press Council Of Canada.

Editor: George R.Ckrhushchev



P.O.Box 1031, Station "F",
Toronto, Ont, M4Y 2T7.

(416) 920 9081
...3 5738
...3216


உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.

ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் ...களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. ...களில் வரும் கருத்துகள் ...ாக இருக்க வேண்டிய ...ல்லை.

## தாயகம்
## சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள்
ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய
உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),**
**TORONTO, ONT. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets


★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ்,ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்

★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

# ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

# மாபெரும் மலிவு விற்பனை

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி,கடலுணவு, மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள்
(இடியப்பம்,தோசை,அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்
அனைத்தும் மலிவுவிலையில்

# SIVA'S TRADING CO LTD

3852 Finch Ave East (Kennedy/Finch)
Tel:(416) 321 2739

# P.S.S.T

5210 Finch Ave East #23
(Finch/Middlefield)
Tel:609-0141

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

Video Transfer (Any system) $8.99

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள்
வாடகைக்கு கிடைக்கும்